# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 26 சனிக்கிழமை (12.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 351




07

16 வருடங்கள் மூடப்பட்ட வீதி மக்களிடம்



25

மூவர் தூக்கு தடுப்பதற்கு தீர்மானம்



25

மரண அடி வாங்கிய ஆஸ்திரேலியா

# யாழ். நகர், கந்தர்மடத்தில் வியாழன் இரவு பாடசாலை அதிபர் கோரமாகப் படுகொலை!

## வெட்டுக்குத்து, அடிகாயங்களுடன் இரத்த வெள்ளத்தில் சடலம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். நகரில், பாடசாலை அதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் வெட்டியும் குத்தியும் அடித்தும் கோரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகரில் அன்னசத்திர ஒழுங்கைக்கும் அரசடி வீதிக்கும் (நல்லூர்) இடைப்பட்ட கந்தர்மடம் புகையிரத வீதிப் பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்தே இரவு 9 மணிக்குப் பின்னர் இந்தப் படுகொலை நிகழ்ந்துள்ளது.

படுகொலையுண்டவரான சிவசுப்பிரமணியம் தயாபரன் (வயது 43) யாழ். இந்துக் கல்லூரியில் முன்னர் ஆசிரியராகக் கடமையாற்றி இருந்தார். தற்போது வரணி, கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

வரணியில் பாடசாலைக் கடமையை முடித்துக்கொண்டு மீசாலையிலுள்ள வீட்டுக்குச் சென்று பின்னர் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான நகையை அன்றைய தினம் தயாபரன் கடையில் கொள்வனவு செய்திருக்கிறார்.

பக் 30





# புலிகளை ஒழிப்பதிலேயே குறியாக இருந்தது இந்தியா

## இலங்கையின் போர் உந்துதலுக்கு அதுவே முக்கிய காரணம்: நோர்வே

ஒஸ்லோ, நவம்பர் 12

பொதுமக்களின் இழப்புக்களைக் குறைக்குமாறு ஒரு சில கோரிக்கைகளையோ (2008இன் இறுதிப் பகுதியில்) விடுத்த இந்திய அரசு, இலங்கை இராணுவத்தின் வலிந்த தாக்குதல்களையும் போரையும் ஆணித்தரமாக ஆதரித்ததுடன் புலிகளை ஒழிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. அதுவே இலங்கை அரசின் போர் முனைப்புக்கு உந்துதலுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இவ்வாறு நோர்வேயில் நேற்று வெளியிடப்பட்ட, இலங்கையில் அமைதி முயற்சிகள் தோற்றதற்கான காரணங்கள் தொடர்பிலான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் ஒஸ்லோவில் நேற்று இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இலங்கை அமைதி முயற்சிகளில் நோர்வேயின் பங்குப் பணிகளை மீளாய்வு செய்யும் இந்த அறிக்கையை நோர்வே அரசின் நிதி உதவி மற்றும் பங்களிப்புடன் நோராட் நிறுவனம் மேற்கொண்டது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மத்திய மற்றும் தெற்கு ஆசியப் பிராந்தியத்துக்கான முன்னாள் துணைச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் மற்றும் நோர்வே அமைச்சரும் அமைதி முயற்சிகளின் அனுசரணையாளருமான எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் 1997 முதல் 2009 வரை நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சிகள் பற்றி இந்த அறிக்கை விரிவாக ஆராய்கின்றது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆவணங்கள், அமைச்சு மட்டப் பிரமுகர்களின் கருத்துக்கள் என்பன ஆராயப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஊடகத் தகவல்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன்

பக் 29

## 4,000 கோடி ரூபா உதவி

ஒஸ்லோ, நவம்பர் 12

இலங்கையில் 1997 முதல் 2009 வரை மேற்கொண்ட அமைதி முயற்சிகளின்போது நோர்வே நாடு 366 மில்லியன் டொலர்களை (சுமார் 4,000 கோடி ரூபா) வழங்கியுள்ளது என்று நேற்று வெளியிடப்பட்ட 202 பக்க, இலங்கையின் அமைதி முயற்சி தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணம் இலங்கை அரசுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதில் கிட்டத்தட்ட 90 மில்லியன் நோர்வேயின் நொக் பணம் முன்னாள் அமைச்சரும் கொழும்பு மாநகர சபையின் தற்போதைய எதிர்த்தரப்பு உறுப்பினருமான மிலிந்த மொறகொடவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு 70,000 மில்லியன் நொக் பணம் வழங்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்துக்கு 18,000 நொக் பணம் வழங்கப்பட்டுள்ளது.

(உ)

## மீனவர் எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை - இந்தியக்குழு விரைவில் கூடும்

கொழும்பு, நவ.12

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக இலங்கை - இந்தியக் கூட்டுக்குழு வெகுவிரைவில் கொழும்பில் கூடும். டிசெம்பரில் இக்குழுக்கூட்டத்தை நடத்துவதற்கான பொருத்தமான திகதிகளை நிர்ணயிப்பதில் தற்போது இரு தரப்புகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இரு நாடுகளுக்கும் இடையிலான குறுகிய கடல் பிராந்தியத்தில் மீன்பிடிப்பதில் இடம்பெற்றுவரும்

பக் 31

## அரசு - தமிழ்க் கூட்டமைப்பு அடுத்த கட்டப்பேச்சு 16 இல்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயம் தொடர்பில் அரசு - கூட்டமைப்புக்கு இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சு எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரச தரப்பிடம் கடந்த பல சுற்றுப் பேச்சுகளின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளுக்கு இணக்கம் காண்பது தொடர்பில் இதன்

பக் 31

# போரைப் போலவே அமைதியையும் இலங்கை வென்றெடுக்க வேண்டும்

## ஒஸ்லோவில் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

இரு தசாப்தகால போரில் வெற்றிகொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு இப்போது சமாதானத்தை வெல்லவேண்டிய தேவை இருப்பதாக வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறார் நோர்வே சுற்றாடல் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை அமைதி முயற்சிகளுக்கான முன்னாள் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம்.

இலங்கை அமைதி முயற்சிகள் குறித்துச் செய்யப்பட்ட மீளாய்வு அறிக்கை நேற்று ஒஸ்லோவில் வெளியிடப்பட்டது. நோராட் அமைப்பு இந்த அறிக்கை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. மைக்கல்ஸன் கல்வி நிறுவகத்தின் தலைவர் குன்னர் சேர்போ மற்றும் ஆபிரிக்கக் கற்கைகளுக்கான லண்டன் பாடசாலையின் தலைவர் ஜோன் தன் குட்ஹேன்ட் ஆகியோரால் நீண்ட ஆராய்வுகளுக்குப் பின்னர் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை வெளியீடு நேற்று ஒஸ்லோவில் நடைபெற்றது. இலங்கை சார்பில் கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் மிலிந்த மொறகொடவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

எரிக் சொல்ஹேய்ம் அந்த அறிக்கையை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தவே நோர்வே எப்போதும் விரும்பியது. ஆனால், பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்புகள் போரை தேர்ந்தெடுத்தபோது சிறிய நாடான நோர்வேயாலோ அல்லது வேறு நாடுகளினாலோ என்ன செய்ய முடியும்? இலங்கைத் தரப்பானது போரில் வென்றுவிட்டது. அவர்கள் இப்போது சமாதானத்தை வெல்லவேண்டும்.

இலங்கை அமைதி முயற்சிகளின்போது கிடைத்துள்ள அனுபவங்களில் நாம் நிறையக் கற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. இலங்கை அமைதி முயற்சிகளில் நோர்வே சிறந்த பங்கை ஆற்றியது. 2002


பக் 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியர்பீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229914
செய்திப்பிரிவுகள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னல் நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

## 553 பேர் படுகொலை; 1,298 வன்புணர்வுச் சம்பவங்கள்

# நாட்டில் சட்டம் ஒழுங்கு மோசமாகச் சீர்குலைவு 9 மாதங்களில் 40 ஆயிரம் குற்றச்செயல்கள்

நாட்டில் யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களிலும் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்துள்ளன. கடந்த ஒன்பது மாத காலப்பகுதியில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான குற்றச் செயல்கள் இடம் பெற்றுள்ளன.

553 மனிதப்படுகொலைகளும் 1298 வன்புணர்வுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சந்தேக நபர்களில் சிலர் அரசின் உதவியுடனேயே வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பதில் எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சி கொறடாவுமான ஜோன் அமரசிங்க நேற்று நாடாளுமன்றில் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றம் நேற்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

இந்த வேளையில் எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க சபை அனுமதியுடன் விசேட கவன ஈர்ப்பு அறிக்கை ஒன்றை விடுத்தார்.

நாட்டில் யுத்தம் முடிந்து விட்டது. சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட்டுள்ளது. சமதானம் நிலவுகின்றது என்று அரசாங்கம் கூறுகின்றது.

ஆனால் நாளுக்கு நாள் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.

அரசாங்கம் பாதாள உலகக் கும்பலை அழித்து ஒழிக்க நடவடிக்கை எடுக்கின்றது. ஆனால் அமைச்சர்களும் அதிகாரிகளும் இந்தப் பாதாள உலகக் கும்பல்களுக்கு அனுசரணையாக" ஆதரவாக இருக்கின்றனர். இதனால் பொலிஸாரால் இந்த பாதாள உலகக் கும்பலை கட்டுப்படுத்த முடியவில்லை.

இப்பொழுது இடம் பெறும் குற்றச் செயல்களில் பாதாள உலகக் கும்பலுடன் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் பிரதம ஆலோசகருமான பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரவின் கொலையுடன் சம்பந்தப்பட்ட பிரதான சந்தேக நபரை சென்னையில் இருந்து கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நேர்மையாகக் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இப்படியான இடமாற்றங்கள் வழங்கப்படுவது ஏன்? பொலிஸார் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லையே.

ஜனாதிபதிக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் தெரியாமலே பல விடயங்கள் இடம்பெறுகின்றன.

மேல் மாகாண சபை உறுப்பினரின் வீட்டில் விசேட அதிரடிப்படையினர் எந்த விதமான முன் அறிவித்தலும் இன்றி சோதனைகளை நடத்தி உள்ளனர்.

பின்னர் இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகள் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அரசியல்வாதிகளினதும் அமைச்சர்களின் அனுசரணையுடனும் செயற்படும் பாதாள உலக கும்பல் பல வழிகளிலும் சக்தி படைத்தவர்களாக இருக்கின்றனர்.

17 ஆவது திருத்தச் சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் ஆணைக்குழு முடக்கி விடப்பட்டுள்ளது.

பொலிஸார் பதவி உயர்வுகளைப் பெறுவதற்கு அரசியல் வாதிகளின் பின் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸார் செயலற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். நாட்டில் பல இடங்களில் குடும்பத்தோடு பல்வேறு கொலைகள் நடந்துள்ளன. பெருமளவில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவை போன்ற சம்பவங்களால் சமூகப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் இப்படியான செயல்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சபையில் சில உண்மைகளை முன் வைக்க விரும்புகின்றேன். அண்மையில் கிடைக்கப் பெற்ற பொலிஸ் அறிக்கையின் படி கடந்த 9 மாத காலப் பகுதியில் 553 மனிதப் படுகொலைகளும் 1298 பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களும் 4400 சூறையாடல் சம்பவங்களும் மற்றும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான குற்றச் செயல்கள் அடங்கலாக 40 ஆயிரத்துக்கும் அதிகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஜோன் அமரதுங்க வலியுறுத்தினார். (ஒ-02)

## விரிவுரைகள் நடைபெறா

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் இன்று சனிக்கிழமை கல்விமாணி விரிவுரைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் சகல தமிழ், ஆங்கில மொழி மூல கல்விமாணி மாணவர்களையும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஒன்று கூடுமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (த)

## துமிந்த சில்வா சந்தேகநபரென அடையாளம் காணப்படவில்லை

### நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, நவ.12

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. சந்தேக நபர்களின் பட்டியலில் துமிந்த சில்வாவின் பெயரும் இல்லை.

- இப்படித் தெரிவித்தார் மூத்த அமைச்சர்களுள் ஒருவரும் சபை முதல்வருமான நிமல் சிறிபால டி சில்வா.

நாடாளுமன்றில் நேற்று துமிந்த சில்வா விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சியின் பதில் தலைவர் ஜோன் அமரதுங்க எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

துமிந்த சில்வா ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது பொலிஸார் அவரிடம் வாக்குமூலம் ஒன்றைப் பெற முற்பட்டனர். ஆனால், துமிந்த சில்வா தெளிவாக வாக்குமூலமளிக்கும் நிலையில் இல்லை என அவர்கள் கூறிவிட்டனர்.

இதனால் அவரை மேலதிக சிகிச்சைக்காகவெளிநாடு கொண்டு செல்ல துமிந்த சில்வாவின் குடும்பத்தினர் கேட்டனர்.

இது ஒரு மனிதாபிமான கோரிக்கை என்பதால் அவரை மேலதிக சிகிச்சைக்காக வெளிநாடு கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டது - என்றார் அமைச்சர்.

இந்த வேளையில், ஐ.தே.க. உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வெளிநாட்டில் சிகிச்சை பெறுவதை நாம் கண்டிக்கவில்லை. எந்தவிதமான வாக்குமூலமும் பெறாத நிலையில், அவரை வெளிநாட்டுக்குக் கொண்டு செல்ல நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டதா என்று கேட்டார்.

துமிந்த சில்வாவின் பெயர் சந்தேகநபர்களின் பட்டியலில் பொலிஸாரினால் உள்ளடக்கப்படவில்லை. எனவே, நீதிமன்ற அனுமதி அவசியம் இல்லை என்று பதிலளித்தார் சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா.

## 'மகிழ்வுடன்' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ. 12

வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் எழுதிய 'மகிழ்வுடன்' என்ற நூலின் 3ஆவது பதிப்பின் அறிமுக விழா நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி ப.லக்ஷ்மன் அறிமுகவுரையையும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டச் செயலர் ஜோசப் பாலா வாழ்த்துரையையும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நயப்புரையையும் நிகழ்த்தவுள்ளனர். தமிழ் சமுதாயத்தில் மகிழ்வுடன் வாழ்தல் சாத்தியமா? என்ற தொனிப்பொருளில் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது. (ஒ)

# நிகழ்வுகள் இன்று

**பரிசளிப்பு விழா**

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் காலை 9 மணிக்கு அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்துகொள்வர். நினைவுப் பேருரையை உடுவில் அ.மி.த.க. பாடசாலை அதிபர் செ.முரளிமோகன் நிகழ்த்துவார். சட்டத்தரணி ஆ.ரகுபதி வாழ்த்துரை வழங்குவார். (ம-38)

**வலயமட்டப் போட்டிகள்**

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி வள நிலையத்தின் ஏற்பாட்டில் விசேட உதவி வேண்டி நிற்கும் மாணவர்களுக்கான வலய மட்டப் போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. காலை 8.30 மணிக்குப் பேச்சு, கட்டுரைப் போட்டிகளும், முற்பகல் 10 மணிக்கு தனி இசை, நடனப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு குழு இசை, குழு நடனப் போட்டிகளும் முற்பகல் 10 மணிக்கு நாடகம், வில்லிசைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ம-38)

**கௌரவிப்பு**

தொல்லியல் திணைக்களத்தின் யாழ். நூதனசாலை ஓய்வு நிலை உத்தியோகத்தர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் சேவை நலன் பாராட்டும் நண்பகல் 12 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.நூதனசாலைப் பொறுப்பதிகாரி து.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொல்லியல் திணைக்கள உதவி ஆணையாளர் மகிந்த வீரக்கொடி கலந்துகொள்வார். (ம-7)

**கலந்துரையாடல்**

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களை மீள புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

* * *

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையினரால் பெற்றோருக்கான விசேட கலந்துரையாடல் பி.ப.2.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. மாணவர்களது கல்வி அபிவிருத்தி மாணவர் சார்ந்த நலன்கள் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளதால் பெற்றோரை தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கா.சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (ம-207)

**புண்ணிய கிராம விழா**

கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் புத்தூர் ஈஸ்வரன் அறநெறிப்பாடசாலையினரும் இணைந்து நடத்தும் புண்ணியக்கிராம விழா காலை 9 மணிக்கு புத்தூரில் உள்ள ஈஸ்வரன் ஆலயத்தில் இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்த [illegible] தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம அதிதியாக யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்வார். (ம-319)

**நடமாடும் சேவை**

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யூ கே.குமாரசிங்க தலைமையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ம-253)

**போட்டியும் பரிசளிப்பும்**

அபாக்கஸ் பயிற்சி பெறும் மாணவர்களுக்கான மாவட்டமட்ட போட்டிப் பரீட்சையும் பரிசளிப்பு விழாவும் காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்து கொள்வார். பிற்பகல் 1.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (ம)

**தேவாலய ஆண்டு நினைவு விழா**

ஏழாலை வடக்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கிறிஸ்து அரசர் ஆலய 125 ஆவது ஆண்டு நிறைவு விழா காலை 8 மணிக்கு திருப்பலிப் பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது. அதி வணக்கத்துக்குரிய அன்னப்பா ஜெயக்குமார் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் தொடர்ந்து பொதுக் கூட்டமும் நடைபெறும். முழு நாள் நிகழ்வாக கொண்டாடப்படும் 125 ஆவது ஆண்டு விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். குடாநாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், பாடசாலை மாணவர்களிடையேயும் இந்தப் பாவனை பரவியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், கல்விச் சமூகம் சீர்குலையும் அபாய நிலையை எதிர்நோக்குகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம் என்று அரசியல்வாதிகள், அரச அதிகாரி, பொலிஸார் ஆகியோரிடம் கருத்துக் கேட்டோம்.

## மாலைநேர வகுப்புகளுக்குத் தடை வேண்டும்

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி**



பெற்றோரும் பாடசாலை ஆசிரியர்களும் பிள்ளைகளைக் கண்காணித்து வரும் நிலையிலும் இப்படியான சீர்கேடுகள் இடம்பெறுகின்றன என்றால், மாணவர்கள் மீதான அக்கறையை மேலும் அதிகரிக்கவேண்டும். அத்துடன், மாலை நேர மற்றும் மேலதிக நேர வகுப்புகளை யாழ்.மாவட்டத்தில் தடைசெய்யவேண்டும்.

ஏனென்றால், மேலதிக வகுப்புகளுக்கு வீட்டிலிருந்து செல்லும் மாணவர்கள் வகுப்புக்குச் செல்லாமல் இவ்வாறான பிழையான பல விடயங்களில் ஈடுபடுகின்றனர்.

ஆகவே, பாடசாலை நேரத்தை மாலை 4 மணி வரை நீடிக்கச்செய்து, மாணவர்களுக்கு மேலதிக நேர வகுப்புகளைப் பாடசாலையிலேயே பெற்றுக் கொடுத்தால் இவ்வாறான சமூகச் சீர்கேடுகளைத் தவிர்க்கலாம். - இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

## முறைப்பாடு கிடைத்தால் ஆராய்வோம்

**பந்துல குணவர்த்தன**



எமக்கு இந்தச் சம்பவங்கள், விடயங்கள் தொடர்பாக எந்த வித முறைப்பாடுகளோ, தகவல்களோ கிடைக்கவில்லை.

அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். பாடசாலை மாணவர்கள் போதைவஸ்துகளில் தொடர்புபட்டுள்ளனர் என்று பல பகுதிகளில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், எம்மிடம் அது தொடர்பில் முறைப்பாடுகள், தகவல்கள் கிடைத்தால் ஆராய்ந்து பார்ப்போம்.

- இப்படித் தெரிவித்தார் பந்துல குணவர்த்தன.

## மன்னாரிலும் அதிகரிப்பு

**மெக்ஸி புறக்டர்**

மொத்தமாக வடக்கில் போதைப் பொருள் பாவனை அதிகரித்திருக்கின்றது.

குறிப்பாக, யாழ்ப்பாணத்திலும் வேகமாக அதிகரித்து வருகின்ற அதே வேளை, மன்னார் மாவட்டத்திலும் இதன் பாவனை அதிகரித்து வருகின்றது. அதன்படி கடந்த இரண்டு வாரங்களில் மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் கஞ்சா மற்றும் ஹெரோயின் பாவனை தொடர்பாக 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கடற்கரைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டோரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது இந்தப் போதைப் பொருள்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப் பட்டவை என்று தெரியவந்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

- இப்படித் தெரிவித்தார் பதில் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான மெக்ஸி புறக்டர்.

## இதுகுறித்து எதுவுமே தெரியாது

**இமெல்டா சுகுமார்**



யாழ். குடாநாட்டில் ஹெரோயின் பாவனை மற்றும் அது சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல்கள் எனக்குத் தெரியாது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எனக்குத் தகவல் கிடைக்காத காரணத்தால் அதுகுறித்து எதுவும் கூறமுடியாது.

இது சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெறவேண்டும் என்றால் யாழ். பொலிஸாரையே நாடவேண்டும்.

- இப்படித் தெரிவித்தார் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார்

# ஈழத் தமிழர், மீனவர் பிரச்சினைகள் தீரும்வரை இலங்கை வரமுடியாது

### மஹிந்தவின் அழைப்பை அடியோடு நிராகரித்தார் மன்மோகன்

டில்லி, நவ. 12

இலங்கை வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாலை தீவில் நேரில் சந்தித்து விடுத்த அழைப்பை இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் அடியோடு நிராகரித்து விட்டார் எனத் தெரிய வருகிறது.

''தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவது உட்பட இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை, இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினை ஆகியவற்றுக்கு நல்லதொரு தீர்வு ஏற்படும்வரை தன்னால் இலங்கைக்கு வர இயலாது'' - என்று ஜனாதிபதி மஹிந்தவிடம் நேரில் தெரிவித்துவிட்டார் மன்மோகன்சிங்.

தெற்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் அமைப்பின் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை மாலைதீவில் தனியாகச் சந்தித்து இரு நாட்டு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

மாலைதீவில் பிரதமர் மன்மோகன் சிங், அடு அடோல் என்ற கூட்டு தீவுப் பகுதியில் உள்ள ஷாங்கிரிலா ரிசார்ட் என்ற சொகுசு விடுதியில் தங்கியுள்ளார். சார்க் நாடுகளின் ஏனைய தலைவர்களும் இதே இடத்தில் தங்கியுள்ளனர்.

இங்கு நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு முதலில் பாகிஸ்தான் பிரதமர் கிலானியுடன் நடந்த பேச்சில் இந்தியாவுக்கு 'அதிக சலுகை அளிக்கப்படும் நாடு' என்ற வர்த்தக அந்தஸ்தை வழங்கும் முடிவில் இருந்து பாகிஸ்தான் பின்வாங்காது என மன்மோகன் சிங்கிடம் கிலானி உறுதியளித்தார்.

இதன் மூலம், பாகிஸ்தானில், இந்தியப் பொருள்களுக்கு, மற்ற நாட்டுப் பொருள்களை விட குறைவான இறக்குமதி வரியே விதிக்கப்படும். இந்த அந்தஸ்தை பாகிஸ்தானுக்கு 'இந்தியா ஏற்கனவே அளித்துள்ளது.

மேலும், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே இரு நாட்டினரும் எளிதாகச் சென்று வரும் வகையில் விசா நடைமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும் என இரு நாடுகளும் பேச்சு நடத்தி வருகின்றன.

பேச்சுக்குப் பின்னர் இரு நாட்டு உறவுகளை மேம்படுத்த நடைபெற்று வரும் பேச்சில் ஏற்பட்டு உள்ள முன்னேற்றம், இரு தரப்பினருக்கும் திருப்தியாக உள்ளது. எனவே, ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவது, எதிர்த்து குற்றம் சாட்டுவது போன்றவை மறக்கப்பட வேண்டும் என மன்மோகன் சிங் கூறினார்.

இந்தச் சந்திப்பு முடிந்ததும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு குறித்து தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறியவை வருமாறு -

இந்தச் சந்திப்பின்போது இலங்கைத் தமிழர்களின் மீள்குடியமர்வு மற்றும் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் விளக்கம் கேட்டார் எனக் கூறப்படுகிறது.

இதன்போது இலங்கைக்கு வருமாறு மன்மோகன் சிங்கை மஹிந்த ராஜபக்ஷ அழைத்தார். எனினும், இலங்கைத் தமிழர்கள் மீள்குடியமர்வு விவகாரம், அதி காரப்பகிர்வு விவகாரத்தில் தீர்வு, இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது போன்ற பிரச்சினைகளில் நல்ல தீர்வு ஏற்படும்வரை இலங்கைக்கு வர இயலாது என பிரதமர் கூறிவிட்டார் எனவும் கூறப்படுகிறது. (ஒ-சி)

## 5 மருத்துவமனைகளுக்கு மருந்துக் கலவையாளர்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவின் கீழ் இயங்கும் ஐந்து வைத்திய சாலைகளில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் புதிதாக ஐந்து மருந்துக் கலவையாளர்கள் கடமையைப் பொறுப் பேற்றுள்ளார்கள்.

வரணி பிரதேச வைத்தியசாலைக்கு வி.சுடராணந்தும், அடம்பன் பிரதேச வைத்திய சாலைக்கு சி.சிறிசாந்தும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு க.தயாரூபியும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு இ.ஹேமலாவும் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு த.அனுசியாவும் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்கள்.

இவர்களுக்கான நியமனங்கள் வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-300)

## நல்லதோர் ஆரம்பம்...



நல்லூர் பிரதேச செயலகத்தில் கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது. கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பொதுமகன் ஒருவரிடம் கையளிக்கிறார்.

# இலங்கையின் எந்தப் பாகத்திலும் பிறப்புச் சான்றிதழ் பெறும் வசதி

யாழ்ப்பாணம், நவ.13

அடுத்த ஆண்டிலிருந்து இலங்கையின் எப்பாகத்தில் பிறந்தவரானாலும் இன்னுமொரு பகுதியில் உள்ள பிரதேச செயலகத்தில் தமது பிறப்புச் சான்றி தழைப் பெறமுடியும் எனப் பிரதிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் தற்சமயம் இலங்கை அரச வலைப்பின் ஊடான வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் செயற்படுவதால் அப்பகுதிக ளில் உள்ளவர்களுக்கு இந்த வசதி கிடைத்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இந்த திட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை அதற்கான வேலைகள் தற்சமயம் இடம்பெற்றுவருகின்றன.

இங்குள்ள பிரதேச செயலகங்களில் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால் பொதுமக்கள் எங்கு பிறந்திருந்தாலும் தற்சமயம் தான் தங்கியுள்ள பிரதேசத்தில் தமது பிறப்புச் சான்றிதழைப் பெறக் கூடியதாக இருக்கும் என்றார்.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் பிறப்புச் சான்றிதழை கணினி மயப்படுத்தும் செயற்பாடு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதிப்பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் இதனை ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டம் மேலும் அபிவிருத்தியடையும் போது கடந்த 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிறப்புச் சான்றிதழ்களையும் பெறக்கூடியதாக இருக்கும். இங்குள்ள பதினேழு பிரதேச செயலகங்களிலும் இத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது என்றும் பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் குறிப்பிட்டார். யாழ்.மாவட்ட பதிவாளர் என்.பிரபாகரன் உட்பட பதிவாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை பிறப்புச் சான்றிதழ்களைக் கணினிமயப்படுத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை வேலணைப் பிரதேச செயலகத்திலும் ஆரம்பித்து வைக்கப்படும் என பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார். நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், மருதங்கேணிப் பகுதிகளில் தற்போது வசதிக் குறைவுகள் உள்ளதாகவும் எனினும் விரைவில் அப்பகுதி மக்களுக்கும் இதுபோன்ற சேவை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர் அருட்தந்தை

## அந்திரேஸ்பிள்ளை சகாயதாசன் அடிகள்

அன்பும் அரவணைப்பும்
ஆண்டவரின் அருள் நிறைந்த ஆசியும்
பண்பும் பழகுவதற்கு இனிய குணமும்
கல்வியும் கண்ணியமும்
கடமை மிகுந்த உணர்வும்
நிறைவுறப் பெற்ற எங்கள்
அருட் தந்தையே - உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கனடா வாழ்
யாழ்.திருநெல்வேலி
சவேரியார் ஆலயப் பங்கு மக்கள்

தகவல்:
கலா : 4162780413

(சி-5719)(1,6,7)

# மரண அறிவித்தல்

## துரையப்பா ஜெயரட்ணம்



கிளாலி வீதி, எழுது மட்டு வாழைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராய், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டரும், திடீர் மரண விசாரணை அதிகாரியும், அகில இலங்கை சமாதான நீதிவானும், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாகாண நிறைவேற்று உத்தியோகத்தரும், அகல் பாதுகாப்பு நிறைவேற்று அதிகாரியுமான துரையப்பா ஜெயரட்ணம் கடந்த (06.11.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அகல்யா (ஜேர்மனி), சுகன்ஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தை யும், காலஞ்சென்றவர்களான லீலாவதி, சோதிமலர் மற்றும் புஸ்பமலர், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் இந்திராணி, இறஞ்சிதமலர் (கனடா), தவறட்ணம் (உப-அஞ்சலகம், எழுதுமட்டு வாழ்), மகேஸ்வரி (சுவிஸ்), திரவியறட்ணம் (அஞ்சலகம், பளை), நந்தினி (இத்தாலி), டெய்சிறாணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நவறட்ணராஜா (ஜேர்மனி), ரகுநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சயந்தன், சௌமியா, சாயித்தியா, ரபீஸன், சாருஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2011) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை, கட்டைப்பிராய்,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/5725)(3,6,7)

### சம்பூர்-மூதூர் வீதி திறப்பு

கொழும்பு, நவ.,12

சண்டை நடைபெற்ற காலத்தில் பாதுகாப்புக்காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த சம்பூர் - மூதூர் வீதி 26 வருடங்களின் பின்னர் நேற்று மீண்டும் திறந்துவிடப்பட்டது. சிவில் பாதுகாப்புக் குழுக்கள் இந்த வீதியை மீளத் திறப்பதற்குப் பெரும் பங்களிப்புச் செய்திருந்தனர்.

### சடலம் மீட்பு

கொழும்பு, நவ.,12

கொஸ்கொட - மஹபெலென கடலில் நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்று காணாமல்போன மூவரில் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

ஹர்ஸ பியூமால் (வயது - 23) என்பவரின் சடலமே மேற்படி மீட்கப்பட்டு நாகொட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி நடனத்துறை
விரிவுரையாளர்
திருமதி தயாபரன் சுபாஷினி
அவர்களின் அன்புக் கணவர்
**எஸ். தயாபரன்**
[ அதிபர் - யாழ்/கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை - வரணி, யாழ்.மத்திய கல்லூரி இணைப்பாளர் கல்விமாணிக் கற்கை நெறி NIE ]
அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு துயரத்தில் ஆழ்ந்துள்ள அவர்களின் குடும்பத்துடன் எமது துயரையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

கல்லூரிச் சமூகம், யாழ்ப்பாணம்
தேசியக் கல்வியியற்கல்லூரி,
கோப்பாய்

(10335)(3,6,7)

# மரண அறிவித்தல்



**பஸ்தியாம்பிள்ளை ஜோசெப்பீற்றர்**

கரம்பனைப் பிறப்பிடமாகவும், மாதகலில் வசித்தவரும், தற்பொழுது யாழ்ப்பாணத் தில் வசித்து வந்தவருமான பஸ்தியாம் பிள்ளை ஜோசெப் பீற்றர் 10.11.2011 இறை பதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை - மேரிஜோசெப்பின் தம்பரியரின் அன்பு மகனும் மனோகரியின் அருமைக் கணவரும், மாட்டீன் - ஸ்ரெலா தம்பதியரின் அன்பு மருமகனும், றமேஸ், பிறகாஸ், ராணி ஆயியோரின் பாசமிகு தந்தையும், நிராணி, கிரிசாந்தி ஆகியோரின் மாமனாரும், ஜனுஸ்கா, ஜெரோன் கிரிஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனும், அருள் நாயகம் (கனடா), விக்றரின் (ஜெயமணி, கனடா), மரியநாயகம் (கொழும்பு), விக்ரரோஸ் (ராஜேஸ், கனடா), றெஜீனா( பேபி, அவுஸ்திரேலியா), அமலா கனடா) ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மனோகரன் (ஜேர்மனி), சந்திரா (குஞ்சு, அவுஸ்திரேலியா), சந்திரன் (கட்டார்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (14.11.2011) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையிலி நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.141, 4 ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(1028:)(6,7,3)



# வெளிவந்து விட்டது

சகல விதமான கல்ண்டர்கள், விளம்பரப் படக் கலண்டர்கள் 150 இற்கும் மேற் பட்ட டிசைன்கள், மெய்கண்டான், லீலா மற்றும் டயறி வகைகள் (15 வகை) நத் தார், புதுவருட வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அன்னை புத்தக சாலை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9881, 021 2220865

(C/57874) (6-7-3)

# றோஸ் பூக்கள்

கிருஷ்ணா பாமில் வேப்பிலை மருந்தின் மூலம் ஒட்டி உண்டாக்கிய றோஸ் கன்றுகள் விற்பனைக் குண்டு. வருடம் முழுவதும் பூக்கள் விற்கப்படும். வேப்பிலை மருந்தை தெளிப்பதால் வெயில் காலத்தில் செழிப்பாக வளரும் கன்றுகள் வளர்க்கும் முறைகள், வேப்பிலை மருந்தும் கொடுக்கப்படும். இவை வீதி ஓரங்களில் விற்பனையாகும் தரக்குறைவான கன்றுகள் அல்ல. வந்து பாருங்கள்.

திருநெல்வேலி சிவன் கோயில் கிழக்கு
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி. (10328) (6-7-3)



# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு சோமசுந்தரம்

[முன்னாள் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்- காரைநகர், முன்னாள் கிராம சபைத் தலைவர் - காரைநகர் வடக்கு, முன்னாள் தலைவர் - MPCS)



காரைநகர் சம்பந்தர் கண்டியைப் பிறப்பிடமாகவும் வட்டு கிழக்கு, சித்தங்கேணி 21 ஆம் கட்டை, புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சோமசுந்தரம் 10.11.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் புஸ்பநாயகம் (ஆசிரியர் வளவாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், மருதனார்மடம்), செந்தூரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாலினியின் (உதவி முகாமையாளர், பல்கலைக்கழக கிளை மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம், சொக்கலிங்கம் மற்றும் குமாரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான துரைராசா, பொன்னம்மா, செல்லத்துரை, சிவப்பிரகாசம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் திருமதி கமலாதேவி மகிழ்ராசாவின் (வட்டு இந்துக் கல்லூரி ஆ.பாடசாலை பகுதி தலைவர்) சித்தப்பாவும் மகிழ்ராசாவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு கிழக்கு,
21 ஆம் கட்டை, புதுறோட்,
சித்தங்கேணி.

தகவல்:
சோ.புஸ்பநாயகம்
(மகன்)

(10332)(4-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாழ்வியலில் புதுவடிவில் தலைநீட்டும் ஆபத்து...!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெற்றோர்களை, ஒட்டு மொத்த மக்களையும் அதிர்ச்சிக்குள்ளும் அதேவேளை பெரும் கவலைக்குள்ளும் வீழ்த்தியுள்ள புதிய ஆபத்துக் குறித்துத் தகவல்கள் வெளியாகி உள்ளன. யாழ். நகரப் பாடசாலைகளில் பயிலும் சாதாரண தர, உயர்தர மாணவர்கள் ஹெரோயின் என்ற பயங்கரப் போதைப் பொருளை உட்கொள்ளும் பழக்கத்துக்கு ஆளாகிவிட்டார்கள், அடிமைகளாகிவிட்டார்கள் என்பதே குடாநாட்டைச் சூழ்ந்துள்ள ஆகப்பிந்திய பேராபத்தாகும்!

இது வெறும் வதந்திகளின் அடிப்படைகளில் எழுந்ததோ, அன்றி, பாடசாலை மாணவர்களிடம் குறை காணவேண்டும் என்ற நோக்குடன் கிளப்பப்பட்டதோ அல்ல. இது போன்ற குற்றச்செயல்களைக் கண்டறிவதிலும், கையாள்வதிலும் அனுபவமுள்ள பொலிஸ் தரப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒன்றாகும்.

யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளில் - நகரப்புறப் பாடசாலைகளில் - ஆண்கள் பாடசாலைகளில் பயிலும் ஜீ.சி.ஈ. சாதாரண தர, உயர்தர மாணவர்கள் உடல், மன நலங்களைக் கெடுக்கும் கொடிய ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமைகளாகிவிட்டார்கள் என்பது, குடாநாட்டின், யாழ்ப்பாண மக்களின் மிகப் பெரும் சொத்தான கல்வியை அழிப்பதற்கு இடப்படும் அத்திபாரம் என்பதில் சந்தேகம் இல்லை.

போர் முடிந்து விட்டது, சமாதானம் மலர்ந்துவிட்டது என்ற சூழ்நிலையில் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் தமிழ் மக்களின் வாழ்வியலை மட்டுமன்றி, சமூகவியலை, கல்வியியலை, தொல்லியலை மற்றும் இருப்புகளைச் சீர்கெடுத்தி விடுவதற்கான முயற்சிகளும் முனைப்புகளும் மறைவில், பல புதிய பரிமாணங்களில், வெவ்வேறு வடிவங்களில் முளைத்து வருகின்றன.

இளமையில் கல்வி எவ்வாறு கல்மேல் எழுத்துப் போன்று அல்லது பசுமரத்தாணி போன்று மாணவன் மனதில் பதியுமோ, அதேபோன்று ஒவ்வாத தீய பழக்கங்களும் அவனை விரைந்து இழுத்துப் படுகுழியில் வீழ்த்தும். அத்தோடு, சேலையில் கொழுவிய முள் அதனைக் கிழிப்பது போன்று, மாணவனைப் பற்றிக் கொள்ளும் போதைப்பொருள் பாவனை அவனது வாழ்வை அடிவரை வேரறுத்து விடும். மற்றெல்லாத் தீய பழக்கங்களையும் விட, விரைவில், குறுகிய காலத்தில் ஒருவனைக் கெடுவினையாளனாக மாற்றிவிடுவதோடு மட்டுமன்றி, அவனது சுயவாழ்வும் சூனியமாகிவிடும்.

இத்தகைய ஒரு பயங்கர நிலை, யாழ்ப்பாண மக்களின் சகல வாழ்வியல் அங்கங்களையும் நிர்மூலமாக்கிவிடும். இன்றைய மாணவர்களும் இளைஞர்களும் எதிர்காலப் பிரசைகள். அவர்களைப் பிஞ்சில் பல்வேறு வகைகளாலும் கொய்து விடுவதற்கான ஆரம்பகட்டம், ஹெரோயின் என்ற பயங்கர போதைப் பொருள் பரம்பல் முயற்சி.

இதனை எமது கல்விச் சமூகத்தினர், சமூகவியலாளர்கள், பெற்றோர்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்த மக்களும் அக்கறை செலுத்தித் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் இல்லாத பலவகையான ஒவ்வாத, வேரறுக்கும் பழக்க வழக்கங்கள் பல்கிப் பெருகி வருகின்றன. அவற்றில் ஒன்றே போதைப் பொருள் பாவனை. இளம் சமூகம், மாணவர் சமூகம் அதற்கு அடிமையாகிவிட்டால் தடுத்து நிறுத்துவதும் பாதுகாப்பதும் மிகக் கடினமாகிவிடும்.

குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் போதைப் பொருள் பயன்படுத்துவதால் உண்டாகும் தீமைகளை விளக்கி, அறிவுறுத்த வேண்டும். அத்தோடு கிராமம் தோறும் மாணவர்களுக்கு மட்டுமன்றி தாய்மார் உட்பட பெற்றோருக்கும் விழிப்புணர்வை உண்டாக்குவது மிக அவசியமும் அவசரமானதுமாகும்.

மாணவர்களை நல்வழிப்படுத்துவது பெற்றோர்களின் பொறுப்பே என்ற எண்ணத்தில் இக்கால ஆசிரியர்கள் செயற்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கும் தமது மாணவர்களை நல்வழிப்படுத்துவதில், அவர்களை முன்னேற்றுவதற்கு ஆற்றுப்படுத்துவதில் சம பங்குண்டு. மாதா, பிதா, குரு தெய்வம் என்ற முதுமொழி தமிழர் வாழ்வியலில் ஆசிரியர்களுக்குரிய பொறுப்பு பொதிந்திருப்பதைப் புலப்படுத்துகிறது.

புதிதாகத் தலையெடுத்துள்ள ஹெரோயின் என்ற நஞ்சுப் பாவனை மாணவர் மத்தியில் பரவவிடாது காப்பதில் பாடசாலைகளோடு சனசமூக நிலையங்கள், ஆலயத் தொண்டர் சபைகள், சமய மன்றங்கள் மற்றும் மக்கள் நலன் நாடி இயங்கும் சகல அமைப்புகளும் கிராம மட்டத்தில் ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் தவிர்க்க முடியாத தேவை. இப்போதே, உடனடியாக விழிப்புணர்வு ஏற்பாடுகள் மிக அவசியம்.

இதனைக் கருத்திற்கொண்டு செயற்படாவிடில், ஊர் தோறும் இத்தகைய அமைப்புகள், சங்கங்கள் இயங்குவதால் பயனில்லை. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வது போலாகும். மாணவர்களே எமது இனத்தின் எதிர்காலம். அவர்களை உரிய திசைக்கு ஆற்றுப்படுத்துவது இங்கு வாழும் சகல தரப்பினரதும் தட்டிக்கழிக்கக் கூடாத கடமையாகும்.

குடாநாட்டு மக்களின் வாழ்வியல் நடைமுறைகளும் பாரம்பரியமும் காலத்துக்குக் காலம் புதிய வடிவங்களைக் கண்டன. அவை சமூகப் பரிணாம வளர்ச்சிக்கு இடையூறு விளைவிக்காது பார்த்துக் கொள்வது அந்தந்தக் காலங்களின் விசேட தேவையாக, தன்மையாகக் கொள்ளப்பட்டன. அவ்வாறிருந்த போதிலும் புது வடிவங்களும் மாறுதல்களும் கட்டுக்கோப்பையும், பழக்க வழக்கங்களில் இறுக்கத்தையும் கொண்டிருந்தன. அது ஒரு சிறப்பியல்பு எனலாம்.

அத்தகைய சிறப்பியல்புகளை உடைத்து தமிழர்களை கீழே விழுத்த எடுக்கப்படும் மறைமுகமான சூழ்ச்சிகளுக்குத் துணை போகாமல் எமது இளைய சமுதாயத்தை வழி நடத்தாவிடில், -

எங்கள் இருப்புக்குக் குழிபறிக்க நாமே வழிவிட்டவர்களாகி விடுவோம்.

# ஆசியாவின் இளம் உளநல சேவைக்கான சர்வதேச விருது டாக்டர் யூடி ரமேஸுக்கு

## கல்முனை வைத்திசாலை உளநலப்பிரிவுக்கும் விருது



கல்முனை,நவ.12

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை உளநலப் பிரிவு கல்முனைப் பிராந்தியத்தில் உள நலசேவையை மேம்படுத்துவதில் நீண்டகாலமாகச் சிறந்த சேவையினை வழங்கி வருகின்றது.

தீவிர சிகிச்சைப்பிரிவு, முதியோர் உளநலப்பிரிவு, பெண்கள் சிறுவர் உளநலப் பிரிவு, பால்நிலை வன்முறை உதவி தேவைப்படுவோர் பிரிவு, மது போதைப்பொருள் பாவனையாளர் சிகிச்சைப்பிரிவு, புனர் வாழ்வு, தொழிற் பயிற்சிப் பகுதி என பல்வேறு உப பிரிவுகளைக் கொண்டதாக இந்த உளநலப் பிரிவு இயங்குகின்றது.

யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு உளநலப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இந்த உளநலப்பிரிவின் சேவை கடந்த காலங்களில் மிகப் பயனுள்ளதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு கிளிநொச்சியைச் சேர்ந்தவரும், உதயன் ஊடகவியலாளராக முன்னர் கடமையாற்றியவருமான டாக்டர் யூடி ரமேஸ் ஜெயக்குமார் இந்த உளநலப் பிரிவின் பொறுப்பு உள நல வைத்தியராகவும் மற்றும் சிரேஷ்ட உளநல வைத்தியயர் டாக்டர் திருமதி குமுதினி துரைரெட்ணம், டாக்டர் ருவன் கிருஷாந்த, டாக்டர் பிரியம் பதா ஆகியோர் சக வைத்திய அதிகாரிகளாகவும் சிறந்த பணியாற்றி வருகின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.எஸ். இப்றாலெவ்வை, வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ். எம். ஜாபிர் ஆகியோர் அளித்து வரும் ஆக்கமும் ஊக்கமும் இப் பிரிவின் நற்சேவைக்கும் வளர்ச்சிக்கும் உந்து சக்தியாகத் திகழ்கின்றது.

மின் வலு சிகிச்சை தொடக்கம் உளநலம் பாதிக்கப்பட்டோருக்கான சகல சேவைகளும் டாக்டர் யூடிரமேஸ் ஜெயக்குமாரின் நேரடிக் கண்காணிப்பில் இடம் பெற்று வருகின்றன.

அதேவேளை கடந்த மூன்று வருட காலமாக எந்த நோயாளியும் இப் பிரிவிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லேரியா, அங்கொடை வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படவில்லையென்பதும் இப்பிரிவின் சேவையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும்.

30 நோயாளர் படுக்கைவசதிகளுடன் இயங்கும் இந்த உளநலப் பிரிவில் வெளி மாவட்ட நோயாளர்களின் வருகையும் தற்பொழுது அதிகரித்துள்ளது.

2000 ஆம் ஆண்டு உளநல மருத்துவ நிபுணர் டாக்டர் கணேஷின் அனுசரணையுடன் மாதாந்த உளநல சிகிச்சை நிலையமாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட இப் பிரிவு 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் உளநல வைத்தியர் டாக்டர் யூடிரமேஸ் ஜெயக்குமார் பொறுப்பு வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரு வளர்ச்சியுடன் சேவைகளையும் வியாபித்தது.

இன்று இப் பிரிவின் அளப்பரிய சேவை காரணமாகச் சர்வதேச விருதும் கிடைக்கப் பெற்று பெருமை பெற்றுள்ளது.

இதன்படி சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும்,யுத்தத்தாலும் உளநிலை பாதிக்கப்பட்டவர்களின் உள நிலையினைக் கட்டியெழுப்பி மீள இயல்பு நிலைக்குத் திரும்புவதில் பங்காற்றியமையைக் கௌரவித்து ஆசிய உளநல நிபுணர்கள் அமைப்பு 2011 இன் சிறந்த உளநல தலைமைத்துவ சேவைக்கான விருதினை கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை உளநலப்பிரிவுக்கு வழங்கி கௌரவித்துள்ளது.

மேற்படி அமைப்பின் மூன்றாவது உலக மாநாடு ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இடம் பெற்றபோது உளநல சிறப்பு வைத்தியர் டாக்டர் யூடிரமேஸ் ஜெயக்குமார் இந்த விருதினைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் ஆசியாவின் இளம் உள நல சேவைக்கான விருதும் டாக்டர் யூடி ரமேஷ் ஜெயக்குமாருக்கு அங்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவனாக இருந்த வேளை உதயனின் கிளிநொச்சிப் பிரதேச ஊடகவியலாளராகப் பணியாற்றியவர். (த-30)

# தபால் மா அதிபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நீக்கப்படாததைக் கண்டித்து திங்கள் போராட்டம்

## தொழிற்சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, நவ.12

தபால் மா அதிபர் எம்.கே. திஸநாயக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நீக்கப்படாததைக் கண்டித்து நாளை மறுதினம் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை திணைக்களத்தின் முன்றலில் தொழில் பகிஷ்கரிப்புபேராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது என்று கொழும்பு தொழிற் சங்கத்தின் பொருளாளர் பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதான தபால் அலுவலகத்தில் இடம்பெற்ற யாழ்.கிளை தபால் திணைக்கள தொலைத் தொடர்பு சேவைச் சங்கத்தின் 9 ஆவது வருடாந்தபொதுக் கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தபால் மா அதிபருக்கு எதிராக 67 குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன. அக்குற்றச்சாட்டுகளை ஒழுக்காற்று நடவடிக்கை குழுவால் தீர்க்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 5 குற்றச்சாட்டுகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. இதற்கான தீர்வு 3 மாதகால [illegible] ணப்படுகிறது.

தபால் உத்தியோகத்தர்கள், அதிபர்களை காரணங்கள் இன்றி இடமாற்றம் செய்தல், காசுக்கட்டளை அலுவலகத்தில் 300 உத்தியோகத்தர்கள் பணியாற்றி வந்தனர். அவர்களை நிறுத்தி தற்போது 10 உத்தியோகத்தர்களே கடமையாற்றி வருகின்றனர். ஆளணிகளைக் குறைத்துள்ளார். தனியார் நிறுவனங்களைப்போன்று தபால் நிலையங்களை மாற்றி அமைத்தல்,சம்பள உயர்வு, 108 முதற்தர உத்தியோகத்தர்களுக்கு இன்னமும் உயர்பதவிகள் வழங்கப்படாமை போன்ற குற்றச்சாட்டுகள் தபால் மா அதிபருக்க எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

இக் குற்றங்கள் தொடர்பாகத் தபால் அமைச்சுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளோம். இவற்றுக்கான தீர்வுகள் தாய்ச் சங்கத்தின் கூட்டுமுயற்சியால் தீர்க்கப்படும் என்று எண்ணுகிறோம்.

67 குற்றச்சாட்டுகளில் 27 குற்றச் சாட்டுக்கள் செயலாளருக்கு எதிரானவை என்றார்.

இந்தப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் அனைத்து தபால் ஊழியர்களையும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கெண்டார்.

இந்நிகழ்வில்,யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர், க.ஜெபரட்ணம், தாய் சங்கத்தின் தலைவர் வில்வராசசிங்கம், உப தலைவர் மரியதரன், செயலாளர் அ.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோலர் மூலம் தொழில் செய்வோரால் சிறு தொழிலாளர்கள் பெரும் பாதிப்பு

## வலைகள் அறுத்து நாசமாக்கப்படுவதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.11

குருநகர்ப் பகுதியிலுள்ள றோலர் படகு பயன்படுத்தும் தொழிலாளர்களால் குடாநாட்டுக் கடலில் தொழில் செய்யும் சிறு தொழிலாளர்களுக்கு அதிக இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறு தொழிலாளி ஒருவர் அறுத்து நாசமாக்கப்பட்ட அறக்கொட்டியான் வலையுடன் மாவட்ட கடற்தொழில் திணைக்களத்துக்குச் சென்று உதவிப்பணிப்பாளர் எஸ். ரவீந்திரனின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குருநகர்ப்பகுதியைச் சேர்ந்த கடற்தொழிலாளி ஜேசுதாஸன் என்பவர் மண்டைதீவுக் கடலில் வலையை வீசியிருந்தபோதே றோலர் படகினால் வலை அறுத்து நாசமாக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவுக் கடல் கரையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வலை வீசியிருந்த போதே செவ்வாய் இரவு வலை அறுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அறுக்கப்பட்ட வலையின் பெறுமதி சுமார் 15 ஆயிரம் ரூபா எனவும் அந்தத் தொழிலாளி குறிப்பிட்டுள்ளார்.

தினமும் தொழிலாளர்களின் வலைகள் றோலர் படகுத் தொழிலால் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக குருநகரிலுள்ள சிறு தொழிலாளர்களிடம் கேட்டபோது:

குருநகரில் 130 இற்கும் மேற்பட்ட றோலர் படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன. தொடர்ந்தும் றோலர் படகு கொள்வனவுகள் இடம்பெற்று வருகின்றன. எமது பகுதியில் சிறு தொழில் முறையை நம்பி ஆயிரத்து 500 இற்கும் அதிகமான சிறு தொழிலாளர்கள் உள்ளனர்.

றோலர் படகுத் தொழிலால் சிறு தொழிலாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர்.

குருநகர் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத்திலுள்ளவர்களில் அதிகமானவர்கள் றோலர் படகு தொழில் செய்பவர்கள். அவர்களால் எமது நலன்கள் கருத்தில் எடுக்கப்படவில்லை. எனவே அந்தச் சங்கத்திலிருந்து விலகிப் புதிய சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்- என்றனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஆர்.ரவீந்திரனிடம் கேட்டபோது,

குருநகர் பகுதியில் றோலர் படகுத் தொழிலைக் கட்டுப்படுத்தப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம். கடற்படையினரின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். எனினும் கட்டுப்படுத்த முடியவில்லை- என்றார். (ம-14)

# பாகுபாடுகாட்டும் கிராம சேவகர்களுக்கு பணி நிறுத்தம் அல்லது கட்டாய ஓய்வு

யாழ்ப்பாணம், நவ. 12

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், விதவைகள், அங்கவீனர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அடிப்படையில் கிராம சேவகர்கள் சேவையாற்றாவிட்டால் அது தொடர்பாகக் கவனத்துக்கு கொண்டு வந்து நிருபிக்கப்பட்டால் குறித்த கிராம சேவகர் பணி இடை நிறுத்தம் அல்லது கட்டாய ஓய்வில் அனுப்பப்படுவார். இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- கிராம சேவகர்கள் மக்களிடம் பாகுபாடாகச் செயற்படுவதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதில் சமூகத்துடன் இணைந்து வாழவேண்டிய முன்னாள் போராளிகள் மீதும் கிராம சேவகர்கள் பாகுபாடு காட்டுகின்றனர்.

முன்னாள் போராளிகள் என்ற காரணத்தால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவகர் ஒருவரினால் வீட்டுத் திட்டம் தொடர்பாக எனக்கு நேரடியாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இது தொடர்பாக ஆராய்ந்து தற்போது ஒரு கிராம சேவகரை கட்டாய ஓய்வில் அனுப்புமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு சிபார்சு செய்து அனுப்பியுள்ளேன்.

எனவே, இது தொடர்பில் எனது கவனத்துக்கு யாரால் கொண்டு வரப்பட்டாலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றம் நிருபணமானால் நிச்சயமாக கிராம சேவகர்கள் தண்டிக்கப்படுவார்கள். அவர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள் அல்லது கட்டாய ஓய்வளிக்கப்படுவார்கள். - என்றார். (ம-15)

# யாழ். மாவட்டத்தில் 7,820 பேர் மாற்றுவலுவுள்ளோராக உள்ளனர்

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 7 ஆயிரத்து 820 பேர் மாற்று வலுவுடையவர்களாக இனங் காணப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் மாற்று வலுவுள்ளோர் தொடர்பான குடும்ப விவரத் திரட்டை வெளியிட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு ஆயிரத்து 231 மாற்று வலுவுடையோரைக் கொண்டுள்ள பிரதேசமாக இனங் காணப்பட்டுள்ளது. இது அதி கூடிய மாற்றுவலுவுடையோரைக் கொண்டுள்ள பிரதேசமாகும்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு 127 பேருடன் ஆகக் குறைந்த மாற்றுவலுவுள்ளோரைக் கொண்ட பிரிவாக இனங்காணப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுவதிலும் 18 வயதுக்குக் குறைந்த மாற்றுவலுவுள்ளோராக 829 பேர் இனங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 873 பேர் பிறப்பிலேயே மாற்றுவலுவுள்ளோராக உள்ளனர். 2 ஆயிரத்து 603 பேர் நோய் காரணமாகவும் 829 பேர் விபத்தாலும் ஆயிரத்து 515 பேர் வன்செயல்களாலும் இவ்வாறான நிலைக்கு ஆளாகியுள்ளனர். மாற்றுவலுவுக்கான காரணங்களில் கால் பாதிப்பு 2 ஆயிரத்து 401, கை பாதிப்பு 619, கண் 939, செவிமடுத்தல் பாதிப்பு 436, பேச்சுத்திறன் பாதிப்பு 825 ஏனைய வகைப் பாதிப்புக்களாக 2 ஆயிரத்து 600 பேரும் இனங்காணப்பட்டுள்ளன.

இவர்களில் வறிய குடும்பங்களைச் சேர்ந்தோரில் காணி, வீடு, மின்சாரம், குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற வசதிகள் தேவைப்படுவோரும் இனங் காணப்பட்டுள்ளனர்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு யுனிசெவ் நிறுவனம் வழங்கிய நிதி அனுசரணையின் மூலம் இக் கணக்கெடுப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. பிரதேச செயலக சமூக சேவை அதிகாரிகள், கிராம மட்டத் தொண்டர்கள் மூலமாக படிவங்களைப் பூரணப்படுத்தி இந்தக் கணக்கெடுப்பைச் செய்துள்ளனர். (ம- 121)

# உடற்கல்வி விஞ்ஞான மாணவர்கள் வேலைவாய்ப்பு வழங்கக் கோரிக்கை

## சரவணபவன் எம்.பியுடன் கலந்துரையாடல்

வலி.வடக்கு,நவ.12

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்கள் வேலைவாய்ப்புகள் பெற்றுத்தருமாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்கள் இரண்டு வருடகால டிப்ளோமா பயிற்சி நெறியை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இப்பயிற்சி நெறிக்கான உரிய அங்கீகாரம், வேலைவாய்ப்புகளில் வழங்கப்படாதமை குறித்தும் அவர்கள் சுட்டிக் காட்டினர். அத்துடன் இது பட்டப்படிப்பு பாடநெறியாக அமையாதது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தநிலையில் காலத்துக்கு காலம் உடற்கல்வி மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்புகளில் ஈடுபடுவதும் பின்னர் பல்கலைக் கழக நிர்வாகம் காலத்துக்குக் காலம் வாக்குறுதிகளை வழங்குவதும் மாணவர்கள் வகுப்புகளுக்கு செல்வதும் என்ற நிலைமையே இன்றுவரை காணப்படுகின்றது.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுடன் கலந்துரையாடிய உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்கள் தமது பாடநெறியைபட்டப்படிப்புக்கான கல்வி நெறியாக மாற்ற நடவடிக்கையெடுக்குமாறும் வேலை வாய்ப்புகளுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக உயர்கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்வதாகவும் நாடாளுமன்றத்தில் இது பற்றி எடுத்துக் கூறி உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மாணவர் பிரதிநிதிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (ம-86)

# குடிதண்ணீர் விநியோகம் விஸ்தரிப்பு

சுன்னாகத்திலிருந்து கட்டுடையூடாக நவாலிக்கு வரும் குழாய் மூலமான குடிதண்ணீர் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை 10 குடும்பங்களுக்கான இணைப்பை யாழ். தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் மாவட்டப் பொறியியலாளர் எந்திரி எஸ். செல்வகுமார் வழங்கினார்.

தற்போது சுன்னாகம் - கந்தரோடை- சங்கு வேலி கட்டுடையூடாக நவாலி கொத்துக் கட்டியூடாக வரும் குடிதண்ணீர் பல வலைப்பின்னலாக இணைக்கப்பட்டு சமுர்த்திப் பயனாளிகளுக்கு 6 ஆயிரம் ரூபா செலவிலும் ஏனைய பயனாளிகளுக்கு 17 ஆயிரம் ரூபா செலவிலும் தனித்தனி இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அடுத்த வாரம் மேலும் 5 குடும்பங்களுக்கு நவாலி தெற்கு - கொத்துக்கட்டியில் வீதியில் உள்ள ச.ச. நிலையத்துக்கும் சிறுவர் நிதியத்துக்கும் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ம- 302)

# 10 வேலைத் திட்டங்களுக்கு 1,569 மில்லியன்

யாழ்ப்பாணம், நவ.12

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 10 வேலைத் திட்டங்களுக்கு நடப்பாண்டுக்கு ஆயிரத்து 569 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வீதி மற்றும் பாலங்கள் திருத் துவதற்கு 460 மில்லியன் ரூபாவும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 373 மில்லியன் ரூபாவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்புக்கு 62 மில்லியன் ரூபாவும், கமநல சேவை நிலையங்களுக்கு 26 மில்லியன் ரூபாவும் பாடசாலைக் கட்டங்களின் புனர்நிர்மாணத்துக்கு 242 மில்லியன் ரூபாவும், சுகாதார நிலையங்கள் புனரமைப்புக்கு 87 மில்லியன் ரூபாவும், பொது நிர்வாகக் கட்டடங்கள் புனரமைப்புக்கு 121 மில்லியன் ரூபாவும் பொதுச்சந்தைகள் புனரமைப்புக்கு 95 மில்லியன் ரூபாவும் ஏனைய பொதுக்கட்டடங்கள் புனரமைப்புக்கு 58 மில்லியன் ரூபாவும், உயர் பாதுகாப்பு வலயம் பகுதிகளில் காடு துப்புரவுக்கு 40 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட தற்போது மேலதிகமாக இடைக்காடு, வளலாய் போன்ற பகுதிகள் விடுவிக்கப்பட உள்ளதைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளின் துப்புரவுக்கு 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (த- 15)

# ஒளிராத மின்குமிழ்களுக்கு கட்டணம் வலி.தெற்கு பிரதேசசபை வழங்குகிறது

வலி.தெற்குப் பிரதேச சபையால் எரியாத மின்குமிழ்களுக்கு மாதாந்தம் பராமரிப்புக் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் அவசர அவசரமாக வலி தெற்கு பிரதேச சபையால் இணுவிலில் இருந்து சுன்னாகம் வரை காங்கேசன் துறை வீதியில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன.

இலங்கை மின்சாரசபை உரிய மின்குமிழ்களை வீதிக்குப் பொருத்தியதுடன் அதனை பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு மாதாந்தக் கட்டணமாக சுமார் இருபத்தெட்டாயிரம் ரூபா பெற்றும் வருகின்றது.

கடந்த இரண்டு மாதகாலமாக இணுவிலில் இருந்து சுன்னாகம் நகரப் பகுதி வரையுள்ள மின்குமிழ்களில் சுமார் பதினைந்துக்கும் மேற்பட்டவை எரியாத நிலையில் காணப்படுகின்றன. இதேபோன்று சுன்னாகம் நகரப்பகுதியில் இருந்து வடக்குப் பக்கமாக இராணுவ [illegible] நிலையில் உள்ளன.

மக்களுடைய பிரதிநிதிகள் வலி.தெற்கு பிரதேச சபையை நிர்வகிக்கும் நிலையிலும் கூட மக்களின் போக்குவரத்து வசதிக்காக பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் எரியாத நிலையை யாரும் கவனத்தில் கொள்ளாத நிலையே காணப்படுகின்றது.

இது சம்பந்தமாக சபைத் தலைவரிடம் கேட்ட போது, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ள போதிலும் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூறினர். எனினும் நடவடிக்கை எடுக்கவில்லை - என்றார்.

இந்த விடயத்தில் மின்சார சபை அக்கறையின்றிச் செயற்படுவதாகவும் கூறப்பட்டது. (ம-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறையில் 16 வருடங்களாக மூடப்பட்டிருந்த வீதிகள் மக்கள் பாவனைக்கு

**நகர சபை நடவடிக்கை**

வடமராட்சி, நவ.12

வல்வெட்டித்துறை நகர சபைப் பகுதியில் 16 வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து கடற்கரை நோக்கிச் செல்லும் சந்தி ஒழுங்கை, சிவபுர வீதியிலிருந்து அளக்கடவை ஒழுங்கையூடாக மீன்சந்தைக்குச் செல்லும் பாதை ஆகியன மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளன.



நகரசபைத் தொழிலாளர்களால் துப்புரவு செய்யப்படும் வீதி

இவ்விரு வீதிகளும் முட்கம்பி வேலியால் அடைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு 16 வருடங்களுக்கு மேலாக தடை செய்யப்பட்டிருந்தன.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் இவ்விரு வீதிகளையும் திறக்குமாறு கோரி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சை அடுத்து இவ்விரு வீதிகளும் முட்கம்பிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றப்பட்டு மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளன.

இந்தப் பணிகள் வல்வை நகரசபை சுகாதார மேற்பார்வையாளர் எஸ்.குலத்தின் வழிகாட்டலில் நடைபெற்றன. நகரசபைச் சுகாதாரத் தொழிலாளர்களுடன் இராணுவத்தினரும் இணைந்து சிரமதானப் பணிகள் மூலம் பாதைகளைச் செப்பனிட்ட பின்னர் வீதிகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இதன் மூலம் வல்வெட்டித்துறை நகரம் படிப்படியாக இயல்பு நிலை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கின்றது.

பொதுமக்கள் நீண்டதூரம் நடந்து செல்லும் சிரமத்தைக் குறைத்து மக்கள் இலகுவாகப் பயணம் செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காகப் பொதுமக்கள் வல்வெட்டித்துறை நகர் சபைக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (த- 236)

# அரச மானியத் திட்டத்தில் நவாலி வடக்கில் வீடமைப்பு

நவாலி வடக்கு நாச்சிமார் வீதி, நவாலி தெற்குப் பகுதியில் உள்ள அரச காணி மற்றும் தனியார் காணியில் உள்ள 14 குடும்பங்களுக்கு அரச மானியத் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபை அரசதரப்பு உறுப்பினர் கநடராசா இதனைத் தெரிவித்தார்.

வீடமைப்புத் திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

நவாலியில் 180 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடுகள் அற்ற நிலையில் உள்ளன. அவர்களில் ஊனமுற்றவர்கள், விதவைகள், பெண்களை தலைமையாகக் கொண்டவர்கள், முற்றாக வசதியில்லாதவர்கள் எனப் 14 குடும்பங்களை இனங்கண்டுள்ளோம்.

அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை தொடர்பாக வலி. தென்மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மு.சந்திரகுமார், பிரதேச செயலர் திருமதி எ.அ.யோகநாயகம் மற்றும் பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளோம்.

விரைவில் இதற்கான தீர்வு எம்மால் எட்டப்பட்டு வீடமைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன் பூரண ஒத்துழைப்புத் தருகின்றார். இதே வேளை வறிய நிலையில் உள்ள 14 மாணவர்களுக்கு சைக்கிள்களும் 5 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி உதவியும் வழங்கவுள்ளோம் என்று மேலும் தெரிவித்தார். (ம- 302)

# பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்திக்கு 1.8 மில்லியன் ரூபா நிதி

வடமராட்சி, நவ.12

இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 7 பேர் 28 அபிவிருத்தித்திட்டங்களுக்கொன 1.8 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இந்த நிதிஒதுக்கீட்டில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் ஆகியோர் தலா 6 அபிவிருத்தி திட்டங்களுக்கு தலா 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதம் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராசா ஆகியோர் தலா 4 அபிவிருத்தி திட்டங்களுக்கென முறையே 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் 2லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுமாக 5 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர்.

மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சி.சிறீதரன் ஆகியோர் முறையே தலா 3 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், 3 லட்சத்து25 ஆயிரம் ரூபாவுமாக 7 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரன் 2 அபிவிருத்தி திட்டங்களுக்கென 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீட்டில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் 12 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர். (த-236)

# வீட்டுத் தோட்டச் செய்கை குறித்து அரச அலுவலர்களுக்குப் பயிற்சி

வலி.வடக்கு, நவ.12

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள 'திவி நெகும' வீட்டுத் தோட்டச் செய்கை தொடர்பாக யாழ். மாவட்ட கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், காணி அபிவிருதத்தி அலுவலர்கள், மருத்துவ மாதுக்கள் போன்றவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாகவும் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் பத்தாயிரம் குடும்பங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டு விதைகள் உட்பட உர வகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் வழங்கப்பட்ட வீட்டுத் தோட்டச் செய்கைக்கான விதைகள் பொது மக்களால் உரிய முறையில் செய்கை பண்ணப்படுவதற்கு வழி காட்டுவதற்கும் அதனை உரிய முறையில் மேற்பார்வை செய்து உரிய இலக்கை அடைவதற்காகவும் இந்தப் பயிற்சி வகுப்பை நடத்துவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தலை யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே கிராம அலுவலர்கள் பிரிவு ரீதியாக உரிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத் தோட்டச் செய்கைக்கான விதைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த- 86)

# ஒழுங்கைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம் வைமன் வீதி இல.53/1 எட்டு வரையான குடும்பங்கள் வதியும் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி சந்தியில் உள்ள இல.354/1 ஒன்பது குடியிருப்புக்களைக் கொண்ட சிறிய ஒழுங்கைகள் புனரமைக்கப்படவுள்ளன.

யாழ். மாநகர சபை உறுப்பினர் என். இராஜதேவனுக்கு வழங்கப்பட்ட மாநகர சபை நிதியில் இருந்து இந்தப் புனரமைப்பு வேலைகள் செய்யப் படவுள்ளன.

(த- 7)

# யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளருக்கு மதிய உணவுடன் பழுதான முட்டை

யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர்களுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதிய உணவுடன் வழங்கப்பட்ட முட்டை பழுதடைந்து காணப்பட்டதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு வாரத்தில் வியாழக்கிழமை தோறும் மதிய உணவுடன் முட்டையும் வழங்கப்படுவது வழக்கம்.

அதேபோல் வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கும் மதிய உணவுடன் முட்டையும் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் மதிய உணவுடன் வழங்கப்பட்ட முட்டை பழுதடைந்து காணப்பட்டதாக வைத்தியசாலை சிற்றூழியர்களும் தெரிவித்தனர்.

இந்த முட்டை உடைத்து பயன்படுத்தியபோது அதில் இருந்து துர்நாற்றம் வீசியதாகவும் சிற்றூழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக தாம் வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் சிற்றூழியர்கள் தெரிவித்தனர். (த-26)

# யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பை மீளாய்வு செய்க

**வலி.மேற்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம்**

சண்டிலிப்பாய், நவ.12

ஐக்கிய தேசியக் கட்சியால் 1983 ஆம் ஆண்டு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஜூலை கலவரத்தின் போது புலம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள், ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அதே போல் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்த மக்களும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி வரவில்லை.

இந்த நிலையில் சனத்தொகையைக் காரணம் காட்டி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள முன்மொழிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தலைவர் திருமதி ந.ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு செய்துள்ள முன்மொழிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் முழுமையாகக் குடியமரவில்லை.

குறிப்பாக வலிகாமம் வடக்குப் பிரதேசம் மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசம் நாகர் கோயில் கிழக்கு, சுண்டிக்குளம் கிராம அலுவலர் பகுதி என்பவற்றில் மீளக் குடியமர்வு நடைபெறவில்லை.

1983 ஆம் ஆண்டு [illegible] கொள்ளப்பட்ட [illegible] கலவரத்தால் எமது தமிழ் மக்கள் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழகத்துக்கு அகதிகளாகத் தஞ்சம் கோரிச் சென்றனர். அவர்கள் இன்னமும் தமிழகத்திலுள்ள பல முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களும் இன்னும் சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை.

ஆயிரக் கணக்கான மக்கள் புலம்பெயர்ந்து சென்று ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசித்து வருகின்றனர். அவர்களும் மீளத் திரும்பவில்லை.

தமிழகத்தில் அகதிகளாக இருப்பவர்களின் பெயர்களும் புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்களின் பெயர்களும் 2010 வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட காரணங்களைப் பார்க்கும் போது தற்போது மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவுக் கணக்கெடுப்பு முடிவுகள், சரியானவை எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஆகவே யாழ்ப்பாண மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளதாகக் கூறப்படும் பரிந்துரையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்- என்றுள்ளது. (த- 115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் விருப்பத்துக்கு மாறாக இடமாற்றம் செய்வது தவிர்க்கப்படவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.12

ஆசிரியர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களை இடமாற்றம் செய்வது தவிர்க்கப்படவேண்டும். கட்டாயப்படுத்தலின் மூலம் அவர்களைக் கற்பித்தலில் ஈடுபடுத்த முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் இளங்கலைஞர் கலாமண்டப கலையரங்கில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து வருகை தந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக பிரட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் வதிவிடப் பிரதிநிதி திருமதி.பெற்றீனா மெஜரும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவனும், கௌரவ விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், கலந்து கொண்டனர்.

இதில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன;

* ஆசிரிய உதவியாளர்களுக்கான வேதனத்தை நாட்டின் சகல பாகங்களிலும் ஒரே முறையில் வழங்குதல், அவர்களில் பட்டதாரிகளாக உள்ளவர்களை அவர்களின் கல்வித் தரத்துக்கு ஏற்ப உள்வாங்குதல்.

* வடக்கு கிழக்கில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள், கல்வித் திணைக்களங்கள் என்பவற்றில் நீண்டகாலமாக தற்காலிக கடமையில் உள்ளவர்களுக்கு விசேட திட்டத்தின் மூலம் நிரந்தரமாக்குதல், அதிபர் சேவைக்காக நடத் தப்பட்ட பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் இன்னும் உள்ளதால் அவர்களை கவனத்தில் கொள்ளல். (உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய வளநிலையங்களின் முகாமையாளர்கள், கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரிய கலாசாலையில் இணைக்கப்பட்ட விரிவுரையாளர்கள், பதில் அதிபர்கள்)

* ஆசிரிய வெற்றிடங்களை புதிய முறைகளுக்கூடாக நிவர்த்தி செய்தல். (திணைக்களத்தின் அங்கீகாரத் தோடு பாடசாலைகளில் சிறப்பாகக் கடமைபுரியும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல், இளைப்பாறும் தொகைக்கேற்ப புதிய ஆசிரிய நியமனங்களை வழங்குதல்.

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறிய பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குதல்)

* புதிய ஆசிரியசேவை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் சிறப்பாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அதிகரித்த ஊதியம் வழங் குதல்.

* ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்குதல்.

* கல்வி அமைச்சால் வழங்கப்படாமல் உள்ள சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்குதல்

* கல்வி அமைச்சால் வெளியிடப்படும் அனைத்து சுற்று நிருபங்களும் சகல ஆசிரியர்களுக்கும் கிடைக்க வழி செய்யப்படுதல்.

* பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வளங்கள் புதிய கற்றல், கற்பித்தலுக்கு உகந்த வகையில் பாரபட்சமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

* விசேட விடுமுறை நாள்களில் ஆசிரியர்களை அவர்களின் விருப்புக்கு மாறாக கடமையில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.

* அனர்த்தங்களின்போது இழப்புக்களைச் சந்தித்த மாணவர்களுக்கு கற்றலுக்கான ஏதுக்கள் செய்துகொடுக்கப்படுதல்.

* ஆசிரியர் தேவை உள்ளீர்ப்புக்களில் மாவட்டத்துக்கு மாவட்டம் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நீக்குதல்.

* பாடசாலைகளுக்கான கஷ்டப் பிரதேச படிகளை உரிய காலங்களில் வழங்குதல்.

* இதுதவிர கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகள் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் உதவக்கூடியவர்களாக இருக்க வேண்டுமே தவிர அவர்களை இம்சைப்படுத்துபவர்களாக இருக்கக்கூடாது. அவ்வாறு யாரும் தொழிற்பட்டால் அது தொடர்பில் நேரடியாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம-135)

## இலங்கைப் பெண்ணிடம் தங்கக் கட்டிகள் பறிமுதல்

திருச்சி, நவ. 12

இலங்கையில் இருந்து திருச்சிக்கு வந்த பெண் ஒருவரிடம் 10 தங்கக் கட்டிகளை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

விமானத்தில் வந்த சந்திரா (வயது 47) என்ற பெண்ணே இவ்வாறு தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்துள்ளார். இவர் ஜெயங்கொண்டம் அருகே உள்ள மீன்சுருட்டியை வசிப்பிடமாகக் கொண்டவர்.

இவரை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்த போது இவர் மறைத்து வைத்திருந்த 10 தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்தனர்.

தங்கக் கட்டி ஒன்று 100 கிராம் எடை உள்ளதாகவும், தங்கக் கட்டிகளின் மொத்த மதிப்பு சுமார் 30 லட்ச ரூபா இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக பொலிஸார் சந்திராவை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## சைவப் புலவர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.12

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் அடுத்தவருடம் நடத்தவுள்ள சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் இல.153, காங்கேசன் துறை வீதி, கொக்குவில் என்னும் முகவரியுடன் அல்லது 021-2223458 எனும் தொலை பேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-236)


## ஜி.சீ.ஈ. சா/த மாணவர்களுக்கு கருத்தரங்கு

பருத்தித்துறை,நவ.12

நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர் களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ கல்விப் பிரிவால் டிசெம்பர் மாதம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கான கல்விக் கருத் தரங்கு பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை கணிதம், தமிழ் ஆகிய பாடங்களுக்கும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு தொடக்கம் மாலை 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.(வ-190)



யாழ். சனச வங்கியின் முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க பிரபல தொழில் அதிபர் (ரூலிங்ஸ் நிறுவனம்) எஸ்.உருத்திரலிங்கம் சுழிபுரம் பாண்டவெட்டை திருநாவுக்கரசு முன்பள்ளி மாணவர்கள் 27 பேருக்கான சீருடையை வழங்கியுள்ளார். தொழில் அதிபரின் மகள் ஜெயராம் தம்பதிகள் அதனை முகாமையாளரிடம் கையளித்து அமர்ந்திருக்கின்றனர். அருகில் வங்கி முகாமையாளர் உரையாற்றுகிறார். (வ-29)

## விபத்தில் இளைஞர்காயம்

கொழும்புத்துறை, நவ.12

நல்லூர் முடமாவடிப் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற டிராக்டர்- மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நீர்வேலி, பூதர்மடத்தைச் சேர்ந்த பிரசாந் என்பவரே படுகாய மடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (வ-135)

## மாணவர் குழுக்களிடையே மோதல் களனி பல்கலையில் 8 பேர் காயம்

களனி பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே நேற்றுமுன்தினம் இடம் பெற்ற மோதலில் 8 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் களனி பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது என்று கிரிபத்கொடைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

களனி பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றியத் தலைவரைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்புத் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவ குழுக்களிடையே வாய்த்தகராறு ஏற்பட்டது. இந்த வாய்த் தகராறு கைகலப்பாக மாறியதையடுத்து ஏற்பட்ட மோதலில் எட்டு மாணவர்கள் காயமடைந்தனர். இதில் இருவர் கிரிபத்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஏனைய அறுவர் ராகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலையடுத்து, பல்கலைக்கழகத்தில் பதற்றநிலை ஏற்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-சி)

## தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

தென்மராட்சி,நவ.12

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சல் பரவாமல் இருக்க சுகாதாரப் பிரிவினரும் பொலிஸ் நிலையங்களின் சூழல் பாதுகாப்புப் பிரிவினரும் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மழை காலம் ஆரம்பமாகியுள்ளதால் டெங்கு நுளம்புகள் உருவாகக் கூடிய கழிவுகளை வீதியோரங்களில் கொட்ட வேண்டாம் என்று சுகாதாரப் பிரிவினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

இந்தப் பிரசாரத்தை உதாசீனம் செய்வோரைக் கண்காணிக்க பொலிஸ் படையும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வீதியோரங்களில் குப்பைகளைக் கொட்டுவோர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து வருகின்றனர். கடந்த 8 ஆம் திகதிவரை 15 பேர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சவகச்சேரி நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு 500-1000 ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வழக்குகள் நேற்று முன்தினம் விசாரிக்கப்பட்டு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதரண சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (வ-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

'ரை' கட்டி வாழ்வார்..............

.............. மற்றவரெல்லாம்!

ஒரு கலியாண எழுத்து வீடு.எழுத்து வீடெண்டால் ரை கட்டி ரிப்ரொப்பாகத்தானே போக வேணும் பாருங்கோ. அப்பிடித்தான் நானும் போனன். அங்கை பாத்தா மாப்பிளைப் பெடியன் ரை கட்டாமல் நிக்குது. உங்கை கண்டது கடியதெல்லாம் மாப்பிளைக் கோலத்திலை ரை கட்டேக்கை கவுண்மேந்து உத்தியோகம் பாக்கிற இவன் ரை கட்டாமல் நிக்கிறானே எண்டு மனதுக்குள்ளை ஒரே குடைச்சல். கிட்டப் போய் 'ஏன் மோனை ரை கட்டாமல் நிக்கிறாய்?' எண்டு கேட்டன்.

அதற்கு அவன் 'ஐயா!இப்ப ஒரு புது மரபுத்தொடர் புழக்கத்திலை இருக்குது தெரியுமோ?' எண்டு எதிர்க் கேள்வி கேட்டான். 'மனுசார எனக்குத் தெரியாது மோனை. சொல்லு பாப்பம்' எண்டன். அதற்கு அவன் 'ரை கட்டிக் கை கட்டி' என்று பதிலிறுத்தான்.இதென்னடா புதுக்கதை கதைக்கிறான் எண்டு வியப்போடை நான் அவனைப் பாத்தன். 'ரை கட்டினாலே கூனிக் குறுகி ஆராரிட்டையோ வெல்லாம் கை கட்டி நிக்க வேணும். மீசை நரைச்ச எங்கடை அதிகாரியள் எல்லாம் இப்பிடி ரை கட்டிக் கை கட்டிக் கூனிக் குறுகி நிக்கிறதைப் பாத்ததாலை ரையே வெறுத்துப் போச்சு ஐயா' எண்டு அவன் சொன்னபோதுதான் ஒரு பெரிய உண்மை உறைச்சுது.

இப்பவெல்லாம் அரசியல்வாதிகளிடமும், மேலதிகாரிகளிடமும் உயர் அதிகாரிகள் எனப்படுவோர் வாங்கிக் கட்டிக்கொள்வதை கிளறிக்கல் லெவலிலை இருக்கிற இவன் போன்றவர்கள் கண்டு கேட்டு வரேக்கை 'வேண்டாம் பதவியுயர்வு வேண்டாம் ரை' எண்ட மனநிலை வருந்தான் பாருங்கோ!



ஒரு பக்கம் பாத்தா 60 வயசிலை பென்சன் குடுக்குறது, காணும் ராசா. அடுத்தவனுக்கு வழி விடு எண்டதுக்குத் தானே!அதை விட்டிட்டு சேவை நீடிப்பெண்டு இவை நந்தி மாதிரிக் குந்திக் கொண்டிருந்தால் எப்பிடி இளசுகள் முன்னுக்கு வரும்? இளம் பிள்ளையளிட்டை புத்தாக்கச் சிந்தனையள் இருக்குது. உற்சாகமாகத் தொழிற்படுவாங்கள். எல்லாத்துக்கும் ஓணான் மாதிரித் தலையாட்ட மாட்டாங்கள்.

இன்னொரு பக்கத்திலை அதிகாரத்துக்குச் சரியாகத் தலையாட்டக் கூடிய ஆக்கள் இருந்தாத்தானே காரியங்களைச் சுலபமாய் முடிக்கலாம்.அப்பிடியில்லாமல் நடந்து கொண்ட பெருந்தலையள் பல அண்மைக் காலத்திலை உருட்டப்பட்டிருக்கிறது செய்தியாய் வந்தது உங்களுக்கெல்லாம் தெரிஞ்சதுதானே! என்ன இருந்தாலும் சிவில் நிர்வாகத்துக்குள்ளை அரசியல் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கக் கூடாது கண்டியளோ! நிர்வாகம் நடத்திறவை பிழை விட்டால், அதைப் பற்றிச் சனங்கள் ஏதேனும் சொன்னால் மட்டும், மக்களாலை தெரிவு செய்யப்பட்டவை எண்டோ, அரசாங்க அமைச்சரவைப் பிரதிநிதியள் எண்டோ நிர்வாகத்தைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். அதுவும் உரிய சட்ட அடிப்படையிலையே செயற்பட வேணும்.

அதை விட்டிட்டு கட்சிக்கு வால் பிடிக்கிறவனுக்கும், கூழைக் கும்பிடு போடுறவனுக்கும் பெரிய பதவியளைக் குடுத்தால் கொண்டு வந்த, தோண்டி'யைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்த நிலைதான் வரும். நாளைக்கு அடுத்த கட்சிக்குத் தாவுவதும், உதவியவரையே எட்டி உதைப்பதும் இவர்களாகவே இருக்கும்.

ஒரு காலத்தில் ரை கட்டி வேலை செய்பவர்கள் தொடர்பான சமூக மதிப்பீடு மிக உயர்வானது. வெள்ளைக்காரன்ரை நிர்வாகத்திலை கடைப்பிடிச்ச பல நல்ல விடயங்கள் இவர்களாலை பின்பற்றப்பட்டுது. தகுதியும், திறமையும், நற்பண்புகளும் மிக்கவர்களே உயர் பதவியளை அலங்கரிச்சினை .கறை படியாத கைகளோடை பென்சனும் எடுத்தினை. இண்டைக்கும் அந்த மாதிரி ஆக்கள் நிறைய இருக்கினைதான். ஆனாலும் அரசியல் வந்து இந்த நிலமையை ஆட்டங்காண வைக்கிறதுதான் கவலையைத் தருகுது பாருங்கோ!

'கேக்கிறவன் கேணையனாக இருந்தால் எருமைமாடு ஏரோபிளேன் ஓட்டுமாம்' எண்டொரு பழமொழி தமிழ்நாட்டிலை சொல்லுவினை. சொல்லுறவன் சொன்னா கேக்கிறவனுக்கு மதியென்ன எண்டு இங்கை ஒரு பழமொழி உள்ளது. பல விசயங்களிலை இந்தப் பழமொழியள்தான் ஞாபகத்துக்கு வருகுது. பட்டம் பதவியள் பொருத்தமான மனிசரிட்டை இருக்கிறதுதான் நல்லது பாருங்கோ.

விழிச்சான் குஞ்சு.

# தெற்காசிய பிராந்திய அபிவிருத்திக்கு சமாதானமும் பாதுகாப்பும் அவசியம்

## மாலைதீவில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ 12

பொருளாதார அபிவிருத்தியின் பயன்களை கீழ்மட்ட மக்களும் பயன்பெறக் கூடியதாக மாற்றுவதற்கு தெற்காசியப் பிராந்தியத்தில் சமாதானமும், பாதுகாப்பும் அத்தியவசியமான. தாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்க் உச்சிமாநாட்டில் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு - அத்து நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான 17ஆவது சார்க் உச்சிமாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

எமது மக்களிடம் இயல்பாகவே உள்ள திறன்களும், படைப்பாற்றலும் எமது நாடுகளுக்கு இருக்கும் மாபெரும் சக்தியாகும். ஆகவே நமது பிராந்திய மக்களின் திறமைகளிலிருந்து பயன்பெறுவதற்கு அனுசரணையளிப்பது சார்க் பிராந்திய நாடுகளின் தலைவர்களான எமது தலையாய கடமையாகும்.

இலங்கையில் வாழ்கின்ற நாங்கள் சமூக நகர்வு தொடர்பில் தீவிர நம்பிக்கை வைத்துள்ளோம். எமது மக்களின் அன்றாட வாழ்க்கையில் பொருளாதார நலன்களில் இருந்து பயன்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதற்கு நாம் கட்டுப்பட்டுள்ளோம்.

மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் அது நிச்சயமாக நிறைவேறும். பொருளாதார அபிவிருத்தியின் மூலம் கிட்டும் பயன்கள் இயல்பாக கீழ் மட்டத்துக்குப் பெருகிச் செல்வதில்லை. இந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள எமது அரசுகளின் சரியான தலையீடு அத்தியவசியமானதாகும். இவை அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நமது பிராந்தியத்தில் சமாதானமும் பாதுகாப்பும் அத்தியாவசியமாகும்.

உணவு மற்றும் வலுச்சக்தி, பாதுகாப்பு, சூழலைப் பேணிப் ்பாதுகாத்தல் அல்லது பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாத்துக் கொள்ளல் சார்க் பிராந்திய நாடுகள் எதிர்கொள்ளும் தவிர்க்க முடியாத அச்சுறுத்தல்களாகும்.

எனினும், எமக்கிருந்த அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்திக்கொண்டு அந்தச் சவால்களுக்கு நாம் வெற்றிகரமாக முகங்கொடுத்தோம்.

சார்க் பிராந்திய நாடுகள் அபிவிருத்திக்காகப் பின்பற்றுகின்ற இன்னுமொரு பொது அம்சம்



உண்டு. அதாவது நாம் ஒரு போதும் பணத்தினாலோ அல்லது பணப் பெறுமதியினாலோ அபிவிருத்தியை மதிப்பிடவில்லை. நாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுக்காக அபிவிருத்திக்கு இதைவிட சிறந்த அளவுகோல் ஒன்று பொருத்தமானதாகும். எமது மத போதகர்கள் எமக்குள் உருவாக்கிய உள்முக மன அமைதியையும், திருப்தியையும் எமது அபிவிருத்தித் தத்துவத்தின் சாரமாகும்.

சமூக நியாயங்களும், காலநிலை மாற்றங்களும் என்ற விடயங்கள் மேலும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டியதோடு, அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-சி)



கொழும்பு, கிராண்ட்பாஸ் ஞானவைரவர் சுவாமி ஆலயத்தில் பூரணை விரதம் மற்றும் ஐப்பசி பரணியை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஞானவைரவர் பெருமானுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்றது.

# பாகிஸ்தான் பிரதமரை சந்தித்தார் மஹிந்த

கொழும்பு, நவ .12

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பாகிஸ்தான் பிரதமர் யூஸுப் ரஸா கிலானியும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலைதீவின் அட்டு நகரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

பல்வேறு துறைகளில் குறிப்பாக வர்த்தகம், பாதுகாப்பு, கலாசாரம், மக்களுக்கிடையிலான தொடர்புகள் ஆகியவற்றில் இரு நாடுகளின் உறவுகளை விஸ்தரிப்பதற்கு இரு தலைவர்களும் இந்தச் சந்திப்பின்போது இணக்கம் கண்டனர். அதேவேளை, தெற்காசிய பிராந்தியத்திலுள்ள மக்களின் நன்மைக்காகவும், வர்த்தகம், பொருளாதார செயற்பாடுகள் என்பனவற்றை ஊக்குவிப்பதற்காகவும் சார்க் அமைப்பை மேலும் வினைத்திறனானதாக்க வேண்டும் என்று பாகிஸ்தானியப் பிரதமர் யூஸுப் ரஸா கிலானி கூறியுள்ளார்.

இந்தச்சந்திப்பில் பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானி கார், உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

# சார்க் மாநாட்டுக்கு இலங்கைப் படையினர் பாதுகாப்பு

கொழும்பு,நவ.12

மாலைதீவில் ஆரம்பமாகியுள்ள சார்க் உச்சி மாநாட்டுக்கு மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையுடன் இணைந்து இலங்கை சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

சார்க் மாநாடு மற்றும் இதில் பங்கேற்கும் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணியிலும் விமான நிலையம் மற்றும் இறங்குதுறைப் பகுதிகளிலும் இலங்கை சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று மாலைதீவின் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்த மாநாட்டுப் பாதுகாப்புக்காக இலங்கை சிறப்பு அதிரடிப்படையினருக்கு முன்னதாக கொழும்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டி ருந்தன.

அத்துடன் குண்டுகளைக் கண்டுபிடிக்கும் திறன்வாய்ந்த மோப்ப நாய்களும் மாலைதீவில் பணியில் ஈடுபடுகின்றன. மாலைதீவின் அட்டு நகரில் மாநாட்டை முன்னிட்டு பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகள் காணப்படுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-சி)

# காலி கடலில் மூழ்கி மூவர் பலி

காலி - கொஸ்கொட கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் நீரில் மூழ்கி மூவர் பரிதாபமாகப் பலியாகியுள்ளனர்.

அத்துடன், நீரில் மூழ்கிய மேலும் மூவர் காப்பாற்றப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் களுத்துறை - மதுகம கெலின்கந்த பகுதியில் இருந்து சுற்றுலா சென்ற குழுவினரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மையில் புனரமைத்த வீதிகள் மழைக்குப் படுமோசமாகச் சேதம்

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் சுட்டிக் காட்டவுள்ளனர்

கிளிநொச்சி,நவ.12

கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகள் கடந்த சில நாள்களாகப் பெய்த கன மழை காரணமாக மிகவும் மோசமாகச் சேதமடைந்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் வீதி வட்டக்கச்சி வீதி, இரத்தினபுரம் வீதி உள்ளிட்ட மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் 328 கிலோ மீற்றர் நீளமான வீதி அண்மையில் புனரமைக்கப்பட்டது.

இந்த வீதிகளின் பள்ளங்கள் கிரவல் போட்டு சமப்படுத்தப்பட்ட பின்னர் அவற்றின் மீது தார் ஊற்றப்பட்டது.

இந்தவீதி புனரமைப்புச் செயற்பாடு குறுகிய நாள்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாக இருந்தது. அண்மையில் பெய்த மழை காரணமாக மோசமான முறையில் சேதமடைந்தது.

இந்த விடயம் குறித்து வீதி அபிவிருத்தி திணைக்களத்தினதும் மாவட்டச் செயலகத்தினதும் கவனத் துக்குக் கொண்டு வந்தபோது போதியளவு நிதி இல்லாத காரணத்தால் வீதிகள் தரமான முறையில் புனரமைக்கப்பட முடிய வில்லையென அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.இந்த விடயம் குறித்து எதிர்வரும் டிசெம்பம் மாதம் 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்படவுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (எ)

# மாணவர்கள், முதியோருக்கு முல்லையில் சிறு நிதி உதவி

முல்லைத்தீவு,நவ.12

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தியாகி அறக்கொடை நிதியத்தால் முல்லைத்தீவு மாவட்ட வறிய முதியவர்கள் 30 பேருக்கு மாதாந்தம் 500 ரூபா வீதமும், 56 வறிய பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 250 ரூபா வீதமும் நிதி உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.



மாணவனுக்கு உதவியை வழங்குகிறார் அமைச்சர்

இந்த நிகழ்வானது கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை முள்ளியவளை வித்தியானந்தா பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மற்றும் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் பொறுப்பாளர் கமலநாதன், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ)

# மீளக்குடியமர்ந்த 95 குடும்பங்களுக்கு கெயர் நிறுவனம் வாழ்வாதார உதவி

புதுக்குடியிருப்பு,நவ.12

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தேவிபுரத்தில் மீளக்குடியமர்ந்த 95 குடும்பங்களுக்கு கெயர் நிறுவனம் வாழ்வாதார உதவியாகப் பல லட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களையும் உள்ளீடுகளையும் வழங்கியுள்ளதாக உதவி அரச அதிபர் ஜெயகாந் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு வெறுங்கையுடன் தேவிபுரத்தில் மீளக்குடியமர்ந்த 95 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்த முன்வந்துள்ள கெயர் நிறுவனம் ஒவ்வொருவருக்கும் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களையும் உள்ளீடுகளையும் வழங்கியுள்ளது.

தொழிலின்றி, வருமானமின்றி கஷ்டப்பட்டு வரும் இவர்களுக்கு மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள மேற்படி உதவிகள் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-115)

# இன நல்லுறவை மேம்படுத்த தென்பகுதியினர் வருகை

வவுனியா, நவ.12

வவுனியா இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இன நல்லுறவை மேம்படுத்தும் முகமாக இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பதுளை மாவட்ட இளைஞர் யுவதிகள் 50 பேர் வவுனியா வந்துள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் நேரியகுளம் கிராம சேவையாளர் பிரிவில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்வுகளில் இந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-421)

# உலக வங்கியின் அதிகாரிகள் குழு அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டுள்ளனர்

மன்னார்,நவ.12

உலக வங்கியின் இலங்கைக்கான இணைப்பதிகாரி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் மன்னார் மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர்.

மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் முகமாகவே இந்த பயணம் அமைந்திருந்தது.

வடக்கின் துரித மீள் எழுச்சித்திட்டத்தில் மன்னார் மாவட்ட அலுவலகத்தால் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேசங்களில் உலக வங்கியின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வேலைத் திட்டங்கள் குறித்து அவர்கள் ஆராய்ந்தனர்.

அடம்பன் குளம் நிர்மானப் பணிகள், தேவன்பிட்டி மற்றும் விடத்தல்தீவு குடிதண்ணீர் விநியோகத் திட்டம் என்பனவற்றையும் பார்வையிட்டுள்ளனர்.

மேலும் மன்னார் மாவட்ட அலுவலகத்தால் நிர்மாணிக்கப்பட்ட பாலம்பிட்டி கமநல சேவை நிலையம் மற்றும் உரக் களஞ்சிய சாலை என்பனவும் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன. (எ)

# இளைஞர் வீட்டுத்திட்டத்தில் வவுனியாவில் நான்கு வீடுகள்

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சின்மூலம் ''கிராமத்தின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் கரங்கள் இளைஞர் வருடத்தில் கிராமத்தில் வீடு'' என்ற செயற்திட்டத்தினால் ஒவ்வொரு பிரதேச பிரிவிற்கும் ஒரு வீடு என்ற அடிப்படையில் நாடு முழுவதும் அமைக்கப்பட்ட 332 வீடுகளும் எதிர்வரும் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்தத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் பூவரசங்குளம், நெடுங்கேணி, புதுக்குளம் ஆகிய பகுதிகளில் நான்கு வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. (எ-421)

## அபகரிப்பு...



வன்னியில் இருந்து இரும்புப் பொருள்களை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லத் தயாராக நிற்கும் கன்ரர் வாகனம்.

# கிளிநொச்சி கலாசார விழாவில் 12 கலைஞர்கள் கௌரவிப்பு

சுன்னாகம்,நவ.12

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் கலாசார விழாவில் கலை, இலக்கிய, சமூகப் பணி புரிந்த 12 பிரதேசக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கலாசார விழாவில் இடம்பெறவுள்ளது.

கௌரவிக்கப்படுவோர் விவரம் வருமாறு:

இளையதம்பி நடராசா (எழுத்துத்துறை), மணிமுத்து இராசதுரை(இசை), கே.அலெக்சாண்டர் (நாடகம்),ஐயாக்கண்ணு ஆறுமுகம் (ஆர்மோனியம்), வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை (நாடகம்,திரைப்படம்,இலக்கியம்), வேலன் சின்னத்தம்பி( ஆர்மோனியம்,கூத்து),வைத்தி ஐயம்பிள்ளை(கூத்து), திருமதி செல்வராணி சேகரம்பிள்ளை (சமயப்பணி), அப்பச்சி வல்லிபுரம் (கூத்து),சிவராஜா சிவகருணாகரன் (எழுத்துத்துறை), சிவராமதீசன் (ஓவியம்), தில்லை நடராசன் (பல்துறை).

(38)

# பண்டாரவன்னியன் வரலாற்றுப் பார்வை கருத்தாடல் நிகழ்வு வவுனியாவில்

வவுனியா,நவ.12

வன்னி மண்ணின் இறுதி மன்னனாகக் கொள்ளப்படும் பண்டார வன்னியனின் வரலாற்றுப் பார்வை கருத்தாடல் நிகழ்வு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஐயாத்துரை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பண்டார வன்னியன் தொடர்பிலான பல்வேறு வரலாற்றுப் பதிவுகளைப் பற்றி வரலாற்று ஆய்வாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான அருணா செல்லத்துரை உரையாற்றினார்.

வன்னிராச்சியம் மற்றும் வன்னிராச்சியத்தின் வீழ்ச்சி தொடர்பில், நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தமது கருத்துக்களைத் தெரி வித்தனர்.

பண்டாரவன்னியனின் ஞாபகார்த்த தினத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற கருத்தும் கலந்துரையாடலில் முன் வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அருணா செல்லத்துரை, ''ஒக்டோபர் 31 ஆம் திகதி பண்டார வன்னியன் தினமாக அனுஷ்டிக் கப்படுகிறது.

இந்தநாள் பண்டாரவன்னியன் தோல்வியுற்ற தினமாக ஆங்கிலேய தளபதி ஒருவர் நட்டு வைத்த கல்வெட்டில் உள்ளது.அது தோல்வியுற்ற நாள்.

முல்லைத் தீவில் அமைந்திருந்த டச்சுக் கோட்டையை பண்டாரவன்னியன் வெற்றி கொண்ட நாளை ஞாபக தினமாகக் கொள்ள முடியும் என்ற கருத்தை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தீவிரமாகப் பரவும் சினிமா மோகம்

மன்னார்,நவ.12

மன்னார் நகரில் உள்ள அயன் திரை அரங்கில் ஏக காலத்தில் இரு புதிய திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

தலைநகர் கொழும்புக்கு வெளியே ஒரே திரை அரங்கில் இரு புதிய திரைப்படங்கள் திரையிடப்பட்டது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தீபாவளி வெளியீடாக உலகெங்கும் ஒரே நேரத்தில் திரையிடப்பட்ட விஜய் நடித்த வேலாயுதம், சூர்யா நடித்த ஏழாம் அறிவு ஆகிய இரு திரைப்படங்களும் திருத்தியமைக்கப்பட்ட இந்தத் திரையரங்கில் திரையிடப்பட்டுள்ளன. (எ-236)

# கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தத்தில் பொருத்தமான நடைமுறை அவசியம்

## அனர்த்த முகாமைத்துவ உதவி இணைப்பாளர்

கிளிநொச்சி,நவ.12

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் அழிவுகள் ஏற்படாதிருக்க பொதுமக்கள் முறையான நடவடிக்கைகளை இனம் கண்டு அவற்றை சிரமதானம் மூலம் மேற்கொண்டு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பேரிடர் முகாமைத்துவ உதவி இணைப்பாளர் ப.சுதர்சநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பருவமழை ஆரம்பித்துள்ளது. ஆகவே, வெள்ளத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

நாம் முன்னேற்பாடுகளை எடுக்க வேண்டும். மழை காலங்களில் நீர் தேங்கி நிற்கும் பகுதிகளை இனங்கண்டு நீரை வழிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகளை சிரமதானம் மூலம் மேற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம் வெள்ளத்தில் இருந்து பாதுகாப்புப் பெறும் அதேவேளை நுளம்புப் பெருக்கத்தையும் கட்டுப்படுத்தலாம்.

இதுவிடயத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

மேற்படி திட்டங்களை ஒழுங்காகச் செயற்படுத்துவதன் மூலம் அனர்த்தங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா தெற்கு பிரதேச சபையால்

# மறவன்குளம் முன்பள்ளிக்கு வழங்கிய பொருள்கள் எங்கே சென்றது

வவுனியா, நவ.12

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினால் மறவன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள முன்பள்ளிக்கு வழங்கிய பொருள்கள் இதுவரை கிடைக்கவில்லை என அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் பற்றி குறித்த பிரதேச சபையினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது முன்பள்ளிக்கு குறைபாடுகள் இருந்ததாக அந்தப்பகுதி மக்கள் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். உடனடியாக முன்பள்ளி குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக பிரதேச சபை முடிந்த உதவியை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

ஆகவே முன்பள்ளிக்கு வழங்கிய அத்தியாவசிய பொருள்கள் எங்கே சென்றது எனத்தெரியாத மக்கள் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர். (எ-421)

## கரைதுறைப்பற்றில் ஆயுள்வேத வைத்தியசாலை திறப்பு

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபை கட்டடத்தில் ஆயுள்வேத மருத்துவ வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு கடந்த மாதம் 28 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு சிகிச்சைகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களின் நன்மை கருதியே வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் இந்த ஆயுள்வேத வெளி நோயாளர் பிரிவு திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதைக் காணக் கூடியதாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-415)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

# வவுனியா பிரதேசசபை மாணவர்களுக்கு போட்டிகளை நடத்தி பரிசில் வழங்கியது

மன்னார், நவ.12

வவுனியா பிரதேச சபை தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கடந்த மாதம் பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்கியுள்ளது. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் நடனநிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் வாசிப்பு எனும் தலைப்பில் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி கஸ்தூரியின் பேச்சும் இடம் பெற்றது.

இந் நிகழ்வுக்கு கௌரவ விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் வெங்கல செட்டிக்குளம் உபதலைவர், வவுனியா பிரதேச சபையின் உபதலைவர், உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-601)



முல்லைத்தீவு கல்வி வலயத்தால் கடந்த வாரம் நடத்தப்பட்ட முழு நிலாக் கலை நிகழ்வின் போது நடைபெற்ற முல்லை மண்ணுக்கேயுரிய பாரம்பரியமான 'குடம் ஊதல்' நிகழ்வின்போது.

# மேய்ச்சல் தரவை இல்லாததால் கால்நடை வளர்ப்போர் பாதிப்பு

கிளிநொச்சி, நவ.12

கிளிநொச்சி ஸ்கந்தபுரம், அக்கராயன் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர் மேய்ச்சல் தரவை இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அக்கராயன் குளத்தின் நெற்செய்கை நிலப்பரப்பான ஸ்கந்தபுரம் சந்திக்கு அப்பால் கால் நடைகளைக் கொண்டு செல்லக்கூடாது என கமக்கார அமைப்பால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொருத்தமான மேய்ச்சல் தரவைகளின்றி கால்நடை உரிமையாளர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

கால்நடை மேய்ச்சல் தரவை கள் உள்ள பகுதிகள் மிதிவெடி அபாயம் நிறைந்த பகுதியாகக் காணப்படுவதாக கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள் ளனர்.

ஆகவே மேய்ச்சல் பகுதிகளில் இருக்கும் மிதிவெடிகளை அகற்றி கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபட அனுமதிக்குமாறு கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

அப்பொழுதுதான் நெற்பயிர்ச் செய்கை நிலங்களைத் தவிர்த்து மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகளை உலாவ விடமுடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-410)

# கட்டாக்காலி கால்நடைகளால் துணுக்காய் விவசாயிகள் பாதிப்பு

துணுக்காய், நவ.12

துணுக்காய் பிரதேசத்தில் கால்நடைகளைக் கட்டுப் படுத்துவதற்கு கால அவகாசத்தினை கமக்கார அமைப்பு வழங்கியிருந்தது. இன்றுவரை கால்நடைகள் வளர்ப்போர் கால்நடைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராததால் விவசாயிகள் விசனம் அடைந்துள்ளனர்.

மேற்படி பிரதேசங்களில் நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு அப் பயிர்கள் வளர்ந்து கொண்டு வரும் நிலையில் கட்டாக்காலி கால்நடைகள் பயிர்களை சேதம் செய்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் கட்டாக்காலி கால்நடைகள் இந்தப்பிரதேசத்தில் உள்ள பிரதானவீதிகளில் இரவில் தங்குவதால், வீதிப்போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் விபத்துக்குள்ளாகும் நிலையும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆகவே கால்நடைகளை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்க்க கமக்கார அமைப்பு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-425)

## 48 பேருக்கு வாழ்வாதார உதவிகள்

துணுக்காய் சமூக சேவை திணைக்களத்தினால் பொது சன மாதாந்த கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்டிருக்கும் 48 பயனாளிகளுக்கு வாழ் வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன. முதல் கட்டமாக 10 பயனாளிகளுக்கு 7500/= வீதமும், ஏனைய 38 பயனாளிகளுக்கு 2ஆம் கட்டமாக மேற்படி கொடுப்பனவுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. இந்தக் கொடுப்பனவு மூலம் வறுமைக்கு உட்பட்டவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பமுடியும் என மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (எ-418)



மன்னாரில் கடந்த சில நாள்களாகப் பெய்த மழை காரணமாக வீட்டின் வெளியினுள் வெள்ளம் வற்றாமல் இருப்பதைப் படத்தில் காணலாம்.

# கிளிநொச்சிக் கொள்ளையில் 3 நபர்களுக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, நவ.12

கிளிநொச்சிப் பகுதியில் 13 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏற்கனவே விளக்கமறியலில் இருந்த மூவர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்கள் மூவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட பதில் நீதவான் அன்ரன் உயில நாயகம் உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூவரில் சந்தேகநபரான ஆறுமுகம் கணேஸ் என்பவர் ஏற்கனவே 6 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

எனினும் இவர் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காததால் ஊர்காவற்றுறை நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ-6-319)

# பூநகரிப் பிரதேச விவசாயிகளுக்கு உரவினியோகம் 15 ஆம் திகதி ஆரம்பம்

கிளிநொச்சி, நவ.12

கிளிநொச்சி பூநகரி பிரதேச விவசாயிகளுக்கான முதலாம் கட்ட உரவினியோகம் இன்றுடன் நிறைவு பெறுவதாக கமநல அபிவிருத்தி நிலையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கான மானிய உரவினியோகம் முதற்கட்டமாக நடைபெற்று வந்தது. முதற்கட்ட உரவினியோகம் நிறைவடைந்ததும் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் பின்வரும் ஒழுங்குகளில் 2ஆம் கட்ட உரவினியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

முதலாம் கட்ட உரமானியம் பெற்றவர்களுக்கே இரண்டாம் கட்ட உரவினியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் பூநகரி கமநல சேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரவினியோகம் வழங்கப்படும் இடங்கள்:

எதிர்வரும் 15 ஆம் திகதி சின்னப்பல்லவராயன்கட்டு, 16 ஆம் திகதி காரியம்பிட்டி, 17 ஆம் திகதி கறுக்காய்த்தீவு, 18 ஆம் திகதி செட்டியகுறிச்சி, ஆலங்கேணி, 19 ஆம் திகதி கொல்லகுறிச்சி, 21 ஆம் திகதி ஞானிமடம், வாடியடி, 22 ஆம் திகதி மட்டுவில் நாடு, பள்ளிக்குடா, 23 ஆம் திகதி மட்டுவில் நாடு மேற்கு, கௌதாரிமுனை, 27 ஆம் திகதி சாமிப்புலம், நல்லூர், முட்கொம்பன், 25ஆம் திகதி பரமன்கிராய், சிவபூமி, 26 ஆம் திகதி செம்மங்குன்று, பிள்ளையார்நகர் என்ற ஒழுங்கில் உரவினியோகம் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குள்ளான தமிழ் தொழிலதிபர் இழப்பீடுகோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு

**மேல் விசாரணை ஜனவரி 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைவைப்பு**

கொழும்பு, நவ.12

குற்றவியல் வழக்கு விசாரணையிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்ட போதிலும் தம்மிடமிருந்து கைப்பற்றப்பட்ட உடைமைகள், மற்றும் சொத்துகளைப் பொலிஸார் தமக்கு திருப்பி கொடுக்கவில்லை என்றும் குற்றமிழைக்காத தம்மை காவலில் வைத்து இம்சைப்படுத்தியமைக்காக இழப்பீடாக 9 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்றும் கோரி தமிழ் தொழில் அதிபரான ராமசாமி பிரபாகரன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த தொழில் அதிபர் சார்பிலான அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் ஷிராணி எ.பண்டாரநாயக்க, நீதியரசர்கள் பி.ஏ.ரட்னாயக்க மற்றும் பிரியசத் ஆகியவர்கள் அடங்கிய ஆயத்தின் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தாம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார் என்றும் கேணல் ரஞ்சித் சந்திரசிறி பெரேராவுடன் தாம் தொடர்பு கொண்டிருந்ததாக இந்த விசாரணை நடைபெற்றதாகவும் மனுதாரர் தெரிவித்திருந்தார்.

சட்டமா அதிபர் குற்றவியல் புலனாய்வு திணைக்கள குற்றப் பிரிவு பணிப்பாளர், முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரின்டன்ட் வாஸ்குணவர்தன, பிரதி பொலிஸ்மா அதிபர் அனுரா சேனநாயக்க, உதவி பொலிஸ் சுப்பிரின்டன்கள் வெதசிங்க ஆரியரட்ண, ரவீந்திரா மற்றும் நாணயக்கார ஆகியவர்களுடன் மற்றும் பல பொலிஸ் அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். சட்டத்தரணி கே.எஸ்.ரட்ன வேலுடன் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ்டி சில்வா, மனுதார் சார்வில் ஆஜராகியிருந்தார்.

அவர் தெரிவிக்கையில்:

மனுதார் விடுவிக்கப்பட்டுவிட்டார். அவரிடமிருந்து கைப்பற்ற வாகனம், கட்டடத் தொகுதியின் ஒரு பகுதி, ஏராளமான ஆவணங்கள், கோப்புகள் அனைத்தும் பொலிஸாரிடம் உள்ளன. அவைகள் மனுதாரிடம் திரும்ப கையளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அரச தரப்பில் ஆஜராகியிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். விசாரணை அடுத்தவருடம் ஜனவரி 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாருக்கு தடுப்புக் காவலில் வைப்பதற்கான கட்டளை ஏதும் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சித்திரவதை செய்யப்படுவதிலிருந்து விடுவிக்கும் அவருக்குரிய அடிப்படை உரிமை சமத்துவம் மற்றும் சமத்துவ பாதுகாப்புக்கான உரிமை, தன்னிச்சையாகக் கைது செய்யப்படுவதிலிருந்தும் தடுப்புக் காவலில் வைப்பதிலிருந்தும் விலக்களிப்பதான உரிமைகளை பிரதிவாதிகள் மீறிச் செயற்பட்டிருக்கிறார்கள் என்று மனுதார் சார்பில் சட்டத்தரணி வாதிட்டார்.

2009 ஆம் ஆண்டு மனுதார் பொலிஸ் புலன் விசாரணைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். கொழும்பு நீதிவான் ஒருமுறை அங்கு வருகை தந்தபொழுது அவரிடம் மனுதார் முறைப்பாடு செய்தார். அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் குறித்து நீதிவான் அதிர்ச்சி வெளியிட்டதுடன் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு அவரை உட்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார். ஆனால் நீதிபதியின் கட்டளைப்படி புலனாய்வுப் பொலிஸார் செயற்படவில்லையென்று சட்டத்தரணி எடுத்துக் கூறினார். உயர் நீதிமன்றம் 9 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கும்படி உத்தரவிட வேண்டுமென மனுதாரர் கேட்டுள்ளார். (ப)

# சைவப் புலவர் பட்டமளிப்பு கொழும்பு தமிழ் சங்கத்தில்

கொழும்பு,நவ.12

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வெள்ளவத்தையில் உள்ள கொழும்பு தமிழ்ச் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத் தலைவர் மு.திரு ஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற சைவப் புலவர் தேர்வில் சித்தியடைந்த 7 சைவப் புலவர்களும் 23 இளம் சைவப் புலவர்களும் பட்டம் பெறவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் வாழ்த்துரையை யும், சைவப் புலவர் சங்க தேர்வுச் செயலாளர் க.செல்லத்துரை வரவேற்புரையையும் நிகழ்த்துவார்கள்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவரும் சைவசித்தாந்த முதுகலைப் பாடநெறி இணைப்பாளருமான பேராசிரியர் மா.வேதநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்குவார். அத்துடன் சைவப் புலவர் சங்கச் செயலாளர் கந்த. சத்தியதாசனால் எழுதப் பட்ட ''சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப் புலவர்களின் பங்களிப்பும்'' என்னும் நூலையும் வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.

தொடர்ந்து சென்னை இராமகிருஷ்ண மிசன் விவேகானந்தா கல்லூரிப் பேரா சிரியர் சா. சரவணன் சைவசித்தாந் தத்தில் அத்துவிதம்'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். நல்லை ஆதீன ஓதுவார் சி.தில்லைமணியின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறும். (வ-236)

# இந்து குருமார் ஒன்றியத்தின் எழுத்தாளர் அவை உருவாக்கம்

யாழ்ப்பாணம், நவ.12

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய எழுத்தாளர் அவை ஒன்று அண்மையில் யாழ். மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

மூத்த, இளைய சமய, தமிழ் எழுத்தாளர்களையும், அந்தண எழுத்தாளர்களாக உருவாக உள்ளோரையும் இணைத்து மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்வை உருவாக்கவும், ஆன்மீக எழுச்சியை அதிகரிக்கும் நோக்குடனும் இந்த எழுத்தாளர் அவை செயற்படும் என்று ஒன்றியத்தின் தலை மைச் செயலகத்தில் நடை பெற்ற இந்த நிகழ்வில் ஒன்றியத் தலைவர், சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தெரிவித் துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பிரதிப் பதிவாளர் நாயகம் பிரம்ம ஸ்ரீ ந.சதாசிவஐயர் உரையாற் றுகையில்:

இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான அவை உருவாக்கங்கள் மூலம், மக்கள் மத்தியில், சமய, ஆன்மீக விழிப் புணர்வை ஏற்படுத்தலாம்.-என்றார்.

இந்த நிகழ்வில், இந்து மத குரு பீடாதிபதி வந்தனிய சிவ ஸ்ரீ.ஐ. மகேஸ்வரக்குருக்கள், மூத்த எழுத்தாளர்களான சிற்பி சரவணபவன், சிவஸ்ரீ பிரண தாத்தீஸ்வரக் குருக்கள், முன்னாள் 'போரூட்' நிறுவன உயர் அதிகாரி எஸ்.சந்திரசேகர சர்மா போன்ற பல அந்தண எழுத்தாளர்கள் இதில் கலந்து கொண்டனர். (ம-29)

# மருந்துகளின் கட்டுப்பாட்டு விலையை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானம்

**சுகாதார அமைச்சர் தகவல்**

கொழும்பு,நவ.12

அடுத்த ஆண்டின் முதல் காலாண்டி லிருந்து மருந்துகள் தொடர்பாக கட்டுப்பாட்டு விலையை நடைமுறைப் படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் வர்த்தக அமைச்சு ஒருங்கிணைந்து நடைமுறைக்குக் கொண்டுவரவுள்ள இந்தச் செயற் திட்டத்தின் கீழ் மருந்து வகைகளின் விலைக் கட்டுப்பாடு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த ஆண்டில் வெளியிடப்படவுள்ளதாக அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற மருந்து நிறுவனங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்ட சந்திப்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

மருந்துகள் தொடர்பாக கட்டுப்பாட்டு விலை ஒன்று இல்லாமை காரணமாக அதிகரித்த விலைகளில் மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக பல காலமாகவே சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் மருந்துகள் தொடர்பான கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் மருந்துகள் தொடர்பாக விலைக் கட்டுப்பாடு ஒன்று நடைமுறையில் இருந்தது. ஆனால் 2002 ஆம் ஆண்டில் அது நீக்கப்பட்டது. அதன் காரணமாக பொது மக்களுக்கு ஒவ்வாத நிலைப்பாடு உருவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, மருந்துகள் தொடர்பாக விலை அட்டவணை ஒன்றைத் தயாரிக்குமாறு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ நுகர்வோர் செயற்பாடுகள் சம்பந்தமான அதிகார சபைக்குப் பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-22)

# அகில இலங்கை அ.தி.மு.கவின் ஆண்டு விழா

கொழும்பு,நவ.12

அகில இலங்கை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு ஆரம்ப விழாவை முன்னிட்டு சமூக சேவையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு புறக்கோட்டை நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எஸ்.எச்.எம். இதிரிஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மேல் மாகாண சபை ஆளுநர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஆரியரத்ன சத்தியாகோ, மேல் மாகாண சபை உறுப்பினர் ஜே.பி. ராம், லயன் முத்தப்பன் செட்டியார் உட்பட பலர் கலந்து கொள்வர். (ச-சி)

# சிறு குற்றச் செய்திகள்

மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடமாடிய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் மிருசுவில் வாசிகள் இருவருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழங்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை தனித்தனியாக விசரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை எதிரிகள் குற்றததை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதும் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

* * *

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியவாறு கொள்கலன்களில் மழைநீர்தேக்கி வைத்திருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றலில் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கபட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை நேற்று தனித்தனியாக விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்த தவறின் தலா இரண்டு 6 மாதங்கள் வீதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

இதே வேளை வீதியோரங்களில் குப்பை கொட்டிய ஐந்து பேருக்கு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுதத் தவறின் தலா ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

* * *

தென்மராட்சி பிரதேசத்தில் 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்தில் பொருள்கள் விற்பணை செய்த பெருமளவு வர்த்தகர்கள் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் வசமாக மாட்டிக் கொண்டனர். தீடீர் பரிசோதனையின் போது 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு சிகரட் விற்பனை செய்த போது பிடிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒரு தொகுதியினரை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர். 14 வர்த்தகர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைக் தனித்தனியாக விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைந் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

# வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களில் தொடரும் கற்றல் மொழிப் பிரச்சினை

கொழும்பு, நவ.12

வடக்கு, கிழக்கு பல்கலைக் கழகங்களில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் தமது முதலாவது பட்டத்தை மற்றும் பட்டப்பின் படிப்புப் பட்டத்தை அவர்கள் கற்பிக்கும் பல்கலைக் கழங்களிலிருந்தே பெற்றுக் கொள்கின்றனர்.

இதன் காரணமாக, அந்தப் பல்கலைக்கழகங்களில் கற்றல் மொழியை ஆங்கில மொழியாக்குவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது என்று கூறப்படுகிறது.

அந்த விரிவுரையாளர் தமிழ் மொழி மூலமாகவே கற்கைகளை மேற்கொண்டிருப்பதால் அவர்களது ஆங்கில அறிவு போதுமானதாக இல்லை எனவும் உயர் கல்வியமைச்சர் எஸ். பீ.திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைக்குரிய சிக்கலுக்கு தீர்வு காண்பது தொடர்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் கருமங்களை மேற்கொண்டுள்ள விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பட்டப்பின் படிப்பை பயிலுவதற்கான வாய்ப் பேற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித் துள்ளர்.

ஏனைய பல்கலைக்கழங்களில் கற்றல் மொழியை ஆங்கில மொழியாக்கிவிடும் செயற் பாடுகள் வெற்றிகரமாக மேற் கொண்டு செல்லப்படுவதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார வசந்தம்

# தொடரும் இழப்புகள்...

போர் மேகங்கள் சூழ்ந்து பொலிவற்று இருந்த காலங்கள் மாறினாலும் தமிழ் மகனின் தலைவிதி இன்னும் மாறவில்லை. பள்ளிப் பருவம் மாறும் முன்பே துள்ளித் திரியும் காலங்கள் துவண்டு போகும் போதைப் பாவனை மாணவ சமூகத்தில் தலைதூக்க ஆரம்பித்தது விட்டது.

இது சாதாரண போதையாக இல்லை. ஹெரோயின் வரை போய்விட்டது. யாழ்.பிரபல்ய பாடசாலைகள் மத்தியில் கண்டறியப்பட்ட விடயங்களை நினைக்கும் போதே எம் தலை விதியைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டி இருக்கின்றது. கண்ட றியப்படாத விடயங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ?

எதிர்கால சமூகத்தை இவ்வாறு விட்டால் எமது சந்ததியின் சரித்திரத்துக்கு சாவுமணி அடிக்காத? ஒவ்வொருவரும் சிந்தியுங்கள், இது சாதாரண விடய மல்ல. 18 வயதை தாண்டும் முன்பு செய்யும் தவறுகளுக்கு பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு பலருக்கு உண்டு. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், சமூக சேவையாளர்கள் என்று பல கட்டமைப்புக்கள் இதில் பங்கெடுக்கின்ற போது தான் இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

அவ்வாறானால் எப்படி இதைக் குறைப்பது! எதிர்காலச் சந்ததியை எப்படி வாழவைப்பது என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். போதை என்றால் என்ன? அதன் பக்க விளைவுகள் என்ன? பொருளாதார பாதிப்பு என்ன? உயிரோடு இருந்தும் உணர்வற்ற ஜடங்களாக போகும் நிலை என்ன? என்பது பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகளை மாணவ மத்தியில் ஒரு துருவத்தில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. ஏனெனின் சகபாடி கொண்டாட்ட உந்தல்களில், பின்னணிகள் தெரியாமல் பின் விளைவுகள் தெரியாமல் வீண்விரயமாக்கப்படும் மாணவ பொக்கிசங்களைப் பாதுகாக்க வேண்டும்.

மறு துருவத்தில் நோக்கும் போது நிலை தெரியாமல் நிழல் ஆடும் மாணவ பருவத்தின் நிலையை உணர்த்துவது பெருமளவு வெற்றியளிக்காது. ஆகையால் இணைபாடவிதான செயற்பாடுகள் போன்ற கலைத்திட்டம் தவிர்ந்த மாணவர்களின் விருப்போடு கூடிய கலையம்ப நிகழ்ச்சிகள், போட்டிகள், பெருவிளையாட்டுப் போட்டிகள் என சாதாரண நிகழ்ச்சி திட்டங்களுக்கு அப்பால் உடனடியாக பல நிகழ்ச்சி முன்னெடுப்புக்கள் போட்டிகளை ஆரம்பிக்க வேண்டும். இது பாடசாலை சமூகங்கள், இளைஞர் கழகங்கள், பொது நிறுவனங்கள், பொது அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான முன்னெடுப்புகள் மூலம் மாணவர்கள் போட்டிகளுக்கான பயிற்சிகளை முன்னெடுத்தல், ஒத்திகை பார்த்தல், போட்டிகளுக்கான ஒழுங்கமைப்பு செய்தல் என நேரத்தை விரயமாக்கும் போது ஓய்வுநேர சகபாடி கொண்டாட்டங்களை குறைத்து ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனையை வளர்க்க முடியும்.

மனித சிந்தனை என்னும் பண்புசார் அம்சத்தை உடனடியாக மாற்ற முடியாது. ஆனால் கால ஓட்டத்தில் விகிதாசார அடிப்படையில் மாற்றம் ஏற்படும்.

சமூகத்துக்கும் எமது சமூகத்தின் மாணவர்களுக்கும் தூர சிந்தனை, தொலை நோக்கு பார்வை என்பது குறுகிவிட்டது. இது இதற்கான வேறொரு காரணமாக அமையலாம். சுயமாக சிந்திக்கின்ற தன்மை சகபாடி நீரோட்டத்தில் செல்லாது விளைவுகளை விரிவாக சிந்திக்கின்ற தன்மைகள் வளர்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

போகின்றது போகின்றது எல்லாமே போகின்றது என்று சோர்ந்திடாது போரிடுங்கள் பிஞ்சுகளைக் காக்க. ✱

ஆர்.கே.மேனன்
ஆசிரியர்.

# போராட்டங்கள் எதற்காக உருவாகின்றன?

எங்கு புரிந்துணர்வில்லையோ அங்கே போராட்டம் உண்டு. எங்கே பற்றாக்குறை காணப்படுகின்றதோ அங்கேயும் போராட்டம் உண்டு. பற்றாக்குறையும் புரிந்துணர்வும் இரு நாணயத்தின் ஒரு பக்கங்கள் எனலாம்.

### தனிமனித போராட்டம்

எந்த மனிதனும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டுமென்றே எண்ணுகின்றான். இது நீதியானதும் நியாயமானதுமே. இந்த நிம்மதியான வாழ்வுக்குத் தடையாக இருப்பது பற்றாக்குறையே.

பற்றாக்குறை மனித வாழ்வில் நீக்கப்பட வேண்டும். பற்றாக்குறை என்றால் என்ன? சரீரப் பிரகாரமான காரியங்களை உள்ளடக்கியதுமான உணவு, உடை, உறைவிடம், கல்வி, சுகாதாரம், தொழிலின்மை இவை மனித வாழ்வில் அவசியமானதே. சிறு வயது முதல் மனிதனுக்குச் சீரான உணவு வகை தேவையாகவுள்ளது.

சீரான உணவு வகை இல்லையேல் ஊட்டச்சத்தின் குறைபாடுகள் காரணமாக மனிதன் பலவித மனவெழுச்சிக்கு ஆளாகும் நிலை ஏற்படும். இது மருத்துவ உலகின் அறிவுறுத்தலுமாகும். ஊட்டச்சத்தின் குறைபாடுகள் காரணமாக கோபம், எரிச்சல், பொறாமை என பலவித சரீர நோய்களுக்கும் மனிதன் ஆளாகின்றான். இவை மனிதனை ஆட்கொள்ளும்போது பலவித தீய சிந்தனைகள் உருவாகின்றன. கோபம் ஏற்படும்போது மனிதன் பேசத் தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்க நேரிடுகின்றது. தீய செயற்பாடுகளுக்குத் துணை போகவும், துணிந்து அவற்றைச் செயற்படுத்தவும் கோபம் துணை நிற்கிறது.

மனிதன் கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளப் புரிந்துணர்வோடு கூடிய ஊட்டச்சத்து தேவைப்படுகின்றது. சகல மனிதரும் ஊட்டச் சத்துணவை எங்கும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நியாய விலையில் மட்டுமல்ல. மலிவாகவும் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட வேண்டும். இது அரசின் கடமையாகும்.

### குடும்பம்

ஒரு குடும்பம் என்று பார்க்கும்போது கணவன் மனைவி பிள்ளைகள். இவர்கள் மத்தியில் ஏன் போராட்டம் உருவாகின்றது. இங்கும் பற்றாக்குறையும் புரிந்துணர்வுமே காரணமாக அமைகின்றன. குடும்பத் தலைவன் போதிய வருமானமின்றி இருக்கும்போது மனைவியின் கண்டனத்துக்கும் ஆளாகலாம்.

மனைவியின் கண்டனம் சரியானதே என்பதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். இங்கும் ஓர் புரிந்துணர்வை மனையாள் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. குடும்பத்துக்கு வருமானத்தைத் தேடித்தருபவர் கணவனே. குடும்ப அரசு குறைவின்றி நடைபெறவேண்டும். இதற்குப் பொருள் செல்வம் அவசியமானதே. இப்பொருள் செல்வத்தை கணவன் நீதியுடன் தேட வேண்டும். தான் தேடிய செல்வத்தை மனைவியின் கரத்தில் ஒப்புவிப்பதும் கணவன் தேடிய பொருள் செல்வத்தைத் தன் குடும்ப தேவைகளாகிய உணவு, உடை, உறைவிடம், கல்வி, பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக நல் வழிகளில் மனையாள் பயன்படுத்தும் விவரங்களைக் கணவனோடு அமைதியான வேளைகளில் பகிர்ந்து கொள்வதும் இதன் மூலம் சிறந்த புரிந்துணர்வு ஏற்பட வகைசெய்யும்.

நல்ல புரிந்துணர்வு ஏற்பட கணவன் தான் தேடிய பொருள் செல்வங்கள் சரியான முறையில் பிரயோகிக்கப்பட்டு வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றான். இதன் மூலம் பொருள் செல்வங்களைத் தேடுவதற்கும் தன் குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் ஓடி ஓடி உழைக்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகின்றது. எங்கு வருமானமில்லையோ அங்கு போராட்டம் தோன்றும். எங்கு புரிந்துணர்வில்லையோ அங்கும் போரட்ட முண்டு. குடும்ப போராட்டத்தை தடுக்கும் சக்தி அரசுக்குண்டு. எனவே போராட வைப்பதும் அரசே தான் எனக் கொள்ள இடமுண்டு. ஏன் போராட்டம் உண்டாகின்றது.

பற்றாக் குறையும் புரிந்துணர்வின்மையுமே போராடும் வழியைத் தோற்றுவிக்கின்றன. மனைவி, பிள்ளைகள் ஏன் சஞ்சலப்படுகிறார்கள். பற்றாக் குறையும் புரிந்துணர்வுமே காரணமாகின்றன. ஆகவே குடும்பத் தலைவன் நிலை தடுமாறினால் குடும்பம் தடுமாறும். பிள்ளைகள் பல கோணங்களில் திசை மாறிய மரக்கலத்தில் கொப்பாகலாம். பிள்ளைகள் தங்களுக்குரிய ஆறுதலையும் அரவணைப்பையும் தேடிக் கொள்வதற்கு சேராத இடங்களில் சேரும் வாய்ப்பைக் குடும்பத் தலைவன் தலைவியாகிய நாமே காரணராக அமைகின்றோம். பிள்ளைகளின் தடுமாற்றம் அவர்கள் சந்ததியின் தடுமாற்றமாகவும் அமைகின்றது. சிந்திப்போமா? செயற்படுவோமா?

நம்மில் பலவித நோய்கள் குடிகொள்வதற்கும் பற்றாக்குறையும் புரிந்துணர்வின்மையுமே காரணமாகின்றது. ஏனெனில் நமது முன்னோர் புரிந்துணர்வின்மையின் காரணமாகப் பலவித குறைபாடுகளுக்குள்ளாகியிருக்காலம். அதன் மூலம் பரம்பரை வியாதிகளுக்கு ஆளாவதும் பற்றாக் குறையும் புரிந்துணர்வுமே காரணமாகும். எனவே பற்றாக் குறை மனித சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். சகல மனிதரும் தங்கு தடையின்றிச் சத்துள்ள உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட வேண்டும்.

ஊட்டச் சத்தின் குறைபாட்டால் ஏற்படும் நோய்களிலிருந்து மனித குலம் காக்கப்பட வேண்டும். நாட்டில் உயர் அந்தஸ்திலிருப்பவர்கள் பெற்று க் கொள்ளும் அனைத்து வைத்திய. வசதிகளையும் சமூகத்தின் அடிமட்டக் குடிமக்களும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பின் மூலம் குடும்ப மகிழ்ச்சி பற்றாக்குறை நீக்கப்படலாம். இன்று சூழல் மாசடைவதும் இயற்கையின் சீற்றங்களுக்கான காரணமென அறிந்தும் அறியாதவர்கள் போல் மக்களும் உலகமும் முழுமையாக கருத்தில் கொள்ளாதவர்கள் போல் தங்கள் செயற்பாடுகளை ஏனோ தானோ என்ற நிலைப்பாட்டிலேயே செயற்பட்டு வருவதையே காண முடிகின்றது. நாம் தேடும் அறிவு, நாம் தேடும் செல்வம் சூழல் மாசடைவதற்கும் இய்றகையின் சீற்றம் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகின்றனவா? இவ்விடயத்திலும் நம் புரிந்துணர்வுக்கும் தெளிந்த சிந்தனைக்கும் இடமளிப்போமா? கிறிஸ்தவ வேத வாக்கியம் கூறுவதுபோல் கோடரிகளை ஓங்கி சோலையில் மரங்களை வெட்டுபவன் பெயர் பெற்றவனாகிறான். சிந்திப்போமா?

### உறைவிடம்

உறைவிடம் என்பது மனிதனுக்கு மிகவும் அவசியமானதே அன்றாடம் உழைத்துக் களைத்து வரும் மனிதன், தன் மனைவி மக்களிடம் ஆறுதல் பெற வேண்டியவனாகிறான். குடும்பத்து உறவுகளோடு ஒன்று சேர்ந்து வெளியிலுள்ள அன்றாட நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும் நிம்மதியாகத் தன்னையும் தன் குடும்பத்தையும் தயார்படுத்தவும் உறைவிடம் அவசியமாகின்றது. இன்றும் கிராமப் புறங்களிலும் நகரப் புறங்களிலும் வீடற்ற மக்கள் விடும் கண்ணீர் வெளியில் தெரிவதில்லை. உறைவிடம் இல்லாத மனிதன் நிம்மதியற்ற மனிதன். இந்த நிம்மதியை பற்றாக் குறையை நிவர்த்தி செய்பவர் யார்?யார்? யார் அரசே எனக்கொள்ளலாமா?

புரிந்துணர்வும் பற்றாக் குறையும் எங்கு தன் கோரக் கரங்களை விரிக்கிறதோ அங்கே போராட்டம் உருவாகும். தனி மனித போராட்டம் குடும்ப போராட் ட

திருவரங்கன்

மென்று உருவாகிச் சமூகப் போரட்டமாக மாறி அரசியலுக்குள் கலந்து விடுகிறது.

புரிந்துணர்வில்லாத அரசியலால், அரசியல் வாதிகளால் நாட்டைச் சமாதானத்தோடு ஆட்சி செய்ய முடியாது. பல இன மக்கள் வாழும் நாட்டில் சம உரிமை அற்றுப் பற்றாக்குறை ஏற்படின் கேள்விக் கணைகளை மக்கள் வீசவே செய்வர். எனவே புரிந்துணர்வு எங்கே இருக்கிறதோ அங்கே சமாதானம் உண்டு. எங்கே பற்றாக்குறை களையப்படுகிறதோ அங்கேயும் சமாதானம் உண்டு. எனவே புரிந்துணர்வைப் பெற்றும் பற்றாக்குறை நீங்கியும் மனித குலம் மாண்புற்று வாழ புரிந்துணர்வோடு செயற்படுவோம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 நவம்பர் 2011 சனிக்கிழமை

# வார வசந்தம்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர் களுடன் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள். கருணை உள்ளத்தோடு சிலருக்கு உதவுவீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும் சரி யான நேரத்திற்கு முடிப்பீர்கள். மதிப்பு, கௌரவம் மேம்படும்.

**இடபம்:** வெளியூர்களில் இருந்து சங்கடம் தரும் சந்தோஷம் தரும் செய்தி கேட்கலாம். சேமித்த பணத்திற்கு திடீரென செலவு ஏற்படலாம். அரசு காரியங்களில் அலைச்சல் இருந்தாலும், அனுகூலமாக முடிவுக்கு வரும். நீங்கள் தவறாக சில வேலைகளைச் செய்து விட்டு, குடும்ப உறுப்பினர் களிடம் கோபத்தைக் காட்டுவீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**மிதுனம்:** சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். உங்களின் சாதுர்யமான செயற்பாடுகளை பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படுவர். நண்பர்கள் சிலர் உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்க லாம். சகோதரிகள் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**கடகம்:** இதுவரை வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டுக்கு வரலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். புதிய பொருள் ஒன்றை வாங்க திட்டம் போடுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். முக்கிய வேலை ஒன்றை முடிக்க நீண்ட நேரம் காத்திருக்கலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும்.

**சிம்மம்:** உடல் உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் கவனம் அவசியம். நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் வெளியூர் ஒன்றுக்கு செல்லும் வாய்ப்பு உருவாகலாம். உறவினர் ஒருவரை எதிர் பாராமல் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். மருத்துவ செலவுகள் நேரலாம்.

**கன்னி:** இறைவழிபாட்டின் மூலம் இன்னல்களைக் குறைக்க வேண்டிய நாள். சக ஊழியர்களுடன் வாக்கு வாதங்களைத் தவிர்க்க வேண்டும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். நீங்கள் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல், சிலர் கையை விரிக்கலாம். வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம்.

**துலாம்:** தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி பெறலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் சிலர் உங்களை உற்சாகப்படுத்தும் வகையில் பேசலாம். விருந்து, உபசரிப்புகளால் மகிழ்ச்சி, உற்சாகம் பெறுவீர்கள். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெண்கள் பிறந்த வீட்டின் உதவி பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். உடன் பிறப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். அடுத்தவர் விவகாரங் களில் தலையிடாமல் இருப்பது நல்லது. உங்களின் அந்தஸ்தை நினைத்துப் பார்த்து அதற்கேற்ற காரியம் ஒன்றைச் செய்வீர்கள். தேக பராமரிப்பு விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** எதிலும் ஒரு பிடிப்பு இல்லாமல் வெறுப்புடன் செயற்படுவீர்கள். நீங்கள் எதிர்பார்க்கும் வேகத்திற்கு, சில வேலைகள் நடக்காமல் மந்தமாக நடக்கலாம். நண்பர்கள் சிலர் உங்களிடம் யோசனை கேட்கலாம். சிவாலய வழிபாட்டின் மூலம் சிறப்புக்களைப் பெறலாம். பணவரவு ஒன்று வந்தாலும், அது உடனே கைக்குக் கிடைக்காமல் தடைப்படலாம்.

**மகரம்:** திட்டமிட்ட வேலை ஒன்றை சரியான நேரத்துக்கு முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந் திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை முக்கிய விடயமாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவீர்கள். உறவினர்கள் சிலர் உங்களை உதாசீனப் படுத்தும் வகையில் பேசலாம். நண்பர்களுக்கு தெரிந்தவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

**கும்பம்:** இரண்டு நாள்களாக தடைபட்ட காரியம் ஒன்று இன்று வெற்றிகரமாக முடியும். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். சிலரிடம் சாமர்த்தியமாகப் பேசி உங்களுக்கு வேண்டியதை சாதிப்பீர்கள். உறவுகள் வலுக்கும் நாள்.

**மீனம்:** உறவினர்கள் தொடர்பான வேலை ஒன்றுக்காக அலையலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். அரசியல்வாதிகளுக்கு திட்டமிட்ட காரியங்கள் நடக்காமல் இழுத்தடிக்கலாம். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு செல்லலாம். குடும்ப உறுப்பினர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம்.

# புத்தகசாலை

## நூல்: ஆசிரியத்துவ வாண்மைத் தேர்ச்சிகள்
## வெளியீடு: கொழும்பு லங்கா பதிப்பதிகம்



ஆசிரியர்களின் கல்விச் செல்நெறிகள் வேகமான, விவேகமான வளர்ச்சிக்குள்ளாகியிருக்கும் இன்றைய காலத்தில் வேலைப் பளுவைக் குறைத்து வினைத் திறனை அதிகரிக்கும் அவசியம் உள்ளது. ஆசிரியர்கள் சுயமாக வாண்மைத் தேர்ச்சிகளை அடையும் வகையில் ஊக்கம் தரும் வாய்ப்புகளை ஏற்படுத்த வழிசெய்வதே கல்வியற் கல்லூரி விரிவுரையாளரும் முதிர்ச்சி மிக்க முன்மாதிரிக் கல்வியியலாளருமான தனபாலன் அவர்களின் இந்த நூலின் பிரதான நோக்கமாகும்.

ஆசிரியரின் வகிபாகங்கள், அவரது கற்பித்தல் கலையின் நுட்பங்கள் பற்றிய ஆய்வுகளுடன் ஆசிரிய வாண்மை விருத்தியை வளம் செய்யும் வழிகள் குறித்தும் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர் யார்? என்ற வகையில் இனங் காணப்படுவதற்கும் ஆசிரியராகப் பணியைத் தொடர்வதற்கும் தனது ஆசிரியத் தொழிலின் வாண்மையை விருத்தி செய்ய வேண்டும் என்பதை நூலின் பக்கங்கள் ஆதரங்களோடு அழுத்தி உரைக்கின்றது.

ஆசிரிய மாணவர்களுக்கும், ஆசிரியப் பணியைத் தொடரும் யாவருக்கும் ஆசிரிய வழிகாட்டிகளுக்கும். இந்நூலில் நிறைவான கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் யாவருமே படித்துப் பயன்பெறச் சிறந்தொரு கைந்நூல் இதுவாகும்.

நூலின் அமைப்பும் அட்டைப்பட அழகும் வாசிக்கத் தூண்டும் உரைநடையும் கொண்ட நூலின் வரவு ஆசிரிய உலகத்துக்கு உதவி நிற்கும் என்பது நிச்சயமாகும்.

தர்மினி-

## நூல்: சைவசிந்தாந்த வினாவிடை
## வெளியீடு: கொழும்பு திருவருள் வெளியீடு




கலாநிதி க.கணேசலிங்கம், அவர்களின் "சைவ சிந்தாந்த வினாவிடை" எனும் நூலினை கொழும்பு திருவருள் வெளியீடு; சைவ மாணவர்களின் பயன்கருதி வெளியிட்டுள்ளது.

வடமொழியிலும், செய்யுள் நடையிலும் அமைந்துள்ள சைவசிந்தாந்தம், ஒருசைவப் பெரு நெறியாகும். அதனைக் கற்றறிந்து கொள்வதில் தொடக்க நிலையிலே தோன்றும் இடர்பாடுகளை நீக்கும் வகையில் இலகு தமிழில் வினாவிடை வடிவில் எழுதி நூலாசிரியர் இதனை வெளியிட்டுள்ளார்.

காலத்தின் தேவை உணர்ந்தும் சைவர்களின் அறிவு விருத்திக்கும் பக்திப் பயன் விளைக்க எழுதப்பட்ட நூலிதுவாகும். முப் பொருள் இயல்புகளையும் தெளிவாக இது விளக்குகின்றது.

கொள்கை விளக்கம் மாத்திரமன்றி சிவாலயம், சிவமுகூர்த்தங்கள் பற்றியும் வினாவிடை வடிவில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. கடவுளை வழிபடச் சைவசிந்தாந்தம் தரும் உண்மைகள் கற்றலுக்கு மாத்திரமன்றி ஆன்மிக தத்துவங்களை விளக்கிக் கொண்டு திருக்குறள், முதலான நல்நெறி நூல்களின் வழிவாழவும் வழி காட்டுகின்றது.

சைவசிந்தாந்தம், கடவுள், உயிர், ஆணவம், கன்மம், மாயை, தத்துவங்கள், அருட்டிருமேனி, இறை உயிர் உறவு பந்தமும் வீடும் திருவைந் தெழுத்து சிந்தாந்த நூல்கள் என்று பல விடயங்களை வினாவிடைகள் மூலம் விளக்கம் தரப்பட்டுள்ளன.

இது விரைந்ததோர் அறிவைத் தரும் சைவசிந்தாந்த வினாவிடை நூல் என்பதால் சைவத்தைக் கற்கும் மாணவருக்கும் கற்பிக்கும் ஆசிரியருக்கும் பயனுடையதாகும்.

மகேந்திரன்-

## நூல்: இந்தத் தீபாவளி தேவைதானா
## வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்




முதுபெரும் கவிஞரும் எழுத் தாளருமான ச.வே.பஞ்சாட்சரத்தின் "இந்தத் தீபாவளி தேவைதானா?" என்னும் சிறுகதைத் தொகுதி நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. பாப்புனையும் ஆற்றல் நிரம்பவே பெற்றிருக்கும் கவிஞர் அவர்கள். சிறுகதைத் தொகுப்புக்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார். ஐம்பதுக்கும் அதிகமான நூல்களை வெளியிட்டுப் புகழ் பெற்றவர். இலக்கியப் பணிகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றார். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் ஒருங்கே சிறப்புற்றிருக்கும் அவரது சிறுகதைத் தொகுப்பை தமிழ்நாடு மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டுள்ளது. மக்களிடத்தில் கடவுள் நம்பிக்கையை வளர்த்து அவர்களின் துன்ப துயரங்களுக்கு ஆறுதல் தேடும் மருந்தாக்கிச் சிறுகதைகளாக வடித்து தந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கதாக உள்ளது.

"இந்தத் தீபாவளி தேவைதானா?" என்ற வினாக் குறியிட்ட தலைப்புச் சிறுகதையானது கடவுள் நம்பிக்கையின் அவசியத்தை முன்னிறுத்தியுள்ளது. இன அழிப்புக் கொடுமைகளால் அஞ்சித் தவிக்கும் மக்கள் பாவம் தவிர்த்து பாவமன்னிப்பு தேச விடுதலை வேண்டி கடவுளை வழிபடும் நோக்குடன் செயற்படக் குருமாரும், ஆன்மிக வாதிகளும் முன்னின்று உழைக்கத் தூண்டவேண்டும் என்பதை இந்தக் கதை மூலம் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் தலைவர்களாலும், ஆயுதக் குழுக்களாலும் வல்லரசுகளாலும் ஏன் கடவுள்களாலும் ஏமாற்றப்பட்டுத் தர்மத்தை விலக்கி வாழ்ந்ததாலேயே தமிழினம் வஞ்சிக்கப்பட்டது. எனவே தர்மத்தைக் காத்து வன்முறைகளை விடுத்து கடவுள் நம்பிக்கையோடு வாழுங்கள், வளருங்கள் என்ற நற்கருத்துக்களை தருவனவாகக் கதைகள் வாசிப்பவரை ஈர்க்கின்றன.

"வேண்டுதலும் சீண்டுதலும்", "அதிர்ச்சி வைத்தியம்", "இன்பத்திலும் துன்பத்திலும்", "புதிய தளம் புதியவழி" போன்ற சிறுகதைகள் யாவுமே கடவுள் நம்பிக்கையை வலியுறுத்துகின்றன.

அகந்தைப் பித்தேறிய எழுத்தாளன் வாசகனை எதிர்பார்ப்பது வன்முறை வழிமுறை, புகழ் வேட்கையாலோ, காசுக்காகவோ, கட்சிப் பிரசாரத்துக்காகவோ யார் யாரையோ மகிழ்விப்பதற்காகவோ, வாசகனின் சுயசிந்தனையை மூச்சடங்க வைத்து தன் கொள்கையை நிலை நாட்டி விடுவதற்காக வலிந்து திரட்டப்பட்ட நியாயங்களைச் சரமாரியாக முன் வைப்பது மூளைச் சலவை வழிமுறை என்பதை விளக்கும் "அழிக்கும் பிரமாக்கள்" சிறுகதை.

ஊடகவியலாளர்களின் நடுநிலை குறித்தும், பத்திரிகைகளில் ஏற்கப் படுபவை ஏற்கப்படாதவை குறித்தும் உண்மைகளை வெளிப்படுத்துவதன் அவசியம் குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளார். எழுத்தாளனை விரட்டும் மொட்டைக் கடதாசிகள் பற்றியெல்லாம் அஞ்சத் தேவையில்லை என்பதாய் விரியும் கதை வாசகனை - எழுத்தாளனை உற்சாகப்படுத்துகிறது.

தொகுப்பிலே உள்ள பத்துக் கதைகளும் சிறுகதைக்குரிய பண்புகளோடு படைக்கப்பட்டுள்ளமை அவரது சிறுகதை ஆற்றலை வெளிப் படுத்துகிறது. தற்பொழுது கனடாவில் வசிக்கும் நூலாசிரியர் இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து தமிழுக்கு மேலும் நல்லாக்கங்களைத் தர வேண்டுகிறோம்.

மகேஷ்-.

**புத்தகசாலைப் பகுதிக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்பி வைத்தால் அவை தொடர்பான விவரம் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார வசந்தம்

## காக்கை கேட்ட வரம்

அடர்ந்து வளர்ந்திருந்த ஆலமரம் ஒன்றில் காகம் ஒன்று கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அது அளவுக்கு அதிகமாக ஆசைகொண்ட பேராசை பிடித்த காகம். பிறரிடம் இருப்பதெல்லாம் தன்னிடம் இல்லையே என்று வருந்தும் காகம். அவனைபோல் இருந்தால் நன்றாக இருக்கும்; இவனைப் போல இருந்தால் சுகமாக வாழலாம் எனத் தன் தகுதிக்கு மீறிய ஆசைகளை வளர்த்துக் கொண்டு அல்லல்களை அதுவே தேடிக் கொண்டது.

ஒருநாள் அந்தக் காகம் கிளி ஒன்றைக் கண்டது. கிளியின் அழகும் சிவந்த மூக்கும் அதனைக் கவர்ந்தன. காகம் கிளியை நினைத்துப் பொறாமைப்பட்டது. 'நாமும் இருக்கிறோமே; கன்னங்கரேலென்று! இருந்தால் இந்தக் கிளியைப் போல அழகாக இருக்க வேண்டும்.இல்லையேல் பிறந்திருக்கவே கூடாது' என்று வருந்தியது.

இறுதியில் அது ஒரு முடிவு எடுத்தது. கடவுளிடம் தவமிருந்து வரம் பெறலாம் என்பதே அந்த முடிவு. தன் நினைப்பை உடனே செயலாக்கவும் செய்தது. அன்றே இறைவனை நினைத்து ஒற்றைக் காலில் நின்று தவமிருக்க ஆரம்பித்தது.காலங்கள் சென்றன. கடவுளும் மனமிரங்கி காக்கைக்கு காட்சி தந்து ''என்ன வரம் வேண்டும்?'' என்று வினவினார்.

காக்கை மகிழ்ச்சியில் துள்ளி குதித்து ''கடவுளே! என் தவத்துக்கு மெச்சி வருகை தந்ததற்கு நன்றி! என்னுடைய ஒரே குறிக்கோள் நான் கிளி மாதிரி அழகாக சிவந்த மூக்குடன் பச்சை நிறமாக மாற வேண்டும். அதற்காகத்தான் தவமிருந்தேன்'' என்றது.



கடவுளும் ''நன்றாக யோசித்துதான் கேட்கிறாயா? இதனால் ஏற்படும் விளைவுகளை யோசித்தாயா?'' என்று கேட்டார். காகம் ''நான் நன்றாக யோசித்துதான் கேட்கிறேன்'' என்று சொன்னது. சரி காகத்துக்குப் பாடம் புகட்டுவோம் என்று நினைத்த கடவுள் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி விட்டு மறைந்து விட்டார்.

மறுநிமிடம் காகம் கிளியைப் போல மாறிவிட்டது. ஆனால் அதன் உருவம்தான் மாறியது. குரல் மாறவில்லை. அதன்பின்..

(தொடரும்)

## அகர வரிசையில் வினைச் சொற்கள்

**''ஈ'' சொற்கள்**

| | |
|---|---|
| ஈரமாக்கு | - Moisten |
| ஈடுசெய் | - Recompense/Recoup |
| ஈடுபடுத்து | - Involve- |

**''உ'' சொற்கள்**

| | |
|---|---|
| உடன்படு | - Agree/Assent |
| உறுதிகூறு | - Assure/Certify |
| உரிமைகோரு | - Claim |
| உருவாக்கு | - Create/Materialize |
| உடன்படாதிரு | - Disagree |
| உயர்த்து | - Elevate |
| உறுதிப்படுத்து | - Ensure |
| உரிமைகொடு | - Entitle/Licence |
| உணவூட்டு | - Feed |
| உவகை செய் | - Gratify |
| உயர்வாக்கு | - Heighten |
| உணர்ச்சியூட்டு | - Impassion |
| உட்செலுத்து | - Inject |
| உயரதூக்கு | - Lift |
| உற்பத்திசெய் | - Manufacture |
| உரமிடு | - Manure |
| உட்படு | - Permeate |
| உருகு | - Melt |
| உழு | - Plough/Plous |
| உச்சரி | - Pronounce/Prong |
| உத்தேசி | - Propose |
| உருவகப்படுத்து | - Shape |
| உயிர்வாழ் | - Thrive |
| உழை | - Toil |

எஸ்.கிருசா,
புலோலி.

(வளரும்)

## துருக்கி

துருக்கி ஆசியா,ஐரோப்பா கண்டங்களுக்கு இடையில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இதன் தலைநகரம் அங்காரா ஆகும். இஸ்தான்புல் துருக்கி நாட்டின் மிகப்பெரிய நகரம் ஆகும்.

இங்கு துருக்கி மொழி பேசப்படுகிறது. துருக்கியின் மிகப்பெரிய தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த நகரங்களாக இஸ்தான்புல், பொஸ்பொரஸ் ஆகியன விளங்குகின்றன. மேற்குப் பகுதியில் ஐரோப்பிய நிலமாகவும், கிழக்கு பகுதி ஆசிய நிலமா




கவும் புவியியல் ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பகுதிகளையும் இணைக்கும் பிரமாண்ட மேம்பாலம், மனிதனால் கட்டப்பட்ட அதிசயங்களில் ஒன்று. இது இன்னொரு பக்கம், துருக்கியின் கலாசாரத்தை பிரதிபலிக்கிறது. மேலைத்தேய கலாசாரமும், கீழைத்தேய கலாசாரமும், லிபரல் சித்தாந்தமும் இஸ்லாமிய மதமும் என்று நாடு முழுக்க இருவேறுபட்ட உலகங்களைக் காணலாம்.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## விடுகதைகளும் விடைகளும்

01.நாடென்றும் பாராது, காடென்றும் பாராது நீரென்றும் பாராது, நிலமென்றும் பாராது ஓடும் உலாவும் உடம்பில்லை அது என்ன?
02.மரத்தில் பூத்த பூவானாலும் பூசைக்கு உதவாத பூ அது என்ன?
03.ஓடையில் ஓடாதநீர்; ஒருவரும் குடிக்காத நீர் அது என்ன?
04.விரிந்த தட்டில் நிறைந்த பலகாரங்கள் விருந்துக்குத்தான் ஆளில்லை அது என்ன?
05.ஒரு குப்பியில் இரண்டு எண்ணெய் அது என்ன?
06.முன்னால் ஓடுவான் பின்னால் ஓடமாட்டான் அவன் யார்?
07.வெப்பத்தைக் கண்டு கண்ணீர் வடிப்பான். அவன் யார்?
08.இந்த ஊரில் அடிபட்டவன் அடுத்த ஊர் போய்ச் சேர்வான் அவன் யார்?
09.எரிப்பான் ஆனால் எரியாதவன் அவன் யார்?
10.நீந்தத் தெரியும் மீனல்ல. நடக்கத் தெரியும் மனிதனல்ல. இறக்கையுண்டு தேனி அல்ல. இறகு உண்டு பறக்காது அது என்ன?

**விடைகள்**

1.காற்று 2.வாழைப்பூ 3.கண்ணீர் 4.நட்சத்திரங்கள் 5.முட்டை 6.கடிகாரம் 7.மெழுகுதிரி 8.தந்தி 9.சூரியன் 10.வாத்து


சா.பபிதா,
தரம் 8A
யா/கோண்டாவில் இராம கிருஸ்ண மகா வித்தியாலயம்

## பட்டுப்பூச்சி

பட்டுப்பூச்சி! பட்டுப்பூச்சி! நீ
எங்கிருந்து வந்தாயோ?
நல்ல மழை நாளில்
வானிலிருந்து வீழ்ந்தாயோ?
வீழ்ந்ததாலே சிவந்து
ரோஜா
இதழ்போல் - நீ
ஆனாயோ?
எங்களோடு மகிழ்ந்து
விளையாடிச் செல்ல
வந்தாயோ?



ஆ.அகிலன்
தரம்-6




உடுப்பிட்டி தென்னிந்தியத் திருச்சபை பாலர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டு விழாவின் போது சிறார்களின் பாண்ட் வாத்திய இசையும், இசையும் அசையும் நிகழ்வும் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் சிகரத்துக்கே எம்மை ஏற்றி வைத்த பேனாவை புறந்தள்ளலாகாது







■ அருணா தருமலிங்கம்,

"வாள் முனையை விடப் பேனா முனை கூர்மை யானது" என்பது காலத்தால் அழியாத உண்மையாகும்.

ஏலவே மிலேனியம் ஆண்டாக மிளிரும் இன்றைய கணினி யுகத்திலும் பேனாவின் தாற்பரியங்கள் சிலவற்றை ஆராய்வது நன்மை பயக்கும் எனலாம்.

இன்று கூடப் பேனாவை தினந்தோறும் உபயோகிப்போர் பட்டியலில் மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்கள், மருத்துவர், பொறியியலாளர், தொழில் நுட்பவியலாளர், நீதிபதி, சட்ட வல்லுநர்கள், அதிபர், ஆசிரியர், கணக்காளர், உப வேந்தர், அடங்கலாக இன்னும் பலர் உள்ளனர் எனலாம்.

பேனா பயன்படுத்துவோரின் கைகளின் அசைவுக்கேற்ப தனித்துவமாக நின்று செயலாற்றக் கூடிய வல்லமை இதற்கு உண்டு என்பதை மறுக்கவோ மறைக்கவோ இயலாது எனலாம்.

பேனாக்களால் நீலம், கறுப்பு, சிவப்பு, பச்சை போன்ற வர்ணங்களில் எழுதவும் ஏன் சித்திரங்கள் வரையவும் முடிகின்றது. சிவப்புப் பேனாவை அதிகமாக ஆசிரியர்கள் பரீட்சையின் பின் மதிப்பெண் வழங்குவதற்குப் பயன்படுத்துகின்றனர். அதே வேளை கணக்குப் பரிசோதனையில் ஈடுபடுவோர் பாவனைக் கென்று பச்சைப் பேனாவைத் தம்வசம் வைத்துக் கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

பேனாக்கள் எத்தனையோ வடிவங்களில் உலாவித்திரிகின்றன. முற்காலத்தில் கல்வெட்டுக்களில் எழுதினார்கள். சங்க காலமும் அதனைத் தொடர்ந்து பிற்காலங்களிலும் எழுத்தாணி கொண்டு ஓலைகளில் எழுதப்பட்டதாக நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். இதிகாசங்கள் இரண்டும் தமிழனின் ஒப்பற்ற நீதி நூலான திருக்குறளும், தொல்காப்பியமும் இவ்வாறு எழுதப்பட்டவையே எனலாம்.

எழுத்தாணியை அடுத்து எழுதுகோல் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை அடுத்து ஊற்றுப்பேனாவை 1484 ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த லூயிட்ஸ் வார்ட்டர்மன் என்பவர் கண்டுபிடித்தார். இதனை அடுத்து காய்ந்த மை பேனாவை அமெரிக்கரான ஜோன் ஜே லெனெட் எண்பவர் 1888இல் கண்டு பிடித்தார்.

இதனைக் குமிழ்முனைப் பேனா என்றும் அழைப்பதுண்டு. தற்போத நமது நாட்டில் குமிழ் முனைப் பேனாவையே எல்லோரும் எழுதுவதற்கு உபயோகிக்கின்றனர். இது இலங்கையில் சுமார் ஐந்து தசாப்த காலங்களுக்கு முன்னரே விற்பனைக்கு வந்துவிட்டது.

நம் நாட்டில் இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் கூட பேனா முனைகளைக் கொண்டு மையைத் தொட்டு எழுதும் பழக்கம் இருந்தது. ஆனால் இன்றைய நவீன யுகத்தில் எத்தனை விதங்களில் பேனாக்கள் கிடைக்கின்றன. மிக நுண்ணிய முனை கொண்ட பேனாக்கள் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளதை யும் காணக்கூடியதாக உள்ளது.

உங்களுடைய எழுத்துக்கள் அழகாக இல்லை என்றால் பேனாவை சரியான முறையில் பயன்புடுத்தவில்லை என்று அர்த்தம் கொள்ளலாம். "சித்திரமும் கைப் பழக்கம்" என்று ஔவைப்பாட்டியார் சும்மாவா கூறினார். எல்லாமே உங்கள் கைகளில் தான் உள்ளன.

அந்தக் கால கட்டங்களில் உயர்நீதி மன்றங்களில் மரணதண்டனை குறித்து ஒரு தீர்ப்பு வழங்கப்படும்போது நீதிபதியால் பேனாவின் எழுதுமுனை மேசையின் மீது குத்தி உடைக்கப்பட்டதையும் நாமறிவோம்.

மரணதண்டனைக் கைதி உயிரை விடுவதற்கு முன்பாகவே 'கோர்டில்' குழுமியிருக்கும் அத்தனை பேர் முன்னிலையிலும் பேனா தன்னுயிரை விடுவதும் துரதிஷ்டம்தான்.

இனிப் பேனாவால்எழுதப்படும்கவிதை, கட்டுரை, என்பனவற்றால் சிலருக்கு கொலைமிரட்டல் விடுவிக்கப்படுகின்றது. சல்மான் ருஷ்டி, வங்காளத்து தஸ்ஸிமா நஸ்ரின் போன்ற எழுத்தாளர்கள் நாடுகடத்தும் அளவுக்கு ஆளானார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பன அபரிமித முன்னேற்றம் கண்டுள்ளதனால் மக்கள் பேனாவுக்கு ஓய்வு கொடுத்துவிட்டனர் என்றும் கூறலாம். காரணம் எழுத்து மூலமான சகல தஸ்தாவேஜுகளும் 'கம்யூட்டர்' மூலம் 'டைப்' செய்யப்படுகின்றன. காணி உறுதி கூடத் தற்பொழுது கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது.

எது எப்படியிருப்பினும் எம்மை வாழ்க்கையின் சிகரத்துக்கு உயர்த்திவிட்ட பேனாவைப் புறந்தள்ளாது அதற்குரிய கௌரவத்தை வழங்க வேண்டியது கற்கைநெறிகளை மேற்கொண்டவர்களது தலையாய கடமையாகும்.



# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது






(சென்றவாரத் தொடர்ச்சி)

நேபாள மக்களுக்கு அருளாட்சி வழங்கும் பசுபதிநாதரின் நான்கு முகங்களும் வாசல்களினாலும் தரிசித்து வணங்கினோம். (ஐந்தாவது முகம் மேல்நோக்கி அமைந்துள்ளது) ஒவ்வொரு வாசல்களிலும் ஒவ்வொரு பண்டாக்கள் அதாவது நான்கு பண்டாக்கள் (பூசகர்) நான்கு பக்கங்களிலும் நின்று பூசை செய்கின்றார்கள். நேபாளம் உருத்திராட்சங்களின் தாயகம் ஆகும். ஆலிய பண்டாக்களும் ஒருவர் சிவலிங்கப் பெருமானுக்கு உருத்திராட்ச அபிஷேகம் நிறைவேற்றி அந்த உருத் திராட்சங்களை எமக்கு அணிந்தார். இந்தக் கோயிலில் 1008 சிவலிங்கங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அவற்றையும் தரிசித்து வழிபட்டோம்.

பசுபதி நாதரின் தரிசனம் நிறைவேறிய பின்னர் புத்த நீல் கண்ட விஷ்ணு ஆலயம், சுயம்பு புத்த கோயில், கிருஷ்ணர் கோயில், குஹேஸ்வரி அம்பாள் ஆலயம் ஆகிய வற்றைத் தரிசனம் செய்தோம்.

புத்தநீல் கண்டர் நான்கு பக்கங்களும் மதில்களால் சூழப்பட்ட தடாகத்தின் மத்தியில்15 அடி அகலமும் 05 அடி அகலமும் கொண்ட இடத்தில் பாம்பின்மேல் பள்ளி கொண்ட பரந்தாமனாக அருட்காட்சி நல்குகின்றார்.

இத் தடாகத்தின் மேற்பகுதியில் கூரைகள் எவையும் இல்லை. காவி நிறத்தையுடைய வஸ்திரமொன்று மட்டும் கட்டப்பட்டிருந்தது.

பந்தல் போன்ற அந்த இடத்தில் விஷ்ணு பகவான் வானத்தை நோக்கிய வண்ணம் பள்ளி கொள்கின்றார்.

இவரைப் புத்த பெருமான் என எல்லோரும் வணங்குகின்றார்கள். ஆனால் இவர் இடது திருக்கரத்தில் சங்கை வைத்திருக்கின்றார் .

புத்தநீர்கண்ட வில்லை பெருமானைத் தரிசித்து வணங்கி அவருடைய திருப்பாதங்களை தொட்டுசிரம தாழ்த்திப் பிரார்த்தித்தோம்.

எமது பிரார்த்தனைகளின் பின்னர் எமக்குத்தேவையான உருத்திராட்ச மற்றும் ஸ்படிக மணிமாலைகள், ஸ்படிகலிங்கம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ததுடன், பாக்மதி ஆற்றின் மருங்கில் காணப்பட்ட சில முகூர்த்தங்களையும் சேகரித்து எமது நேபாளத்துக்கான பிரயாணத்தை நிறைவு செய்து இந்தியப் பிரதேசமான ஹரி மாநிலத்தை நோக்கிப் பிரயாணத்தை மேற்கொண்டோம்.

(தொடரும்)

# கொன்று போட்டு விட்டார்களா



மாலை நான்கு மணியைக் கடந்த நேரத்தில் சற்று கதிரையில் கண்ணயர்ந்து கொண்டிருந்த வேளை, வெளியிலே குரல் கேட்டது. திடுக்கிட்டு விழித்து நிதானித்து எழும்ப மறுபடியும் அதே கூப்பாடு. என் பேர் சொல்லி அழைக்க வெளியே ஓடினேன். "சிவாண்ணை ஓடி வாங்கோ உங்கட மரங்களை வெட்டுகினம்" அழைத்தது அயல் வீட்டுக்காரர். வாகனத்தில் வந்தவர்கள் மதிலில் ஏணியைச் சாத்தி வைத்து ஏறி நின்றபடி வரிசையாக செழித்து வளர்ந்து நிழல் பரப்பி நின்ற "கிளிசூறியா" மரங்களின் கொப்புகளைத் தறித்துக்கொண்டிருந்தார்கள். சட்டென்று அதிக கோபம் வந்தது.

தளதளவென செழித்து நின்ற மரங்கள், நிலம் காய்ந்து போகும் நேரம் எல்லாம் தவறாது தண்ணீர் பாய்ச்சும் குடும்பத்தினர். இன்னும் அவை "முற்றி கதியால்" போகும் தகுதி நிலைக்கு வரவில்லை, "பிஞ்சுத் தடிகள்" அதற்கிடையில் இப்படி வெட்டிச் சாய்ப்பதென்றால்.... வாகனத்தில் வந்து வெட்டிக் கொண்டிருந்தவர்கள் காரணத்தைச் சொன்னார்கள். "ஐயா [illegible] 'போன் லைன்' போற பக்கத்தில இருக்கிற மரக் கொப்புகளை எல்லாம் வெட்டிவிடச் சொன்னவையள், மரக் கொப்புகளால் போற வயருக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வார வசந்தம்

# ஆயுள் நீடிப்புக்கு உடற்பயிற்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

உடற்பயிற்சி செய்வதால் உடலில் இரத்தத் தின் ளவு அதிகரிக்கின்றது. உடற்பகுதிகளில் இரத்த ளங்கள் அதிகமாக வளர்கின்றன. உடற் தசைகள் போதுமான எரி பொருளைப் பெறுவதுடன் அதனை எரிக்கத் தேவையான நொதியையும் (ENZYME) பெறுகின்றன. உடற்பயிற்சியைச் செய்வ தால் பிராணவாயுவை எடுத்துக் கொள்வது மிக எளிதாகிறது. இதன் காரணமாக நல்ல உடல் தகுதியுள்ளவர்களாவீர்கள். மாடிப்படிகளில் எளிதாக ஏறவும், பலவித பொருள்களை இலகுவாக ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு நகர்த்தவும் முடிகின்றது. இந்த முன்னேற்றங்கள் உடற்பயிற்சி ஆரம்பித்து ஒரு சில வாரங்களில் உண்டாகிவிடுகின்றது. தினமும் உடலுழைப்பில் ஈடுபடும் வகையில் நமது உடல் அமைக்கப்பட்டுள்ளது.



உடற்பயிற்சியானது மனநலத்தையும் உயர்த்துகிறது என்பதை மறுப்பதற்கில்லை. உடற்பயிற்சியினால் மனம் தெம்படைகிறது. கவலை, உற்சாகமின்மை, மன இறுக்கம் போன்றவை குறைகிறது. பொதுவான உடல்நலம், மனநலம், விரைந்து சிந்தித்து தக்க முடிவெடுத்தல், செயற்படுதல் போன்றவை மேம்படுகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உடற்பயிற்சி, நோயைத் தடுக்கின்றது என்று கூறினாலும் மிகையாகாது. உடற்பயிற்சி மேற்கொள்ளாமல் கை, கால்களை அசைக்காமல் உட்கார்ந்தே வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். நல்ல போசாக்குள்ள உணவை உட்கொண்டாலும் சரியான மருத்துவ கவனிப்பைப் பெற்றாலும்அவர்களது வாழ்வு உற்சாகமான வாழ்வாக இருக்காது; வலியுடனும் துன்பங்களுடனும் தா அவர்கள் நாள்களை கடத்துவார்கள்.



இன்றைய காலகட்டத்தில் உலகமக்களைச் சாகடிக்கும் நோய்களான இதயநோய், புற்றுநோய் என்பனவற்றின் அபயத்தை உடற்பயிற்சியினால் குறைக் கலாம். உடற்பயிற்சி செய்து சுறுசுறுப்பாக இருப்பவர்களை விட அசையா வாழ்வு வாழ்பவர்களுக்கு இதயநோய் இரு மடங்கு அதிகம். புகைக்கும் பழக்கம் உடை யவர்களும், எயர் இரத்த அழுேத்தம் உடையவர்களுக்கும் இதய நோய் அபாயம் இருமடங்கு அதிகம்.

பொதுவாக உடற்பயிற்சிகளே செய்யாதவர்களுக்குத் தான் நோய்கள் அதிகம். ஆகவே தினமும் 30-60 நிமிடங்கள் மிதமான உடற்பயிற்சி கண்டிப்பாகச் செய்துவர வேண்டும். உடற்பயிற்சி முதுமையைக் குறைக்கின்றது. நீண்ட வாழ்நாளைப் பெற அதிகம் நடக்க வேண்டும் என்பது நம் நாட்டு வழக்கில் உள்ள பயனுள்ள பழமொழி ஒருவனுக்கு வயது ஏறஏற அவனது இதயம், நுரையீரல் இயக்கம் குறைகிறது. இருபதைந்து வயதுக்குப் பிறகு ஆண்டு தோறும் ஒரு சதவீதம் குறைவடைகின்றது. இது உடற்பயிற்சி மேற்கொள்ளாதவர்களுக்கே பொருந்தும். ஆண்களும், பெண்களும் தங்களுக்கு அறுபது , எழுபது வயதுகள் ஆன நிலையிலும் உடற்பயிற்சி செய்வார்களானால் தங்கள் இதய- நுரையீரல் இயக்கம் அதிகரித்து நல்ல உடல் நலத்துடன் வாழ முடியும்.

வாரத்துக்கு 12-15 கிலோ மீற்றர் தூரம் நடப்பதனாலோ 'ஜாகிங்'' செய்வதனாலோ வாழ் நாள் நீட்சியை அதிகரித்துக்கொள்ள முடியும். இதனை அமெரிக்க மருத்துவ நிபுணர் குழுவினரும் உறுதிப்படுத்துகின்றனர். ஏற்கனவே எமது ஆயுள் நீடிப்பைக் கருத்தில் கொண்டு உடற்பயிற்சியைப் புறந்தள்ளாது அதனைத் தினமும் மேற்கொள்வது அனைவரதும் எமது தலையாய க்டமை ஆகும்.

**அருணா தருமலிங்கம்,**
வந்தாறுமூலை கிழக்கு, செங்கலடி.



பிரச்சினையாம், எங்களைக் கோபிக்கவேண்டாம்".
மளமளவென்று நீண்டு வளர்ந்திருந்த மரக் கொப்புகள் கீழே விழ சனங்கள் "குழைகளை" எடுக்க அலைந்திட்டார்கள். எனக்கு இது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாக இருந்தது. அவர்கள் வாகனம் மேலும் அப்பால் நகர்ந்து சென்றது மனம் ஆறவில்லை. வெடிச்சத்தம் கேட்டு அலைந்து திரியும் நாய் போல் நான் இருந்தேன்... வேறு வழி என்ன? வேற மாற்று வழி கிடையாதா? நவீன தொழில் நுட்ப மாற்றத்துக்கு இயற்கை பலியாக வேண்டியது தானா? எம்மவரால் எழுதப்பட்ட "ஏழாவது ஊழி" நூலும் இதைத் தானே சொல்கிறது. ஏற்கனவே மரங்கள் அழிக்கப்படுவதனால் இயற்கை வளங்கள் பாதிப்படைந்து வளிமண்டலத்தில் உள்ள 'ஓசோன் படலத்தில்" துவாரங்கள் உண்டாகி விட்டதினால் பூமிக்கு வெப்பம் அதிகரித்து விட்டதென விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். என்ன சொல்லி என்ன? யார் இதைக் கேட்கிறார்கள். நிலம் விலை பேசி முடிந்து விற்பனைக்குத் தயாராகி விட்டால்... ந முன் வளவில் உள்ள, மரங்கள்... புளி, வேம்பு, னை எல்லாம் தறித்து வீழ்த்தப்பட்டு நல்ல விலைக்கு கி விடும். மரங்கள் என்ன "கத்தவா" போகின்றன. எம்மை ள்; எமது இனத்தை வாழ விடுங்கள் என உண்ணாவிரதப் கள் செய்யவா போகின்றன. எம் இனத்தை இந்த மனிதர் றார்கள், உயிரோடு விட்டு வைக்கின்றார்கள் இல்லை னைக்கு அறிக்கை கொடுக்க அவையால் முடியுமா? ழுது புரண்டாலும் யாராவது வந்து வெள்ளப்பாதிப்பை ால் "வானத்தில் வந்து மேலிருந்து பார்த்து விட்டுப் ர்கள்". பாவம் குரலைச் செவிமடுக்க பூமியில் யார் ர்? சில வேளை மரங்கள் பூமியில் மனிதர்கள் தம்மைக் ர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்திருக்கலாம். ய்நன்றி மறவாதவர்கள் எனப் பிழையாக நம்பியிருக்கும். கள் யாரை நம்பினார்களோ அவர்கள் மரங்களைத் றித்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதர்களை மனிதர்கள் றித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துமீறி "நான் உலக காரன்" என்ற நீதியில் வேறு நாட்டுக்குள் நுழைகின்றனர்; மொழிகின்றான், மனிதர்களை மயிர்க் கொட்டிப் கூட்டுப் பொசுக்குவது போல் பொசுக்குகின்றான்.
இருப்பிடங்களைத் தரைமட்டம் ஆக்குகின்றான். இவனுக்கு "சவால்" விட்டுக் கொண்டிருந்தவனை ஓட ஓடத் துரத்திப் பிடித்து அடித்துக் கொன்று "செத்த எலியை" தூக்குவது போல் தூக்கி "அநீதி தோற்றது, நியாயம் வென்றது" என மார் தட்டி சொல்கிறான். பூமியில் வாழும் மக்களுக்கு இப்படியான அதிகாரம் தொடர்ந்தும் கொடிகட்டிப் பறப்பதால் எது அநீதி? எது நியாயம்? என்பது புரியாமல் "சனங்கள் குழம்பிப் போய் இருக்கிறார்கள்". தொடர்ந்தும் அழித்தல் தொழில் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. தர்மம் வெல்லும் என்பது நம்பிக்கையற்ற விடயமாக மாறிவிட்டது. பக்கத்து வளவில் வீழ்த்தப்பட்டுக் கிடந்த இலுப்பை மரம் இப்போதும் கண்ணில் தெரிகின்றது. அது தரையில் வீழ்த்தப்பட்டிருந்த கோலம் "நீதியும் நேர்மையுமாக அரசாட்சி செய்து கொண்டிருந்த மன்னனை" நயவஞ்சகமாகக் கொலை செய்துவிட்டார்கள் போன்ற நிலை. பாவம் இலுப்பை யாருக்கும் இருக்குமளவு எந்தத் தீங்கும் செய்யவில்லை. நாமெங்கிலும் அபிவிருத்தி என்ற நடவடிக்கைகள் முழுமூச்சாகிவிட்டன. பிரதான வீதிகள் அகலமாக்கப்படுகின்ற நிலையில் பாதையின் இரு மருங்கிலும் இருந்த மரங்கள், மதில்கள் உடைக்கப்படுகின்றன. மீண்டும் மதில்கள் புதிதாக கட்டப்படுகின்றன. ஆனால் அழிக்கப்படும் மரங்கள்... மீண்டும் முளைக்கப் போவதில்லை. அழித்த மரத்துக்குப் பதிலாக வேறு மரம் நடப்படுகின்றதா... வீதி அகலிப்பு முழுமூச்சாக நடக்கின்றது. வீடு திரும்பும் நேரம் பஸ்ஸில் பயணமாகிய அப்பாவின் சகோதரி வெளிநாட்டில் இருந்தமையினால், இணுவிலில் அவர் மகள் வீட்டுக்கு போகவேணும்... புளியடி பள்ளிக் கூடச் சந்தி இறக்கம் எனச் சொல்லி இறங்கினேன்.

அதிர்ந்து போனேன்... சந்தியில் அட்டகாசமாய், அரசனாய், கொடை வள்ளலாய் நிமிர்ந்து நின்ற புளியமரத்தைக் காணவில்லை. அப்படியே நின்றேன். "கடவுளே இதனையும் கொன்று போட்டு விட்டார்களா?" புளியம் மரம் இருந்தமைக்கு அடையாளமாக அடிப்பாகம் மட்டும் ஆதாரமாக இருந்தது. இந்தப் புளிய மரத்துக்கு எத்தனை வயது இருக்கும்? இந்தப் பக்கம் இருந்த பாடசாலைக்கும், புளிக்கும் எவ்வளவு கால உறவு? இந்த மரத்தின் நிழலில் எத்தனை பிள்ளைகள் பாடிப் பறந்து விளையாடிப்போயிருப்பார்கள்? புளியமரமே! உன்னை வெட்டும் போது "எனக்கேன் இந்தத் தண்டனை" என்று அலறியிருப்பாயா? உன்னை "இயற்கை" மரணமாகக் கண்டு வழி அனுப்ப மனிதர்களால் முடியவில்லை. உனக்கும் ... அகால மரணம் தான். ★

**தொல்புரம் சி.கதிர்காமநாதன்**

# நினைவுக்குரிய நிகழ்வுகள்

**சேர் பொன் இராமநாதன் வீதி**

நாச்சிமார் கோவிலடியிலிருந்து கிழக்கே பலாலி வீதி வரை நீடித்த இந்த வீதி யாழ்.பல்கலைக்கழக வளாகத்தை உள்ளடக்கியுள்ளது. இவர் (1851-1930) நாட்டின் தலை சிறந்த, தீர்க்க தரிசனம் மிக்க கல்விமானாகவும், அரசியல் வாதியாகவும் தமிழர்களுக்கும் பெருமை சேர்த்த பேரறிஞராவார். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் (இறக்கும் வரை) சட்ட சபை அங்கத்தவராக தொடர்ந்து இருந்த பெருமை இவருக்குண்டு. இரு முறை அகில இலங்கை கல்வி சாரரின் பிரதிநிதியாகவும் விளங்கினார்.

நாட்டின் சைவக் கல்வி வளர்ச்சிகான முன்னணி அமைப்பான சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆரம்ப தலைவராக விளங்கிய பெருமை இவருக்குண்டு. 1913 இல் பெண்கல்விக்காக இராமநாதன் கல்லூரியையும், 1921 இல் ஆண்களுக்காகப் பரமேஸ்வராக் கல்லூரியையும் அதனுள் அமைந்த சிவன் கோவிலையும், 1912 இல் கொழும்பில் பொன்னம் பலவானேசர் என்னும் கருங்கற்கோயிலையும் அமைத்தார். அவரின் நினைவான இரு கல்லூரிகளும் தேசிய மட்டத்திற்கு உயர்ந்து யாழ்.பல்கலைக் கழகமாக வீறுநடை போடுவது இந்த பெரியாரை நாம் என்றும் நினைவிலிருக்கச் செய்யும். இந்தப் பல்கலைக்கழக அமைப்பின் முக்கியத்துவத்துக்காக முன்னின்று உழைத்த பலரில் செனற்றர் சோ.நடேசனின் பணி நினைவுக்குரியது. 1917-1918 கண்டிக்கலவரம் சம்பந்தமாக யுத்தகால கடற்கண்ணி வெடி ஆபத்தையும் பொருட்படுத்தாது கடற் பயணமாக லண்டன் சென்று வாதாடி நீதியை நிலைநாட்டிய பெருமையும், பௌத்த வெசாக் தினத்தை பொது விடுமுறையாக்க வேண்டுமெனச் சட்ட சபையில் பிரேரித்த பெருமையும் இவருக்குண்டு.

**கலாயோகி ஆனந்த குமாரசாமி வீதி**

இந்த வீதி கொழும்பில் அமைந்துள்ளது. இவர் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் நெருங்கிய உறவினரும் கலைத்துறையில் உலகப் புகழ்பெற்ற அறிஞருமாவார். சிவதத்துவத்தையும் சிவ நடனத்தின் உள்ளார்ந்த பொருளையும், கலை அம்சங்களின் சிறப்பியல்புகளையும் "Dance of Sri"என்ற அரிய நூல் மூலம் சைவத்தின் மேன்மையைச் சிறப்பாக உலகறியச் செய்த பெருமை காரணமாக "கலாயோகி" என்ற பட்டம் பெற்றார். இந்த நூல் "சிவானந்த நடனம்" என நவாலியூர் சோமசுந்தரம் புலவர் மகன் நடராசா வால் தமிழில் மொழி மாற்றம் செய்தது குறிப்பிடத்தக்கது. இந்த நூல் அதியுயர்தரமான தத்துவ நூலாகக் கல்வியாளர்களினால் போற்றப்படுவதாகும். இவரின் நினைவாக வீதியைத் தவிர யாழ்.பல்கலைக்கழக விடுதியும் பெயரிடப்பட்டுள்ளது நினைவிற்குரியனவாகும்.

**சபாபதி வீதி**

இந்த வீதி வண்ணார் பண்ணை பூநாறி மரத்தடியிலிருந்து தலையாழிக்குக் கிழக்கு நோக்கிச் செல்வதாகும். அங்கு வசித்தவரே பிரபல வழக்கறிஞரான ஏ.சபாபதி. அன்றைய சட்டசபை யில் அங்கத்தவராக விளங்கியதோடு சைவபரிபாலன சபை, யாழ்.இந்துக் கல்லூரிஅதிகார சபை ஆகியனவற்றில் நீண்ட தொடர்பு மூலம் கல்வி வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியுள்ளார். மேலும் Hindu organ பத்திரிகையின் பத்திராதிபராக 24 வருடம் பணியாற்றி பத்திரிகையின் தரத்தையுயர்த்திய பெருமை அவருக்குண்டு. யாழ்.இந்துக் கல்லூரியின் அவரின் சேவையின் சின்னமாக "சபாபதி இல்லம்" இன்று வரை விளங்குவதோடு, இந்த வீதியும் நினைவிற்குரியதாகும்.

**சாம் ஏ.சபாபதி வீதி**

இந்த வீதி அவர் வசித்த இடமாகிய கொட்டடியில் அமைந்துள்ளது. இவர் ஒரு சிறந்த குற்றவியல் வழக்கறிஞராவார். 1949 இல் யாழ்.மாநகரசபையை ஆரம்பித்த போது யாழ் மண்ணின் முதல் நகர பிதா (Mayor) என்ற பெருமைக்குரியவர். 1952 இல் யாழ்.பொது நூலகக் கட்டடத் தலைவராக விளங்கி, 1954 இல் நூலகக் கால் கோள் விழாவில் மற்றும் நாலு பிரமுகர்களுடன் அத்திபாரமிட்டுப் பெருமை பெற்றதோடு நூலகப் பணிகள் பலவற்றில் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி, ஈடுபாட் டுடனும் அர்ப்பணிப்புடனும் பணியைத் துரிதப்படுத்தியவரது பாராட்டுதல்களையும் பெற்றார். இந்த வீதி அவரின் நினைவாகவுள்ளது.

**வி.சிவசுப்பிரமணியம்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார வசந்தம்



## உதடுகளின் அழகு

பொதுவாக உதடுகள் அழகாக இருந்தால் முகமும் அழகாக காணப்படும். ஒருவர் பேசும்போது நாம் கவனிப்பது அவரது கண்களையும், உதடுகளையும் தான்.

பொதுவாக சிலருக்கு வறண்ட உதடுகள் காணப்படும். அவர்களுக்கு சில தொற்றுக் கிருமிகளால் இப்படியாக வாய்ப்புண்டு. அப்படி இருப்பவர்கள் தொடர்ந்து உதடு பராமரிப்பு மருந்துகளைப் பயன்படுத்தினால் நல்ல நிவாரணம் கிட்டும்.

உடலில் போதுமான நீர்ப்பதமின்மையும் உதடுகள் வறண்டு போகக் காரணமாகலாம். தண்ணீர் குடித்து, நீர் சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வது நல்லது.

குளிர்சாதன வசதியுள்ள அறையில் நீண்ட நேரம் இருப்பதால் உதட்டில் வெடிப்புகளும் ஏற்படலாம்.

எதுவாக இருந்தாலும் உதடுகளை கவனத்துடன் பராமரிக்க வேண்டியது அவசியம்.



## சருமம் பாபாக்க

| | |
|---|---|
| பச்சைப் பயறு | 250 கிராம் |
| மஞ்சள் | 100 கிராம் |
| வசம்பு | 10 கிராம் |

எடுத்து அரைத்து, குளிக்கும்போது சோப்புக்குப் பதிலாக தேய்த்து குளித்து வந்தால் சருமத்தின் வறட்சி குறைந்து பளபளப்புடன் காட்சியளிக்கும்.

## அழகைத் தக்க வைக்க

* ஒரு நாளைக்கு 3 லீற்றர் தண்ணீராவது அருந்த வேண்டும்.
* மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
* அதிக குளிரூட்டிய பானங்கள், உணவுப் பொருள்கள், எண்ணெயில் பொரிக்கப் பட்ட உணவுகள், கொழுப்புச் சத்து அதிகம் உள்ள பொருள்கள் போன்றவற்றை தவிர்ப்பது மிகவும் நல்லது.
* மென்மையான உணவுகளை அதிகம் சாப்பிடவேண்டும். பழங்கள் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும் .
* தினமும் இருமுறை குளிக்க வேண்டும். சோப்புகளை அடிக்கடி மாற்றக் கூடாது. இவை உடலில் அலர்ஜியை ஏற்படுத்தும்.
* கோபம், மன அழுத்தம் இவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும். யோகா தியானம் செய்தால் உடலின் இரத்த ஓட்டம் சீராகி அனைத்து உறுப்புகளும் பலம் பெறும். இதனால் தோல் பளபளக்கும்.



## அழகுக்கு அழகு சேர்க்க

* தயிருடன் சிறிது மஞ்சள் சேர்த்து முகத்தில் தடவி, 20 முதல் 30 நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும். இதை தினமும் செய்து வர, முகத்தின் நிறத்தில் நல்ல மாற்றம் கிடைக்கும். எலுமிச்சை பழத் தோலை காய வைத்து, அதை அரைத்து அந்த பொடியையும் இதனுடன் சேர்த்து முகத்தில் தடவலாம்.
* வெள்ளரிக்காயின் சதைப் பகுதியுடன் தயிர் சேர்த்து, முகத்தில் தடவ வேண்டும். 20 நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும். இது, ஒயில் ஸ்கின் உள்ளவர்களுக்கு மிகவும் சிறந்தது.
* வெள்ளரிக்காய், பழுத்த பப்பாளியின் சதைப் பகுதி ஆகியவற்றை தயிருடன் சேர்த்து, சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து, முகம், கழுத்து ஆகிய பகுதிகளில் தடவி அரைமணி நேரம் கழித்து கழுவ வேண்டும். வாரம் இரு முறை இவ்வாறு செய்து வர முகம் பட்டு போல ஜொலிக்கும்.
* பச்சையரிசி மா, கடலை மா ஆகியவற்றை சம அளவில் எடுத்து தயிரில் குழைத்து முகத்தில் பூச வேண்டும். சிறிது நேரம் கழித்து முகத்தைக் கழுவ, முகம் பொலிவுடன் காணப்படும்.
* பாதாமுடன் தயிர் சேர்த்து முகத்தில் தடவ வேண்டும். 20 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இரு முறை செய்து வர, முகம் பொலிவுறும்.
* கை முட்டிப் பகுதி சிலருக்கு, கறுப்பாக காணப்படும். எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி, அதை கை முட்டிப் பகுதிகளில் நன்கு தேய்க்க வேண்டும். இவ்வாறு சில நாள்கள் தொடர்ந்து செய்து வர, கறுமை மறையும்.
* முலாம்பழத்தை சாறெடுத்து, அதனுடன் சிறிது எலுமிச்சை சாறு, ஒலிவ் எண்ணெய் ஆகியவை சேர்த்து முகத்தில் தடவ வேண்டும். 20 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்து வர முகம் பொலிவு பெறும்.
* மாம்பழச் சாறை பஞ்சால் முகத்தில் தடவ வேண்டும். 10 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும்.
* மாவிலைகளை நசுக்கிச் சாறு எடுத்துக் கொள்ளவும். அதை பாதங்களில் வெடிப்பு உள்ள இடங்களில் தடவினால் அவை மறையும்.
* ஒரு டீஸ்பூன் அரிசியை அரைத்துத் தயிருடன் கலந்து கொள்ளவும்.அதை முகத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்யவும். இது முகத்திலுள்ள இறந்த செல்களை நீக்கி, முகம் தொய்வடைவதையும் தவிர்க்கும்.
* கரட்டை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். அதை முகத்தில் தடவி, சிறிது நேரம் ஊறிக் கழுவினால் முகம் நல்ல நிறம் பெறும்.
* மாம்பழத் தோல்களை தூக்கி எறிந்து விடாமல், அவற்றை அப்படியே முகம் மற்றும் கைகளில் தேய்த்து ஊறிக் கழுவவும். சருமம் புத்துணர்வு பெறும்.
* தூள் உப்பை தலையில் மண்டை யோட்டில் படும்படி நன்றாக அழுந்தித் தேய்க்கவும். இது தலையில் உள்ள இறந்த செல்களையும், பொடுகையும் நீக்கும்.
* கொஞ்சம் ஒலிவ் ஒயில், உப்பு, சோள மா மூன்றையும் கலந்து பேஸ்ட் போல் செய்து கொள்ளவும். அதைக் கைகளில் தடவி சிறிது நேரம் கழித்து, பன்னீர் கலந்த வெதுவெதுப்பான தண்ணீரால் கழுவ, கைகள் பட்டுபோல் மாறும்.
* காச்சாத பாலுடன் ஒரு ஆரஞ்சுப் பழத்தின் சாற்றைக் கலந்து கொள்ளவும். அதை உடம்பில் கறுப்பாக உள்ள இடங்களில் தேய்த்து வர அந்த இடங்கள் சுத்தமாகும்.
* சிறிதளவு சந்தனத்தையும், கற்பூரத்தையும் தண்ணீரில் குழைத்துக் கொண்டு அதை இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக பருக்களின் மேல் தடவினால் குணமாகும்.
* பச்சைப் பயறை அரைத்து, தயிருடன் கலந்து தலையில் தடவி அரை மணி நேரம் ஊற விடவும். பிறகு நிறையத் தண்ணீர் விட்டுக் கூந்தலை அலசவும். விடாப்பபடியான பொடுகும் இருந்த இடம் தெரியாமல் மறையும்.



* கொஞ்சம் வெதுவெதுப்பான தண்ணீரில் நிறைய பூண்டுப் பற்களை நசுக்கிப் போட்டு, சில துளிகள் டெட்டோலையும் விட்டு கால்களை சிறிது நேரம் அதில் வைத்திருந்தால் கால்கள் மிருதுவாக மாறுவதோடு மட்டுமின்றி, தொற்றுக் கிருமிகள் தாக்காமலும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வார வசந்தம்



# எம்மை உறுதிசெய்ய இறுதி நாள் 30 ஆம் திகதி...



"நாசமா போனவங்கள், என்ர பிள்ளையின்ர கம்பஸ் அட்மிஸனை பறிச்சுப் போட்டாங்கள். அதை சிங்களவனுக்கு குடுக்கப்ப போறாங்களாலாம். போனமுறை பக்கத்து வீட்டுக்காரன்ர பெடி மட்டும் என்ர பெடி எடுத்த அதே சற் ஸ்கோரும் அதே ராங்கும் தானே எடுத்தவன். அவனுக்கு மட்டும் பெரதெனியா யுனிவஸிட்டில இன்ஞ்சினியரிங் கிடைச்சது. இந்த முறை மட்டும் இல்லை எண்டுறாங்கள். அது எந்த வகையில நியாயம் ?" "இவங்கள் கள்ளர் ஆளுக்ககாள் பாகுபாடு காட்டுறாங்கள். கஷ்டப்பட்டு படிச்ச படிப்பு வீணாப் போச்சே. என்னத்தைச் செய்ய"

இந்த முறை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு விஞ்ஞானபீடத்துக்கு 140 சிங்கள மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மாணவர்கள் 60 பேர் தான் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்ற உண்மை தெரியுமா?

''நீங்கள் என்னெண்டு எங்கட எம்.பி. சீட்டை குறைப்பியள். அதையும் எங்களிட்ட வெட்டி சிங்களவனுக்கு என்னெண்டு குடுப்பியள் ? அப்பிடிச் செய்யேலாது, நாங்கள் விடமாட்டம். இலங்கை அரசு தமிழர்களின் அரசியல் உரிமையை பறிக்குது '

இவ்வாறு இன்னும் சில மாதங்களின் பின்னர் மாரித் தவளைகள் போலக் கத்தப் போகின்றோம் நாங்கள். மாரித் தவளைகள் இரவிரவாய் கத்தி விட்டு மறு நாள் காலையில் எவ்வாறு சாகுமோ அது போன்றுதான் நாங்களும் எங்களுக்கு வாய்த்த அரசியல்வாதிகளும்.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை இழந்து விட்டு பின்னர் புலம்பித் திரிவதில் பலனில்லை. இங்குள்ள தமிழ் அமைச்சர் ஒருவர் கூட தனது வேதவாக்கியமாகப் பயன்படுத்துவது, கிடைக்கின்ற சந்தர்ப்பங்களையெல்லாம் கடந்தகால தவறான அரசியல் தலைமைகள் மூலம் தவறவிட்டு விட்டோம். எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும் என்று. இருப்பினும் தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை அவர் உரியவகையில் பயன்படுத்துகின்றாரா என்பது கேள்விக்குரியதே?

யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் தொகை 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் 4 லட்சத்து 84 ஆயிரத்து 791 ஆகக் காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் 8 லட்சத்து 16 ஆயிரத்து 05 ஆகக் காணப்பட்டது. யுத்தம் முடிவடைந்ததன் பின்பு முதல் முதலாக மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் மீளாய்வின் மூலமே 2009 ஆம் ஆண்டு 8 லட்சமாகக் காணப்பட்டது 3 லட்சத்தால் குறைவடைந்தது.

கடந்த 2010 ஆம் ஆண்டே முதன் முறையாக வட பகுதியில் வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதன் காரமாக இறந்தவர்கள், வெளிநாடு சென்றவர்கள், அகதியாக இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்குச் சென்றவர்கள் அனைவரும் நீக்கப்பட்டனர். அத்துடன் மக்கள் தமக்கான வாக்காளர் பதிவுகளை உரிய வகையில் மேற்கொள்ளாமையினாலும் இந்த நிலைமை ஏற்பட்டது. இதன் உடனடி விளைவாக யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 9 இலிருந்து 6 ஆகக் குறைவடைந்தது.

இந்த நாடாளுமன்ற ஆசனங்கள் குறைக்கப்பட்ட பின்னர்தான் தூங்கிக் கொண்டிருந்த அரசியல்வாதிகள் துள்ளிக் குதித்தனர். ஆசனங்களைக் குறைத்தது தவறு என்று கூவினர். செய்ய வேண்டிய நேரத்தில் ஒழுங்காகச் செய்திருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காதே ?

தேர்தல் காலங்களில் மட்டும்தான் மக்களின் வீட்டுக் கதவை தட்டும் இவர்களுக்கு இந்தப் பதிவுக்கு அவர்களை தூண்டுவதற்கு தெரியாமல் போய்விட்டதா ? உங்களது ஆசனங்களுக்கு ஆப்பு வைக்கும் போதுதான் நீங்கள் செய்த தவறுகள் தெரிகின்றது.

அரசியல்வாதிகள் எப்போதுமே இப்படித்தான் என்று விட்டுவிடலாம். ஆனால் கிராம மட்ட அரச அதிகாரிகளான கிராமசேவர்கள் செய்த தவறை எப்படிச் மன்னிக்க முடியும். கிராமசேவகர்களினால் யாழ்ப் பாணத்தின் மூன்று கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 5 ஆயிரம் தகுதியான வாக்காளர்கள் தமது வாக்குரிமையை 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் இழந்திருக்கின்றார்கள். இதனைவிட தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர் பதிவு விண்ணப்படிவமான 'பி,சி' படிவத்தை வீடு வீடாக விநியோகிக்க வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளதுடன் ஒரு விண்ணப்பப் படிவத்துக்கு 10 ரூபா பணமும் வழங்கப்படுகின்றது. இதில் எத்தனை கிராமசேவகர் கள் வீடு வீடாகச் சென்று மக்களை பதிய முயற்சி எடுக்கின்றார்கள். இருப்பினும் எதுவித பணமும் வழங்காமல் பொலிஸாரால் விநியோகிக்கப்படும் குடும்பப் பதிவு விண்ணப்பத்தை வீடு வீடாக விநியோகிக்கின்றனர்.

எங்களுக்கும் அதில் அக்கறையில்லை. வாக்குப் போட மட்டும்தானே வாக்காளர் பதிவு தேவை. அதற்கு நேரத்தை ஒதுக்கி பதிய வேண்டுமா ? எங்களின் மக்களின் இவ்வாறான சிந்தனையும்தான் இந்த இழப்பிற்கு காரண கர்த்தாக்கள். தேர்தலுக்கு வாக்காளர் அட்டை கிடைக்காத பின்புதான் தெரியும், பலருக்கு வாக்காளராக தம்மை பதிவு செய்யவில்லையென்று.

தமிழர்களிடமிருந்த ஆயுதபலம் முடக்கப்பட்டு விட்டது. இறுதியாக எஞ்சியிருக்கும் ஜனநாயக பலத்தையும் பறிப்பதற்கு பல முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதற்கு நாம் துணை போகின்றோமா ? இதை வெற்றிகரமாகக் கையாள வேண்டியது காலத்தின் கடமை. உங்களை வழிநடத்த இன்னொருவரை தேட வேண்டாம்.

வீட்டுக்கொருவன் நாட்டைக் காக்க வரவேண்டும் என்று சொல்லி எல்லோரும் இணைந்து போராடினால்தான் எமக்கு வேண்டியது கிடைக்கும் என்றால் நாம் ஒவ்வொருவரும் களத்துக்கு வரத்தான் வேண்டும். ஒவ்வொரு தமிழனும் தனது இறுதி அஸ்திரமான வாக்குப் பலத்தை கொண்டிருக்க வேண்டுமானால் உங்களின் பதிவுகளை நீங்களே உறுதி செய்து கொள்ள வேண்டும். வாக்காளராய் பதிவது தனியே வாக்களிக்க மட்டுமல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்ற ஆசனம், பல்கலைக்கழக அனுமதி, பிரதேச அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு என்பவற்றிலும் வாக்காளர் பதிவு தாக்கத்தை செலுத்தும். இதை உணர்ந்து செயற்பட அனைவரும் முன்வர வேண்டும்.

கடந்த ஆண்டு மன்னார் மாவட்டத்தில் 25 ஆயிரம் முஸ்லிம் மக்களது பெயர்கள் நீக்கப்பட்டன. இவர்கள் புத்தளத்தில் வாழ்வதாலேயே நீக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து வன்னி மாவட்ட முஸ்லிம் அமைச்சர் ஒருவரால் இவர்கள் அத்தனை பேரையும் பதியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதாவது முதலாவதாக வெளியிடப்பட்ட 'ஏ,பி' பட்டியலியே இவர்களது பெயர்கள் நீக்கப்பட்ட விபரம் வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்டு ஒரு மாத காலத்தினுள் அவ்வாறு நீக்கப்பட்டை ஆட்சேபித்து உரிமை கோரிக்கை விண்ணப்பப் படிவம் மூலம் தமது வாக்குரிமைக்கு மீண்டும் விண்ணப்பிக்க முடியும்.

இதனை பயன்படுத்திய குறித்த முஸ்லிம் அமைச்சர் தமது 25 ஆயிரம் மக்களையும் உரிமை கோரிக்கை படிவத்தை நிரப்பி விண்ணபிக்க வைத்து அவர்கள் அனைவரையும் வாக்காளர் பெயர்பட்டியலில் இணைக்க வைத்தார். இருப்பினும் இதே இடத்தில் தமிழ் மக்கள் 5 ஆயிரம் பேர் நீக்கப்பட்ட போதும் எவரும் அவர்களை மீளவும் வாக்காளர் பெயர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் வேதனையான விடயம்.

[illegible] எனவே நாம் எமது பெயர்களும் வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். துற்போது வெளியிடப்பட்டுள்ள 'ஏ,பி' பெயர் பட்டியலில் யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு வாக்காளர்களை விட மேலும் 24 ஆயிரம் பேர் நீக்கப்பட்டுள்ளனர் என்கின்றது தேர்தல் செயலகம்.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது என்பதைப் போல் ஏற்கனவே 3 லட்சம் பேரை கொத்தாக நீக்கி விட்டது தேர்தல் செயலகம். தற்போது மேலும் 24 ஆயிரம் பேர் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலிருந்து தூக்கி வீசப்பட்டுள் ளார்கள்.

எனவே இந்த மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் எமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தற்போது சகல கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், தபாலகம் என்பவற்றில் இந்தப் பெயர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கே சென்று பார்வையிட்டு எமது பெயர் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலிருந்து நீக்கப்பட்டவர்களும் இந்தக் காலப் பகுதியிலேயே தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். உரிமைக் கோரிக்கை படிவத்தினூடா கப் தமது பதிவுகளை வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்து கொள்ள முடியும்.

இவற்றைவிட அரசியல் கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தேர்தல் ஆணையாளரால் அறிமுகப்படுத்தப்பட்ட விஷேட விண்ணப்பப் படிவத்தினூடாகவும் பதிவுகளை மேற்கொள்ள முடியும். எமக்காக இந்தப் படிவம் உருவாக்கப்படாவிட்டாலும் அதிலிருக்கும் ஓட்டைகளினூடாக எம்மவர்களும் வாக்காளர்களாக அதிலும் புலம்பெயர்ந்தவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

சொந்த மாவட்டத்தை விட்டு வெளியேறியவர்களை பதிவதற்காக இந்த விஷேட விண்ணப்பப் படிவம் அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம்,

■ உசிலமணி

புத்தளத்திலுள்ள முஸ்லிம் மக்களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கயை யாழ்ப்பாணத்தில் பதிய வைப்பதே ஆகும். இதன் மூலம் எமது மக்களும் பயனடைய முடிகின்றது. முஸ்லிம் மக்கள் இந்தச் சந்தர்பத்தை உரிய வகையில் பயன்படுத்த போகின்றனர். நாம் அதனை பயன்படுத்துவோமா என்பது கேள்விக் குறியே ?

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒருவர் நிச்சயமாய் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். அவர்களையும் இங்கே வாக்காளர்களாகப் பதிவு செய்ய முடியும். அவர்களது கடவுச் சீட்டு இலக்கங்களை வழங்கி அவர்களையும் வாக்காளர்களாக இணைப்பதன் மூலம் எமது வாக்காளர் வீழ்ச்சியை மீண்டும் உயர்ச்சியாக்கலாம். இந்தியாவிலிருக்கும் அகதிகள் கடவுச் சீட்டுக்குப் பதிலாக அங்கே இருப்பதை உறுதிப்படுத்தும் எத்தகைய ஆவணத்தை சமர்ப் பித்தாலும் அவர்களும் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

இவற்றுக்கெல்லாம் இறுதி நாள் எதிர்வரும் 30 ஆம் திகதியே. இதற்கு முன்னர் நாங்கள் எங்களை பதிய எடுக்கின்ற - எங்களது புலம் பெயர் உறவுகளை பதிய வைப்பதன் மூலம் 3 லட்சத்தால் பறிபோன வாக்காளர் எண்ணிக்கைய மீண்டும் அதிகரிக்க முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் வேலையை விட வேறு வேலைகள் அதிகமாக இருப்பதால் அவர்களால் இதில் தலையிட நேரம் கிடைக்காமல் போகலாம். ஆதனை விட அவர்களுக்கு நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு செல்ல வேண்டியிருப்பதால் அவர்களுக்கு இந்த விடயத்தில் அக்கறை எடுக்க முடியாமலிருக்கும்.

இங்கு அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வீடுவீடாய் கதவைத் தட்டி வாக்குக் கேட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், எமது மக்களின் வாக்குரிமையை பெறுவதற்கும் கரிசனை காட்டலாம்தானே. நீங்கள் தானே அண்மையில் வீடு வீடாய் ஏறி இறங்கியவர்கள். மீண்டும் ஒரு முறை மக்களின் உரிமைக்காய் வீட்டுக் கதவுகளை தட்டலாம் தானே ?

கட்சி பேதமின்றி ஒவ்வொரு யாழ்ப்பாணத்தவரின் வீட்டுக்கதவுகளையும் தட்டி அவர்களது வாக்குரிமையை உறுதிப்படுத்துவதுடன் அவர்களுடைய புலம்பெயர் உறவுகளின் வாக்குரிமையை உறுதிப் படுத்த நடவடிக்கை எடுக்கலாமே ? நாளை நாளை என்று விட்டுவிடாமல் உங்களுக்காய் இருக்கும் இன்னும் சில நாள்களுக்குள் அதனை செய்ய இன்றே புறப்படுங்கள். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார வசந்தம்

## மூச்சும் குணமும்



ஒரு மனிதன் எவ்வாறு மூச்சு விடுகிறான் என்பதை வைத்தே அவனது குணம் எப்படி என்பதைச் சொல்லிவிட முடியும். பிறர் விடும் மூச்சுக்கும் மனிதர்களது குணத்துக்கும் சம்பந்தம் உண்டு.

நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் உள்ள மனோதத்துவ நிபுணர் ஒருத்தர் 160 பேரை சோதனை செய்து அதன் முடிவில் இவ்வாறு கூறுகின்றார்.

ஒவ்வொருத்தரும் எப்படி மூச்சு விடுகிறார்கள் என்பதை அவதானித்துப் பார்த்துவிட்டு அவர்கள் குணத்தையும் கவனித்திருக்கிறார். அதன்மூலம் அவர் என்ன கண்டுபிடித்தார் தெரியுமா?

பொதுவாக நீண்ட மூச்சு இழுத்து விடுபவர்கள் பலபேர் இருப்பார்கள். அவர்களது குணம் எப்படி இருக்குமென்றால், அவர்களிடம் சிறந்த மனத்தைரியம் எப்போதும் உண்டு என்கிறார். அவர்களிடம் உறுதியான எண்ணம் காணப்படும்.

மிகவும் தைரிசாலி யாக இருப்பார்கள். அவர்களுக்குப் புத்தி, உடம்பு இவை இரண்டுமே சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும், தங்களைக் கட்டுப்படுத்துவதிலும் இவர்கள் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். புதிதாக எதையும் செய்து பார்ப்பதில் ஆர்வம் உள்ளவர்கள். எதற்கும் முன்னோடியாகச் செயற்படுவார்கள் என்றார்.

இன்னொரு ரகம் எப்படித் தெரியுமா? அவசர அவசரமாக மூச்சை இழுத்துவிடுவார்கள். இவர்கள் குணம் வேறுமாதிரியாக இருக்கும். எப்படி என்றால்

இவர்கள் மிகவும் பயந்த சுபாவமுள்ளவர்களாக இருப்பார்கள். அதாவது கூச்ச சுபாவமுடையவர்கள். இவர்களுக்குத் தன்னம்பிக்கை குறைவாக இருக்கும் எப்போதும் அடுத்தவர்களையே நம்பி இருப்பார்கள்.

சில சாமியார்கள் உயிரோட பூமிக்கு அடியடிலே இருந்துவிட்டு சிறிதுநாள்கள் கழித்து வெளியில் வருவார்கள் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். இந்தியாவின் ஓர் இடத்தில் ஒரு சுவாமிவை பூமியிலே குழிவெட்டி உள்ளே புதைத்துவிட்டார்கள். இதன்பின் ஆறுநாள்கள் பூமிக்குள் இருந்துவிட்டு வெளியே வந்துவிட்டார். பலபேர் இதை நேரில் பார்த்தார்கள் இது மந்திரமா?தந்திரமா? என்று வியந்தார்கள்.

இதற்கு விஞ்ஞான பூர்வமாக விளக்கம் கொடுக்க விஞ்ஞானிகள் முயன்றனர் அதற்காக ஒருத்தரை பூமிக்குள் புதைக்க ஏற்பாடாகியது அதன்படி

அங்கே என்ன நடந்தது தெரியுமா? யோகியை ஒரு பெட்டியில் வைத்து அடைத்து பூமிக்கு அடியில் பத்து மணிநேரங்கள் புதைத்துவைத்தார்கள் அவர் உள்ளே இருந்த நேரத்தில் அவரது உடம்பில் ஏற்படுகின்ற மாறுபாடுகளை எல்லாம் வெளியில் இருந்தே கருவிகள் மூலமாகக் கணக்கெடுத்தார்கள்.

அதையெல்லாம் வைத்துப் பார்த்ததற்குப் பின்னர்தான் புரிந்தது. இதற்குக் காரணம் மந்திமும் இல்லை; தந்திரமும் இல்லை; மனித எந்திரம்தான் என்பது.

அதாவது நமது உடம்பு சூழ்நிலைக்குத் தகுந்தமாதிரி தன்னை மாற்றிக்கொள்ளும் உதாரணமாகத் திடீரென்று இருட்டுக்குள் போனால் சிறிது நேரத்தில் கண்ணுக்குப் பார்க்கும் சக்தி லேசாக வந்துவிடுகிறது.

அதுபோன்று பூமிக்கு அடியில் இருக்கும் குறைந்த அளவு பிராணவா யுவை வைத்துக்கொண்டே உடம்பு சமாளிக்கப் பழகிக்கொள்கிறது. எனவே பழக்கம்தான் இதற்கு வேண்டுமே தவிர மந்திரமோ தந்திரமோ அல்ல

ஒருத்தர் ''என்ன ஐயா! பத்துமணி நேரங்கள் பூமிக்கு அடியில் உணவுகள் இல்லாமல் இருப்பது ஒரு பெரிய சாதனையா? நான் பத்து வருடங்களாகக் கிட்டத்தட்ட அதே நிலையிலேயே இருந்து ஒரு பெரிய சாதனையை செய்துகொண்டு வருகிறேன்'' என்றார்.

எப்படி? என்றதற்கு ''என் மனைவியுடன் குடும்பம் நடத்தி வருவதைக் கூறினேன்'' என்றார்.

**சுகி. சிவம்**

## வாசகர் திருமுகம்

### வியந்து பிரமிக்கிறேன்

உதயன் பத்திரிகையின் புத்தகசாலைப் பகுதியில் அன்னைதாஸனின் அன்னையின் பாமலர்கள் நூல் பற்றிய விமர்சனத்தைப் பார்த்தோம். நான் இவரது இதே பாடல்கள் பொதித்த பஜனை நிகழ்வுகள் யாவற்றிலும் பங்கு பற்றியவன் என்றவகையில் தங்கள் விமர்சனத்தைப் பெரிதும் வியந்து பிரமிக் கிறேன்.

இவர் பல கோணங்களில் பல கவிதைகளை சமுதாய நோக்கில் சிலேடையாகவும் பவிதை புனைவதில் வல்லவர். பல கவிதைகளை ஆக்கியுள்ளார். பக்தி சொட்டும் பாடல்களில்அவரது அம்மா, அம்மா, என்தாயே நயினையில் கோயில் கொண்டாள்..., நல்லூரிலே நின்றாடிடும் வடிவேலனே... என்ற பாடல்கள் பல மெய்ய டியார்கள் பலரால் பக்திப் பரவசமாகப் பாடி மற்றவர்களையும் மெய்மறக்கச் செய்த சந்தர்ப்பங்கள் பல கையாண்டு விமர்சித்துள்ளீர்கள். இரவது பாடல்கள் வெளிநாடுகளிலும் பாடி மகிழ்ச்சியடைந்துள்ளதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

தங்கள் ரசிகத் தன்மையையும், தமிழ் சொற் பிரயோகங்களையும் தங்கள் திறமையையும் வெளிக்காட்டி நிற்கின்றது. உண்மையில் இவரது பாடல் ஒவ்வொன்றும் நல்லதோர் இசை வடிவில் அமைந்ததை முதலில் கேட்டதுபோல தாங்கள் விமர்சித்துள்ளீர்கள். தங்களை பாராட்டி வாழ்த்தி மதிக்கிறேன்.

வாசகர்.

### ஏன் இந்தப் பாரபட்சம்

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்காகச் சென்றிருந்தேன். எனது தேவையும் ஒரு அவசரத் தேவையாகவே இருந்தது. இதனால் அன்றையதினமே பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மொழி பெயர்ப்பைப் பெற்றுக்கொள்ள உதவுமாறு கேட்டிருந்தேன். இது தொடர்பாக காணிப் பதிவாளர் மேலதிக மாவட்ட பதிவாளரைச் சந்திக்குமாறு கூறினார். நானும் அவரைச் சந்தித்து எனது தேவையைக் கூறினேன். ''எக்காரணம் கொண்டும் உடனே தரமுடியாது. ஒரு கிழமை வேண்டும். அவசர தேவை என்றால் மூன்று நாள்கள் தேவைப்படும்'' என்றார். மூன்று நாள்கள் எனக்கு அதிகமாகப்படவே வேறு எங்காவது கொடுத்து மொழி பெயர்ப்பை மேற்கொள்ளலாம் என நினைத்து நானும் திரும்பி விட்டேன். இதனை அறிந்த எனக்குத் தெரிந்தவர் ஒருவர் எனது விண் ணப்பப் படிவத்தை வாங்கிக்கொண்டு அதே காரியாலயத்துக்குச் சென்றார். சரியாகக் காலை 11.20 இற்கு அவர் திரும்பி வந்தார். மொழி பெயர்க்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன்.

அரச அலுவலகங்களில் அதுவும் கச்சேரியில் கூட ஏன் இந்தப் பாராபட்சம். சாதாரண மக்களுக்கு உடனடித் தேவைகள் ஏற்படக் கூடாதா? தெரிந்தவர்களுக்கு ஒரு முறையும் தெரியாதவர்களுக்கு ஒரு முறையும் ஏன் இவர்கள் கடைப்பிடிக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். எல்லோருக்கும் ஒரேமாதிரியான சேவையை வழங்குங்கள். இதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பு. தெரிந்தவர் என்றவுடன் வழங்கப்பட்ட (உடனே) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் தெரியாதவர் என்றதும் வழங்கப் படாதது எந்த வகையில் நியாயமான சேவையாகும்.

கூ.நிலாமதி, யாழ்ப்பாணம்.

### ஏன் இந்தப் பொய்ப் பிரசாரம்

யாழ்ப்பாணம்- குறிகாட்டுவான் பஸ்சேவை சீரான முறையில் செயல்படுவதாகவும் யாழ்ப்பாணம் பஸ் நிலையம் இ.போ.ச பொறுப்பாளர் கூறிய கூற்றுத் தவறு என்பது பாதிக்கப் பட்ட பயணிகள் அறிந்த உண்மை.

27.10.2011 இல் புங்குடுதீவில் சிலரைச் சந்திக்கும் பொருட்டு சென்றிருந்தேன். மாலை 5.15 மணியளவில் பெருங்காடு கந்தசாமி கோயிலடியில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் நானும் இன்னும் இருவர் ஒரு பெண் உட்பட பஸ்ஸுக்காகக் காத்து நின்றோம். கடைசி பஸ் குறிகாட்டுவானில் இருந்து 6 மணிக்கு புறப்பட்டு 6.20 மணிக்குள் இவ்விடம் வந்து சேரும் என எதிர்பார்த்து நின்றோம். 6 மணியளவில் குறிகாட்டுவா னில் இருந்து வந்த தனியார் பஸ்ஸில் வந்த ஒருவரிடம் கேட்டபோது 6 மணிக்கு புறப்படும் பஸ் வரவில்லை எனக்கூறினார்.

அதன் பின்னர் மூவரும் அருகில் உள்ள இராணுவ காவல் நிலையம் சென்று நிலைமையைக் கூறினோம். யாழ்ப்பாணம் எங்களை அனுப்புவதற்கு பெருமுயற்சி எடுத்தார்கள் அன்று தீபாவளி நாளானபடியால் போக்குவரத்து வாகனங்கள் மிகக்குறைவாக இருந்தமையால் அவர்களால் எமக்கு உதவி புரிய முடியவில்லை. எம்முடன் நின்றவர்கள் அவ்வூரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் வீட்டுக்கு திரும்பிவிட்டனர். நான் யாழ்ப்பாணம் செல்வதற்கு 1500 ரூபா கொடுத்து ஓர் ஓட்டோ கூடப்பிடிக்கமுடியவில்லை. எனது நண்பர் வீட்டில் இரவு தங்கிவிட்டு மறுநாள் அதிகாலை தனியார் பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்றேன். இந்நிலை எதிர்காலத்தில் மற்றவர்களுக்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது பொறுப்பாளர்களின் கடமையாகும்.

மக்களின் அத்தியாவசிய சேவைகளில் பஸ் போக்குவரத்து சேவையும் ஒன்று. அதில் கடைசி பஸ் சேவை என்பது மிக முக்கியமானது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருபகுதிகளிலுமிருந்து மாலை நேரம் இறுதி பஸ்ஸை புறப்பட ஆவன செய்யவேண்டும். அதுவே மக்கள் சேவை. இதனை பிரதேச செயலர், .இ.போ.ச. பொறுப்பாளர் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர், செயலாளர் ஆகியோர் கவனிப்பார்களா?

பாதிக்கப்பட்ட பிரயாணி

### இந்த நிலை என்று மாறும்

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் தொடர்ந்து பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக வலயக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம் பல நாள்களாகப் பூட்டப்பட்டுள்ளமையால் அதிபர், ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது உள்ளனர். பலரது சுயவிவரக் கோவைகள் இன்னும் பூர்த்தியாக்கப்படாது உள்ளதுடன் வருடாந்தச் சம்பள ஏற்றங்கள் கூட வழங்கப்படுவதில்லை. அதிகாரிகளின் உறவுகள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. திணைக்களத்தால் வழங்கப்படும் கடன்கள் ஒழுங்காக அதிபர், ஆசிரியர்களைச் சென்றடையவில்லை. அவை திணைக்களத்துக்குள் மட்டுப்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஒரு வருட காலமாகியும் இந்த வலயத்தில் உள்ள இரு பாடசாலைகளுக்கு இதுவரை அதிபர் வெற்றிடம் நிரப்பப்படவில்லை இதற்காக அதிகாரிகளின் உறவுகளைத்தேடி அலையும் தன்மை காணப்படுகின்றது. அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களுக்கு பொருத்தமான பாடசாலை வழங்கப்படுவதில்லை. சில அதிபர்கள் திட்டமிடப்பட்டு நசுக்கப்படுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கூடிய அக்கறைகொண்டு இந்த நிலையை நீக்கி உதவுமாறு வேண்டுகின்றோம்.

பாதிக்கப்பட்டோர் முல்லைத்தீவு

### கவனிப்பாரற்ற நிலையில்

மூளாய் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கிழக்கு பக்கமாகச் சென்று மூளாய், மாவடி வீதியிலுள்ள தபால் பெட்டிச் சந்தியை அடையும் குறுக்கு வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்தநிலையில் பல வருடகாலமாத் திருத்தப்படாத நிலையில்பெரும் குன்றும் குழிகளாகவும் உள்ளது. பெரும் கற்பாறைகள் மேல் எழுந்துள்ளன இந்த பாதையில் போக்குவரத்து செய்யும் மக்கள் மிகவும் அவல நிலைக்கு உள்ளாகின்றனர். இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இது வரை அக்கறை எடுத்து செய்யா திருப்பதால் மாரிகாலம் ஆரம்பமாவதற்கு முன் இதற்குரிய நடவடிக்கைகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இந்த வீதியைத் திருத்தித் தரும்படி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். மு.சிவபாலன், மூளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு திருந்த வேண்டும்

**டியூ.குணசேகர**

வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை அரசை வலியுறுத்தும் வகையில் வெளிநாடுகளிடம் கோரிக்கை விடுக்கும் புதிய கலாசாரம் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிமுகப்படுத்தியுள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்றுதான் இலங்கை அரசை வலியுறுத்துவதற்குக் கெஞ்சவேண்டிய நிலை கூட்டமைப்புக்கு உருவாகியுள்ளது.

அப்படியல்ல, உள்நாட்டிலேயே இருந்து கொண்டு அரசை வலியுறுத்தமுடியும். ஜனாதிபதியைச் சந்தித்து நாடாளுமன்றில் மற்றும் போராட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதன் மூலம் இலங்கை அரசை வலியுறுத்த முடியும். வெளிநாட்டுக்குச் சென்று இலங்கையைக் கேவலப்படுத்த வேண்டாமெனப் பலரும் கூறினார்கள். அதையும் மீறியே கூட்டமைப்பு சென்றது. எனவே, இப்போதாவது திருந்த வேண்டும்.

இப்படி சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்தார்.

# தோல்வி எனக் கூறமுடியாது

**ஜோன் அமரதுங்க**

இலங்கைத் தமிழர் விடயம் குறித்து வெளிநாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உரிமை உள்ளது. அதன்படியே ஐ.நா.செயலாளர் பான்-கீ மூனை சந்திக்கவிருந்தனர். எனினும், அச்சந்திப்பு இடம்பெறாதமைதமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதால் தமிழர்களது பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசுடன் பேசுவதற்கும் உரிமையுள்ளது.

அதேபோன்று, சர்வதேச நியதிகளின் ஜனநாயக நாடு என்ற வகையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

இதன்படி சர்வதேசத்துடன் நாமும் பேச்சு நடத்தமுடியும். ஆனால், இலங்கையின் இறைமைக்கும், ஜனநாயகத்துக்கும் பங்கம் ஏற்படும் வகையில் வெளிநாடுகளுக்குச் சென்று செயற்பட்டால் அது பிழையாகும்.

- இப்படி எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

## பான்-கீமூனை சந்திக்காமை கூட்டமைப்பின் தோல்வியா?

அமெரிக்காவுக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான்-கீ மூனைச் சந்திக்கவிருந்த நிலையில் ஐ.நாவின் அரசியல் விவகார உதவிச் செயலாளர் நாயகம் லின் பொஸ்கோவைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்த நிலையில் இது கூட்டமைப்புக் குக் கிடைத்த தோல்வியென ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

அத்துடன், கூட்டமைப்பு வெளிநாட் டுக்குச் சென்றதால் பயனில்லை என அரச தரப்பு கூறியது. இது தொடர்பில் நாம் அரசியல்வாதிகளிடம் கருத்துக் கேட்டோம்.

# அழைப்பை ஏற்றே சென்றனர்

**குமரகுருபரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளிநாடுகளுக்குத் தாமாகவே செல்லவில்லை. அவர்களால் அழைக்கப்பட்டதற்கு அமையவே அவர்கள் அங்கு சென்றார்கள். அப்படிச் சென்றவேளை, நேரம், வசதி போன்ற சிக்கல்களால் சந்திப்பு இடம்பெறவில்லை. இதனை வைத்துக்கொண்டு வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது அரசியல் அனுபவம் இல்லாதவர்களின் சிறுபிள்ளைத் தனமாகும்.

அத்துடன், அரசு இனப் பிரச்சினைப் பேச்சுகளில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்குமானால் இன்று கூட்டமைப்பு வெளிநாடு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காது.

அரச தூதரக அதிகாரிகள் இது தொடர்பில் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

மேலும் தமிழ்க் கூட்டமைப்பு வெளிநாடு சென்று சந்திப்பு நடத்துகின்றமை இருசாராரது விடயம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரவேண்டியது அரசின் பொறுப்பு. இன்றைய சூழ்நிலையில் இது வைக்கோலைத் தேவையானோருக்கு கொடுக்காமல் தானும் பயன்படுத்தாமல் பாதுகாக்கும் விலங்குபோல் ஆகிவிட்டது.

- இப்படி ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் கூறினார்.

# கவலைதான்; புதிய யுக்தி தேவை

**ரில்வின் சில்வா**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. செயலாளர் நாயகம் பான்- கீ மூனைச் சந்திக்கமுடியாமல் போனமை கவலைதான். எனவே, தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகாண்பதற்கு புதிய யுக்தி ஒன்றைக் கூட்டமைப்பினர் கடைப்பிடிக்க வேண்டும்.

ஏனென்றால், அரசு தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்காது என்பது உறுதி. தமிழ்க் கூட்டமைப்பும் அரசுடனான பேச்சில் சோர்ந்துபோயிருக்கிறது.

அதேவேளை, இலங்கை அரசு வெளி நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்படுகிறது.

அத்துடன், வெளிநாடுகளின் உதவியை தமிழ்க் கூட்டமைப்பு கோரி நிற்கின்றது. இந்தநிலையில் பான் - கீ மூனைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கூட்டமைப்புக்கு கிடைக்கவில்லை என்பது இழப்பாகும்.

ஆகவே, வேறொரு புதிய யுக்தி ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றுவது சிறந்தது. இப்படி ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

# கூட்டமைப்பின் வேடம் கலைந்தது

**பியசேன**

தமிழர் விடயம் தொடர்பாக பான்-கீ மூனைச் சந்திப்பதாக தமிழ் மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதியில் அவரைச் சந்திக்கவில்லை. இந்த நிலையில், தமிழ்க் கூட்டமைப்பின் வேடம் கலைந்துள்ளது.

இவர்கள் தமிழ் மக்களுக்காகப் பேச்சு நடத்த வெளிநாட்டுக்குச் செல்லவில்லை. இலங்கையில் இருந்து தப்பிச்சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கே சென்றிருக்கிறார்கள்.

இறுதியில் அப்பாவியான தமிழ் மக்களே ஏமாற்றமடைந்துள்ளனர்.

வீட்டுப் பிரச்சினையை வீதிக்குக் கொண்டு வந்துவிட்டார்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர். ஆயினும், தமிழருக்குத் தீர்வு வழங்க ஜனாதிபதி தயாராகவே உள்ளார். ஆனால், தமிழ்க் கூட்டமைப்பினர் அதனைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இப்படிக் [illegible] தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் [illegible] பொதுயப்பு பியசேன.

# மாணவரின் சாதனைகளை வெளிக்கொணர பாடுபட்ட அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்



புகழ்பூத்த அதிபர்கள் அணி செய்த இராமநாதன் கல்லூரியில் பதினெட்டு ஆண்டுகள், பணிசெய்து கல்லூரியின் பெருமைகளைக் காத்தவர் அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்.

கல்வி,சொல், நடைஉடை, ஆளுமை அரவணைப்பு ஆகிய அகம்நிறை பண்புமிக்க அன்னை இவர். எந்தவொரு மாணவியையும் ஆசிரியரையும் அன்பு செய்து ஆற்றுப்படுத்தும் தனித்துவம் மிக்கவர். போர்க் காலத்தில்இராமநாதன்கல்லூரியின் பொறுப்பை ஏற்று கல்லூரியைக் கட்டி வளர்த்தவர். மேலைத்தேய, கீழைத்தேய வாத்திய அணிமுதல் தேசிய மட்டத்தில் விளையாட்டுத்துறை, இசை, நாட்டியத்துறை வெற்றிகளைச் சந்திப்பதற்கு வித்திட்ட விவேகியாவார். கிளாலிக் கடல், இராணுவ போர் விமானம் ஆகிய துயரந்தரும் பயண வழிகளில் பயணித்து மாணவர்களின் சாதனைகளை வெளிப்படுத் தியவர். கல்லூரி விழாக்களில் மேடை அலங்காரம் ஆசிரியர் மாணவரின் ஒழுங்குகள் எனப் பலவற்றையும் கவனமாகக் கண்காணித்துச் செயலாற்றியவர். மாணவர்களுடைய உறவுகளின் இன்பதுன்பத்திலும் கலந்து கல்லூரிக்கான சமூகத் தொடர்பைக் கட்டி வளர்த்தவர். மும்மொழிப் புலமைமிக்கவர். இராமநாத வள்ளலுக்கு சிலை எடுத்து சரஸ்வதிபீடம் அமைத்து அருணாசலம் மண்டபத்தை அழகு மிளிரச் செய்தவர். மூடிய விடுதிச் சாலையை மீளத் திறப்பதற் காக இவர் ஆற்றிய பணிகள் பல. அல்லலுற்று வந்த வன்னிப் பிள்ளைகளுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி அன்பால்




அரவணைத்து அவர்களது கல்வியைத் தொடர உதவி நின்றவர். கல்லூரி வரலாற்றில் இவர் சாதித்த சாதனைகள் ஏராளம். முகாமைத்துவச் சிறப்பும் மனித நேயமும் மிக்க அதிபர் ஆனந்தி எல்லோர் மனங்களிலும் நிறைந்து நிற்பவராவார். கண்டிப்பு மிக்கவர். இதயத்தால் நேசிப்பார். வாழ்த்துவார். வாடிய நிலை கண்டால் வருந்துவார். உண்ணும் உணவை பகிர்ந்துண்பார். சிரிப்பால் அனைவரையும் ஈர்ப்பார். உறவை உரிமையோடு உறுதிப் படுத்துவார். அன்னையிடம் கற்றவை ஏராளம். காலமெல்லாம் மறக்க இயலாத நல்ல வழிகாட்டியை நன்றியோடு வாழ்த்துவோம்.

**திருமதி கோணேஸ்வரி இராமச்சந்திரன்.**
ஆசிரியர், யா/ இராமநாதன் கல்லூரி.

# சைவப் பாரம்பரியத்தை நழுவவிடாது ஆங்கிலத்தில் தேர்ச்சி கண்டவர்



வித்தியாதானமும் அன்னதானமும் ஒருங்கே ஆற்றியவர் செல்வி சிவபாக்கியம் அம்மையார். சங்கரச் சுப்பையனார் முதலிய இசை மூலம் ஆன்மீகம் வளர்த்த ஞானிகளைக் கண்ட உடுவில் பதியில் பொன்னம்பலம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாக உதித்தார். இளமைக் கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியில் கற்று சைவப் பாரம்பரியங்களை நழுவவிடாத ஆங்கிலத் தேர்ச்சியுடையவரானார். உயர் கல்விக்காக அன்னை தென்னிந்திய பல்கலைக் கழகம் சென்று விஞ்ஞானமானி பட்டம் பெற்றார்.




பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் உயிரியல் ஆசிரியராக கடமையாற்றி மருத்துவ பீடத்துக்கு பல்வேறு மாணவர்களை அனுப்பி பல வைத்திய நிபுணர்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்க ஏணியாக நின்றவர். கல்லூரியின் நிர்வாகத்திறன் கொண்ட உப அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சிறுவர்களுடைய ஆங்கிலக் கல்வியை முன்னேற்றும் நோக்கோடு உடுவில், சங்குவேலி முதலிய கிராமப் பாடசாலைகளில் ஆங்கில போதனாசிரியராகவும் கடமையாற்றிய அம்மையாரின் ஆன்மீகப் பயணம் வினோதமானது.

சந்நிதி முருகன் முன் ஞான தீட்சை பூண்ட மௌனகுரு கடவுள் சுவாமிகளை குருவாக கொண்டு ஞான உபதேசம் பெற்றார். உடுவில் கிராமத்தில் கடவுள் சந்நிதிஎன்ற ஆச்சிரமத்தை நிறுவி பல்வேறு சமய நிகழ்வுகளை நடத்தினார். சிவனடியார்களை அழைத்து அவர்களை சிவஞானியாகவே பாவித்து உபசரித்து விருந்தோம்பும் முறையான மகேஸ்வர பூசை செய்தார்.

குருநாதர் முத்தியடைந்த பின் குரு, பரம குரு ஆகியோருக்கு மறவன் புலோவிலே சமாதி பீடம் அமைத்து ஏனைய சீடர்களையும் இணைத்து அதன் தலைவராக இருந்து அடியவர்களோடு சென்று பூசை வழிபாடுகளையும் மகேஸ்வர பூசையினையும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஆற்றி வந்ததுடன் குருவினுடைய மஹா சமாதி தின காலங்களிலேயே ஜீவன் முத்தியடைந்ததும் அக்குரு முதலிய சித்தர்களுக்கு இணையாக அன்னையின் திருவுடல் மஹா சமாதி வைக்கப்பட்டிருப்பதும் சாமனியர்களிலிருந்து வேறுபட்ட அவரின் தெய்வீக நிலையை எடுத்துக் காட்டுகிறது.

**மோகன், உடுவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நிறை கூடிய புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறொயிலர் சுத்தம் செய்தது 01 கிலோ கிராம் ரூ.470/= மட்டுமே)
காலை 06.00 மணி தொடக்கம் இரவு 08.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். யாழ்ப்பாணம். (4-6-7)

## Dr.Pimple + Care

TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic



முகப்பருக்களுக்கு
**International Skin Peeling**
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு-021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078, 011-2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021-4923416, 021-2220288.

## 100 ஆவது பிறந்த நாள்



மணல்தரை வீதி.
கந்தர்மடத்தைச் சேர்ந்த
**நாகலிங்கம் அன்னலட்சுமி**
இன்று (12.11.2011) சனிக்கிழமை தனது 100 ஆவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.
அவர் நலமுடன் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

35/2, மணல்தரை வீதி.
கந்தர்மடம். (10319) (4-6-7)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் வீதியில் நான்கு பரப்புக் காணியும் வீடு வளவும் விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல- 0774404269 (6-7-8)

## வீடு, காணி விற்பனைக்கு

மல்வம், உடுவிலைச் சேர்ந்த பகுதியில் அமைந்துள்ள சிறிய வீட்டுடன் கூடிய 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 0775942396, 0214916283
(10270) (6-7-8)

## காணி விற்பனை

நல்லூர் கோயில் வீதியில் முன்னர் ICRC வாகனத்தரிப்பிடமாக பாவிக்கப்பட்ட 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 071 8474384
(காலை 7 மணிக்கு முன்னர் மாலை 5 மணிக்கு பின்னர்)
(10251) (6-7-8)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

தனிப்பாவிப்பிலுள்ள யமகா (NEWS MATE 50) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு
தொடர்பு :- 0776184487
(10279) (6-7-8)

## நாய்க் குட்டி விற்பனைக்கு

1 ½ வயது நிரம்பிய ஆண் நாய் பொமேரியன் வெள்ளை 1½ வயது கறுப்பு ஆண் நாய் மற்றும் குட்டிகள் விற்பனைக்குண்டு
க. நடராசா, காளிகோயிலடி, கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி, கோண்டாவில். (6-7-8)

## புத்தாண்டை முன்னிட்டு

மாபெரும் சலுகை
High Quality
பனர் பிரதியாக்கம் 35/= மட்டுமே...!
**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
யாழ்ப்பாணம் (C/5723) (6-7-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



அமரர் செல்லத்துரை
**சந்திரகுமார்**
(ஐயக்கோன் சந்திரன்)
மலர்வு: 01.10.1948
உதிர்வு: 13.10.2011

கடந்த 13.10.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வருகைதந்த அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோர் மற்றும் பல்வேறு வகைகளில் உதவிவழங்கியவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (12.11.2011) சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பராபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
தொ.பே: 0213214555 (10315) (4-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## உடனடி வேலைவாய்ப்பு

(அலுவலக உதவியாளர்)

Gateway நிறுவனத்தின் சாவகச்சேரி கிளைக்கு அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பதாரி கல்விப்பொதுச் சாதாரணதரம் கல்வி கற்றவராக இருத்தல்வேண்டும்.
நகர எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

Gateway Centre
**Uthayan IT Island**
New Market Building, Chavakachcheri
T.P: 021 227 0323, 021 867 0266 (சி-2860)(1,6,7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**சரா.புவனேஸ்வரன்**
[விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை]

**முன்னாள் பொதுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி**

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வரலாற்றில் முதன் முறையாக போட்டியின்றி பொதுச் செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக் கும் சரா.புவனேஸ்வரன் அவர்கள் துடிப்பும், ஆளுமையும், செயற்திறனும் உடைய ஒரு நிர்வாகி ஆவார். ஆசிரியர்களுடையதும் மாணவர்களினதும் நலன்களைக் குறிக்கோளாகக் கொண்ட எமது சங்கத்தின் கடந்தகால செயற்பாடுகளில் சரா.புவனேஸ்வரன் அவர்களுடைய பணியும், பங்களிப்பும் அளவிட முடியாததொன்று.

தமிழ் ஆசிரியர்களுடைய அபிலாசைகளை சிறப்பாக நிறைவேற்றும் உன்னத பணிக்காக கடந்த 37ஆவது தேசிய மாநாட்டில் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சரா.புவனேஸ்வரன் அவர்களின் தொழிற் சங்கப்பணி சிறப்பாக அமைய வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகளைப் பெற வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

த.மகாசிவம்
(முன்னாள் பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

### ஆசிரிய உறவுகளின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழ் ஆசிரியர்களின் உரிமைக்காகவும் உயர்வுக்காகவும் குரல் கொடுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எனும் உயர்ந்த தொழிற் சங்கப்பணிக்காக கடந்த 4.11.2011இல் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெற்ற 37 ஆவது தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் எமது வழிகாட்டியான உயர்திரு சரா.புவனேஸ்வரன் அவர்களைப் பாராட்டுவதுடன் கல்விப்புலத்துக்கு அவர்தம் அளப்பெரும் பணிகள் மேன்மேலும் சிறப்புற இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - அரியாலை. (10321)(1,6,7)

வாழ்த்துவோர்:
ஆசிரிய உறவுகள்.

## விற்பனைக்கு

அரச அலுவலரின் தனிப் பாவனையில் இருந்துள்ள மிகவும் நல்ல நிலையில் உள்ள NPHC xxxx இலக்க Honda Super Cup Custom 50 (Badge model) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு 0779233437
(10320) (6-7-8)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மஞ்சவனப்பதிக்கு முன்பாக சகல வசதிகளும் கொண்ட பெரிய மாடி வீடு அரச/ அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: எஸ்.சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம்.0770464298,0213001295
(10252) (3,6,8)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா No.01 புறொயிலர், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

01. நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். யாழ்ப்பாணம். தொ.பே: 0212226944
02. நல்லூர் பாம் சென்ரர், கனகபுர வீதி சந்திப்படி, கிளிநொச்சி. தொ.பே: 0776225944
03. சுண்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே: 0778996085
(10325) (4-6-7)

## 1. UK London Student Visa

முந்தும் முதல் 3 மாணவர்களுக்கு 25 வீதம் கொடுப்பனவு கழிவு வழங்கப்படும்

★ 2011 இல் A/L எழுதிய மாணவர்களா நீங்கள்?
★ உங்கள் பரீட்சை முடிவுகள் வருவதற்கு முன் London இல் கல்வி கற்க விசேட சந்தர்ப்பம்!
★ O/L இல்லாத மாணவர்களும் Visa பெறமுடியும்!
Bank Sponsor செய்து கொடுக்கப்படும்

2011இல் Visa பெற்ற மாணவர்களில் சிலர்



Logarajani Jaffna | S.Jasotharan (Pointpetro) | Thanusiya Jaffna | Kesavan Jaffna | Thaskumar Jaffna | Suthagaran Thellippalai

## 2. UK Visit Visa

★ London இல் உறவுகள் இருக்கின்றனரா?
★ நீங்கள் தனிநபர் or கூட்டு வியாபாரச் சான்றிதழ் வைத்திருக்கின்றீர்களா?
நீங்கள் புதுமணத்தம்பதியினரா?
★ அரச உத்தியோகத்தரா?

கவலையை விடுங்கள் ஒருமுறை நேரில் சந்தியுங்கள்!!!
தொடர்புகளுக்கு:

Branch: SEC Visa Tech,
620, K.K.S. Road, Jaffna.
(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக) (10285)(1,6,7)

Hot Line: 0771022984, 0777887181

"நம்பிக்கையும் விடா முயற்சியும் வெற்றிக்கு உரம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனையில் ஒரு பகுதி மக்களை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு

## பொதுமக்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம்

அட்டாளைச்சேனை, நவ.12

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அஷ்ரப் நகர் பிரதேசத்தின் குறித்த தொரு பகுதியில் வசிக்கும் பொதுமக்களை உடனடியாக வெளியேறுமாறு கடந்த புதன்கிழமை அரச அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இதனால் குறித்த பகுதிப் பொதுமக்களுக்கும், அதிகாரிகளுக்குமிடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

அஷ்ரப் நகரின் குறித்த பகுதிக்கு வன பரிபாலனத்துறை அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸார், அட்டாளைச் சேனைப் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கடந்த புதன்கிழமை சென்றுள்ளனர்.

இந்தக் காணிகள் அரசுக்குச் சொந்தமானவை எனத் தெரிவித்த வனபரிபாலனத்துறை அதிகாரிகள், குறித்த காணிகளில் வசிப்போர் அங்கிருந்து உடனடியாக வெளியேறவேண்டும் என்று உத்தரவிட்டனர். இதனையடுத்து, குறித்த காணியில் வசிப்போருக்கும், அதிகாரிகளுக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.



30 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்தப் பகுதியில் வசிக்கின்றன. இந்தநிலையில், இந்தக் காணிகளில் தாம் பல வருடங்களாக வசித்து வருகின்றனர். இந்தக் காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தங்களிடம் உள்ளன என்று காணியில் வசிப்போர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, சில காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தம்மால் தவறுதலாக வழங்கப்பட்டுவிட்டனஎன்று அட்டாளைச் சேனைப் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிட்டார்.

இது குறித்து, உரிய காணியில் வசிக்கும் ஐ.எல். இப்றா லெப்பை என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்:

காணிகளுக்குத் தவறுதலாக அனுமதிப் பத்திரங்கள் வழங் கப்பட்டு விட்டன என்று பிரதேச செயலாளர் ஒருவர் தெரிவிக் கின்றமையானது ஏற்றுக்கொள்ள முடியாததொரு விடயமாகும். இந்தக் காணியிலிருந்து ஒரு போதும் நான் வெளியேற மாட்டேன். (ச)

## வட்டவளை பொலிஸில் தமிழ்மொழி புறக்கணிப்பு

நுவரெலியா, நவ.12

பெருதோட்டங்கள் சூழ்ந்த பகுதியிலுள்ள வட்டவளை பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழிக்கு உரிய மதிப்பு வழங்கப்படுவதில்லை என்று வட்டவளை பிரதேச தமிழ்பேசும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் செயற்படும் பிரிவுகள் தொடர்பான விளம்பரப் பலகையில் சிங்கள மொழியில் மாத்திரமே அறிவுறுத்தல்கள் இடம்பெற்றிருப்பதால் தமிழ்பேசும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

எனவே, பொலிஸ் நிலையத்தில் தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்குவதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வட்டவளை, மவுன்ஜீன், லொனெக், றொசல்ல, கரோலினா போன்ற தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## ஓட்டோ விபத்தல் சிறுவன் மரணம்

மேல்கொத்மலை, நவ.12

தலவாக்கலை, மேல்கொத்மலை புதிய வீடமைப்பு திட்டத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்ததுடன் நால்வர் படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த ஓட்டோவில் நான்கு சிறுவர்களும் சாரதியும் பயணித்து கொண்டிருந்தபோது திடீரென ஓட்டோ பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதில் எஸ்.சாயிட் என்ற சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஏனைய நான்கு பேரும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பெண்ணிடம் தங்கச் சங்கிலி அறுத்தெடுப்பு

நாவிதன்வெளி, நவ.12

வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த இளம் குடும்பப் பெண்ணிடமிருந்து தங்கச்சங்கிலி ஒன்று கொள்ளையர்களால் கடந்த புதன்கிழமை அறுத்தெடுக்கப்பட்டுள்ளது.

சுளவாஞ்சிக்குடியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பெண் சமையல் அறையில் சமைத்துக் கொண்டிருந்துள்ளார். மறைந்திருந்த கொள்ளையர்கள் பின்புறமாகப் பெண்ணின் கழுத்தில் இருந்த இரண்டு பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். (ச)

# தோட்ட அதிகாரிகளின் உதாசீனத்தால் வாக்குரிமை இழந்த இளைஞர், யுவதிகள்

## தேர்தல் ஆணையாளர் தகவல்

நுவரெலியா, நவ. 12

தோட்ட அதிகாரிகளின் உதாசீனத்தால் ஆயிரக்கணக்கான இளைஞர் - யுவதிகள் பல தேர்தல்களில் தமது வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளனர் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற மலையகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

நீண்டகாலமாகவே இந்த நிலை நடந்துள்ளது. என்றாலும், தேர்தல்கள் செயலகம் அண்மையில் நடத்திய பரிசீலனைகளின் பின்னரே இது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தோட்ட அதிகாரிகள் வேண்டுமென்றே அதிக எண்ணிக்கையான இளைஞர் - யுவதிகளின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியுள்ளதுடன் புதியவர்களின் பெயர்களைப் பதியவும் தவறியுள்ளனர்.

இதன்காரணமாகத் தகுதி பெற்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு பல தேர்தல்களில் வாக்களிக்கமுடியாது போயுள்ளது. தோட்டப்புற இளைஞர் - யுவதிகளில் ஏராளமானோர் கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் தொழில் நிமித்தம் தங்கியுள்ளனர்.

இவ்வாறானவர்களின் பதிவுகளைத் தோட்ட அதிகாரிகள் புறக்கணித்துள்ளனர்.

தோட்டங்களில் தொழில் செய்யாதவர்களுக்கு வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதியும் உரிமை இல்லை என்ற காரணத்தைக் காட்டியே ஆயிரக்கணக்கானவர்களின் பெயர்கள் பதியப்படவில்லை. ஏற்கனவே பதியப்பட்டிருந்தவர்களும் இந்தக் காரணத்தை முன் வைத்து நீக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நீதிக்குப் புறம்பானமுறையில் நீக்கப்பட்ட பெயர்களை மீண்டும் பதிவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார். (ச)

## தனியார் பஸ் நடத்துநர்களின் அடாவடித்தனம்

கண்டி, நவ.12

ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவ, சாஞ்சமலை, சலங்கண்டி, பேரடைஸ், டயகம போன்ற இடங்களில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் களில் முறையாக பயணச்சீட்டு வழங்கப்படுவதில்லை என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

சில நடத்துநர்களிடம் பயணச் சீட்டுக் கேட்டால் அவர்கள், பயணிகளை இறக்கி வேறு பஸ்களில் பயணிக்குமாறு மிரட்டுகின்றனர் என்றும் பயணிகள் விசனிக்கின்றனர். இது தொடர்பாக மத்திய மாகாண தனியார் பஸ் அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)




கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் சர்வதேச உளச் சுகாதார தின நிகழ்வை அண்மையில் நடத்தியுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் [illegible] வெளியிட்ட உளச்சுகாதார நூலின் [illegible] பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் [illegible] கின்றார். (30)

## பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த மாவனல்லை பிரதேச சபை உறுப்பினர் விளக்கமறியலில்

கம்பளை, நவ.12

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட மாவனல்லை பிரதேச சபை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவனல்லை நீதிமன்ற நீதிவான் சிசிரத் விஜேசேகர உத்தரவிட்டார்.

ஹெம்மாத்தகம பகுதியில் உள்ள பிரதேசசபை உறுப்பினரின் உறவினரொருவரது மர ஆலையை சுற்றிவளைக்கச் சென்ற பொலிஸாரை அவர்களது கடமைகளை மேற்கொள்ள விடாது தடுத்தபோதே இவரையும் இவரது ஆதரவாளர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள அனுமதிப்பத்திரமற்ற மர ஆலைகளுக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி செய்த எண்ணெய் திருட்டு 5 பேர் கைது; 14 பேரைத் தேடி வேட்டை

கொழும்பு, நவ. 12

களனி நிறுவனமொன்று மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்த ஏழு கொள்கலன் மரக்கறி எண்ணெய் துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட பின் இடைவழியில் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் துறைமுக ஊழியர் ஒருவர் உட்பட ஐந்துபேர் களனி சிங்காரமுல்ல பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பேலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

துறைமுக ஊழியர் ஒருவரும் கொள்கலன் சாரதிகள் இருவரும் உதவியாளர்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 14 பேர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த ஏழு கொள்கலன்களும் அவற்றிலிருந்து திருடப்பட்ட 35 ஆயிரம் லீற்றர் எண்ணெயும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கொள்கலன்களில் முத்திரைகளைக் கழற்றாமல் நுட்பமான முறையில் கதவுகளை மாத்திரம் கழற்றியே எண்ணெய் வெளியே எடுக்கப்பட்டுள்ளது. நீண்டகாலம் செய்துவந்த இந்தத் திருட்டு மூலம் அவர்கள் பலகோடி ரூபாவைப் பெற்றுள்ளனர். (ச-22)



சம்பள உயர்வுகோரி அரச ஊழியர்கள் கடந்த புதன்கிழமை கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது...

# சீனித் தொழிற்சாலைகளில் மதுசாரமே அதிக உற்பத்தி

கொழும்பு, நவ.12

பெல்வத்தை - செவனகல சீனித் தொழிற்சாலைகள் தேசியமட்டத்தில் சீனி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அங்கு சீனியைவிட மதுசாரமே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது என்று தென்னை அபிவிருத்தி மற்றும் தேசிய தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஏ.பீ.ஜகத் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு, டார்லி வீதியிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடந்த ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பெல்வத்த சீனித்தொழிற்சாலை 1986 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபோது நாட்டின் சீனித் தேவையில் 12 சதவீதத்தை ஈட்டியது. அது இப்போது 3 சதவீதமாகக் குறைவடைந்து மதுசாரத் தயாரிப்பு அதிகரித்துள்ளது.

2002 ஆம் ஆண்டில் பெல்வத்த தொழிற்சாலை தனியாருக்குக் கொடுக்கப்பட்டபோது அதில் 760 நிரந்தர ஊழியர்களும், 1,200 தற்காலிக ஊழியர்களும் இருந்தனர். எனினும், இன்று சுமார் 250 பேர் மட்டுமே எஞ்சியுள்ளார்கள். முன்பு அவர்களுக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதங்கள் இன்று இல்லை.

பெல்வத்த தொழிற்சாலை 2002 ஆம் ஆண்டில் தனியார் மயமாக்கப்பட்டபோது 26 கோடி ரூபா நிலையான வைப்பு இருந்தது. அதன் இன்றைய பெறுமதி 57.5 கோடி ரூபா. எனினும், அன்று அதன்விலை 55 கோடி. வாங்கியவருக்கு அன்றைய பெறுமதியில் இரண்டுகோடி ரூபா லாபம் இருந்தது. அதனை விற்று 19 வருடங்கள் ஆகின்றன. ஆனால், இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை - என்றார். (ச)

# சிறந்த நூலகங்களுக்கு விருது

சாவகச்சேரி, நவ.12

தேசிய ஆவணங்கள் சபையினால் வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் ஐந்து நூலகங்கள் சிறந்த நூலகங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் இதற்கான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் நாவற்குழி, கைதடி, சரசாலை, கச்சாய், வரணிஆகிய பொது நூலகங்கள் சிறந்த நூலகங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-131)

# ஆவணங்களில் குறைபாடுகள்; பொலிஸ் பதவி உயர்வு இரத்து

கொழும்பு, நவ. 12

கடந்த காலங்களில் பொலிஸார் தங்களது பதவியுயர்வுகளுக்காக சமர்ப்பித்திருந்த ஆவணங்களில் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாலேயே அவர்களின் பதவி உயர்வுகள் இரத்துச் செய்யப்பட்டன என்று பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வுகள் இரத்துச் செய்யப்பட்டவர்கள் மீண்டும் உயர்வுபெற விரும்பினால் ஆவணங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து மேன்முறையீடு செய்யலாம் என்று அவர் தெரிவித்தார். ஆவணங்களின் குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்பட்டால் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் அவ்வாறே நீடிக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பதவி உயர்வுபெற்ற பொலிஸாரின் ஆவணக் கோப்புகளைப் பரிசீலனை செய்தபோதே இந்தக் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 28.11.1989



உதிர்வு: 29.09.2011

### அமரர் நவரத்தினம் அனோஜன்

*(மின்சார சபை ஒப்பந்தகார ஊழியர்)*

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.11.2011) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எமது மகனின் பிரிவுத்துயர் கேட்டு உடன் வந்து உதவிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து மலர்வளையம், மலர்கள், மலர்மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் இரங்கல் செய்தி வெளியிட்டும் தொலைபேசி மூலமும் தபால், தந்தி மூலமும் துன்பத்தைப் பகிர்ந்துகொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகள்.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(10244)(1,6,7)

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் பரமநாதன் பொன்னையா

(ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்)



தோற்றம் 10.04.1945 — மறைவு 13.10.2011

கடந்த 13.10.2011 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.11.2011) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

(ச/5696)(3,6,7)

மனைவி
0773049826

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

DR.HAIR

TRICHOLOGY CENTRE

Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புழுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-24,25 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் தூக்கைத் தடுக்கத் தீர்மானம் தமிழக அமைச்சரவையில் நிறைவேறும்

## சீமான் நம்பிக்கை

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக அமைச்சரவையைக் கூட்டி ரத்து செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் நம்பிக்கை வெளியிட்டார்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனைக்கு 8 வார கால தடை விதிக்கப்பட்டது. இதுதொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணை இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வேலூர் ஜெயிலில் இருக்கும் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

அதன்பின்னர் வெளியே வந்த அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

சிறையில் உள்ள மூவரின் தூக்குத் தண்டனை வழக்கு



எதிர் வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. அவர்கள் 3 பேரும் சட்டரீதியாக விடுதலை யாவார்கள். தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

தூக்குத் தண்டனையே கூடாது என்று தமிழர்கள் மட்டுமல்ல, பல்வேறு அமைப்பினரும் குரல் கொடுத்து வருகின்றனர். இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் உண்ணா விரதம் ஆகியவை நடத்தி எமது உணர்வை வெளிப்படுத்தி வருகிறோம்.

கொலைக்குத் தண்டனை கொலையாகாது. 21 ஆண்டுகள் நீண்ட ஆயுள் தண்டனை அனுபவித்துள்ளனர். அவர்களுக்கு 2 தண்டனை கொடுக்கக் கூடாது. எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கில் அவர்கள் விடுதலை யாவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழக அமைச்சரவையை முதலமைச்சர் ஜெயலலிதா கூட்டி தூக்குத் தண்டனையை ரத்து செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டில் இருந்து 10 ஆண்டுகள் அமெரிக்கா, கனடா செல்ல விசா எடுத்து உள்ளேன். தற்போது சர்வதேச அளவில் தமிழர்களை நான் ஒருங்கிணைந்திடுவேன் என்ற அச்சம் காரணமாக எனக்கு அமெரிக்கா, கனடாவுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது - என்றார் அவர். (வ)

# கடலோரப் பாதுகாப்புக்கு 150 நவீன படகுகள்



இந்திய கடலோரப் பாதுகாவலுக்காக 150 நவீன கண்காணிப்பு படகுகளை வாங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கடலோர பாதுகாவல் திட்டம்-2 இன் படி, தமிழ்நாடு உட்பட 9 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி உட்பட 4 யூனியன் பிரதேசங்களின் கடலோரக் காவல் பணிக் காக, இந்த நவீன படகுகள் வாங்க கேள்வி கோரப் பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடல் வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவும் தீவிரவாதிகளைக் கண்காணிக் கவே இந்த நவீன படகுகள் வாங்கப் படுவதாகவும்,

இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.1,579 கோடி அனுமதி அளித்து உள்ளது என்றும், 5 ஆண்டுக்குள் இந்தத் திட்டம் நிறைவு பெறும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

# கூடங்குளத்தில் மின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தம்

கூடங்குளத்தில் அடுத்த மாதம் ஆரம்பிக்க விருந்த மின் உற்பத்தியை மத்திய அரசு 3 மாதங்களுக்கு பிற்போட்டு வைத்துள்ளது. இதனால் ரஷ்ய விஞ்ஞானிகள் பலர் நாடு திரும்ப முடிவு செய்துள்ளனர்.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரூ.13,500 கோடி செலவில் 1000 மெகாவாற் மின் உற்பத்தி திறனுள்ள இரண்டு அணு உலைகள் அமைக்கப் பட்டு வருகின்றன.

முதலாவது அணு உலைக்கான பணிகள் முடிவடைந்து அடுத்த மாதம் மின் உற்பத்தி ஆரம்பமாகும் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டது. இவற்றில் 50 சதவீத மின்சாரம் தமிழகத்துக்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான பொதுமக்களின் போராட்டம் மாதக்கணக்கில் நடந்து வருகிறது. போராட்டத்தின் தீவிரம் காரணமாக மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் படி கடந்த 13ஆம் திகதி முதல் அணு உலை பணிகள் நிறுத் தப் பட்டுள்ளதாக திட்ட இயக்குநர் காசிநாத் பாலாஜி தெரி வித்தார்.

இதனிடையே யூனிட் 1 மின்சாரம் தயார் நிலையில் உள்ளதாகவும், அந்த அணு உலையில் மாதிரி எரிபொருளை நீக்கி யுரேனியத்தை நிரப்புவது போராட்டம் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய அணுசக்தி கழக இணையத் தளத்தில் கூடங்குளம் அணுமின் நிலைய யூனிட் 1இல் 2012 மார்ச் மாதத்திலும், யூனிட் 2இல் அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்திலும் மின் உற்பத்தி ஆரம்பமாகும் என்று புதிய தகவல் இடம் பெற்றுள்ளது.

எஞ்சியுள்ள பணிகளை நிறைவு செய்ய சுமார் 1000 ஊழியர்கள் கூடங்குளத்தில் தயார் நிலையில் வைக்கப் பட்டு இருந்தனர். தற்போது அவர்களும் பணி முடக்கம் காரணமாக ஊர் திரும்பி விட்டனர். (வ)



வன தியாகிகள் தினத்தை முன்னிட்டு, ஐதராபாத் நேரு உயிரியல் பூங்காவில் உள்ள வன தியாகிகள் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார் ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி.

# கூடங்குளம் அருகில் பேரணி

நெல்லை, நவ.12

கூடங்குளம் அணுமின்நிலையத்தை மூட வலியுறுத்தி அணு மின் நிலைய எதிர்ப்பாளர்கள் 24 ஆவது நாளாக உண் ணாவிரத போராட்டம் இருந்து வருகிறார்கள். இந்தநிலையில் கூடங்குளம் அருகே உள்ள செட்டிகுளத்திலும் நேற்று பேரணியும் உண்ணா விரத போராட்டமும் நடத்தப்பட்டது.

இதில் அணுமின்நிலையம் அமைக்கப்படும் பகுதியைச் சுற்றி உள்ள 20 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர் இவர்களுடன் மதுரையில் இருந்து கூடங்குளத்திற்கு யாத்திரையாக வந்தி ருந்த அணுசக்தி எதிர்ப்பாளர்களும், விஞ்ஞா னிகளும் கலந்து கொண்டார்கள்

# வளர்ச்சித் திட்டங்களை அபகரிக்கிறது கம்யூனிஸ்ட்

## ராகுல் குற்றச்சாட்டு

திரிபுராவின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கும் நிதிகளை கம்யூ னிஸ்ட்டுகள் அபகரிப்பதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

திரிபுராவில் செயற்பட இயலாமல் உள்ள இடதுசாரிகளின் ஆட்சியை 2013 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்ட சபைத் தேர்தலில் வெற்றி பெற்று அகற்றுவோம் என்று காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் ராகுல் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பாக நடந்த பொதுக் கூட்டத்தில் ராகுல் பேசுகையில்:

கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக் கையில் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகத் தெரியவில்லை. மாநிலத்தின் வளர்ச்சிக்கு பாடுபடும் காங்கிரஸ் கட்சி விரைவில் திரிபுராவில் ஆட்சி அமைக்கும். செயலற்றுக் கிடக்கும் இடது சாரிக் கட்சிக்கு மக்கள் ஓய்வு கொடுப்பர்.

மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கும் நிதியை கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள ஊழல்வாதிகள் தங்கள் கைக்குள் போட்டுக் கொள்கின்றனரே தவிர மேம்பாட்டுப் பணிகளுக்கு அதனை பயன்படுத்துவதில்லை-என்றார். (வ)

# இந்திய சிறைகளில் வாடும் வெளிநாட்டு கைதிகள்

இந்திய சிறைகளில் வெளிநாட்டு கைதிகள் பலர் வாடும் நிலையில் இருப்பதாகவும், இவர்களுக்கான வழக்கை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுக்காமல் உள்ளதாகவும் உச்ச நீதிமன்றம் தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் நேற்று மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். இதுபோன்று பலர் நீண்ட காலமாக சிறையில் வாடுவதாகவும், விரைந்து வழக்கை முடிக்கா மல் தாமதம் காட்டியது ஏன் என்றும் நீதிபதிகள் தங்களுடைய நோட்டீஸில் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதில் பாகிஸ்தான் கைதிகள் எத்தனைபேர், என்ன என்ன குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர் என்ற முழு விவரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும் நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர். (வ)

# தனி மாநிலத்துக்குப் பதிலாக தெலுங்கானா தன்னாட்சிக்குழு

## மத்திய அரசு நடவடிக்கை

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தனி மாநிலம் அமைப்பதற்குப் பதிலாக, தெலுங்கானா தன்னாட்சி குழுவை அறிவிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஐதராபாத் உள்ளிட்ட 10 மாவட்டங்களை ஒன்றிணைத்து தனி மாநிலம் உருவாக்கக் கோரி, தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி உள்ளிட்ட கட்சிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றன. அதே நேரத்தில், கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமா பகுதி மக்கள், ஆந்திராவை இரண்டாகப் பிரிக்க எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இந்த பிரச்சினை குறித்து ஆராய மத்திய அரசு, ஸ்ரீகிருஷ்ணா குழுவை அமைத்தது. இந்த குழு, ஆந்திராவின் அனைத்து பகுதி களுக் கும் சென்று நிலைமையை ஆராய்ந்து அறிக்கை அளித்தது. ஆந்திராவை பிரிப்ப தால், சாதகத்தை விட பாதகங்கள் தான் அதிகம் என்று இந்த குழு தனது அறிக்கையில் தெரிவித்தது. இதனால், தெலுங்கானாவை உருவாக்கும் நடவடிக்கையை மத்திய அரசு கிடப்பில் போட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தெலுங் கானா அரசியல் கூட்டு நடவடிக்கை குழு வினர் அண்மையில் தொடர் போராட்டங்களை அறிவித்து, போக்குவரத்தை தடை செய்தனர். தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் போராட் டத்தில் ஈடுபட்டதால், ஆந்திராவில் சகஜ நிலை பாதிக்கப்பட்டது. இந்த மாதத்துக்குள் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக மத்திய அரசு சார்பில் உறுதியளிக்கப்பட்டது. எனவே, தனித் தெலுங்கானா குறித்த அறிவிப்பு இந்த மாதத்தில் வெளியிடப்படும் என்பதால், ஆந்திர மக்கள் மத்திய அரசின் முடிவை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

ஆந்திர மாநிலத்துக்கான காங்கிரஸ் மேலிட தலைவர் குலாம் நபி ஆசாத், மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் ஆகியோர், சமீபத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியாவைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவதில் ஆந்திர மாநில கட்சி களுக்குள் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இதன் காரண மாக, தனி மாநிலம் உருவா னால், ஸ்திரமற்ற அரசியல் நிலை ஏற்படும் என்பதால், இந்த திட் டத்தை கைவிட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அதற்குப் பதிலாக தெலுங்கானா தன்னாட்சி குழுவை உருவாக்கி, அந்தக்குழுவின் தலைவருக்கு துணை முதல்வருக்குரிய அதிகாரம் அளிக்கவும் மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. ஆந்திர மாநில காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சீனிவாசனை, இந்த குழுவின் தலைவராக்கவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் செல்லையா தெட்சணாமூர்த்தி (சாமி)

பிறப்பு 09 . 04 . 1954



இறப்பு 24 . 10 . 2010

**திதி: அபரபக்க துதியை (12.11.2011)**

அன்புக்கும் பாசத்துக்கும் பண்புக்கும்
உறைவிடமாய் வாழ்ந்த எங்கள் குல விளக்கே
எமைவிட்டு எங்கு சென்றீர்கள் தேடுகின்றோம்
ஆண்டொன்று போனாலும் இவ் உலகம்
உள்ளவரை வாழும் உங்கள் நினைவுகள்...

**1 ஆம் குறுக்குத்தெரு,**
**பண்ணாகம்,**
**சுளிபுரம்.**

**குடும்பத்தினர்.**

(10329)(3,6,7)



# 180 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திதி: 13.11.2011

## செல்வி நிதர்சனா முருகானந்தராசா (ரவி)

கண்களில் நீர் கலங்கி நிற்க ஆர் துயரம் எமை வருத்த
உன் விழிதனை மூடி என் செல்வமே உறங்கி விட்டாய்
சத்தமில்லா உன் அடக்கம் சகிப்பில்லா உன் பொறுமை
வற்றாத உன் அன்பு வாடாத உன் புன்சிரிப்பு
அத்தனையும் இங்குவிட்டு என் மகளே எமைப் பிரிந்தாய்
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் உந்தன் பிரிவு
எம்மை விட்டு நீங்காது எம் தெய்வமே

எம் இல்லத்தில் ஒளி விளக்காய் எம் இதயமாய் விளங்கிய எம் தெய்வம் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபச் செய்தியினை தெரிவித்த அன்பு இதயங்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் எமது தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிப்பதோடு நாளை (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை - [illegible], தாய் - [illegible]
அண்ணன் - [illegible]
தொ.பே: 0778332303

(10330)(1,6,7)

## செயலமர்வுகள் பிற்போடல்

யாழ்ப்பாணம், நவ.12

தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்ளோமா முதலாம் வருட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என்றும் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும் என்று பிராந்திய இணைப்பாளர் த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (வ)

## மாடு திருடியவர் அகப்பட்டார்

தென்மராட்சி, நவ.12

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த பசு மாட்டினை கடத்திச் சென்ற நபர் வரணி, இயற்றாலை பகுதி பொதுமக்களிடம் அகப்பட்டார்.

அப்பகுதியில் மாட்டை விற்பனை செய்ய முற்பட்ட வேளையில் சந்தேகம் கொண்ட பொது மக்கள் இவரை விசாரித்தபோது திருடிவந்த மாடு என உண்மையை ஒத்துகொண்டதையடுத்து திருடனையும் மாட்டையும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனை அறிந்த மாட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையம் சென்று மாட்டை அடையாளம் காட்டி மீட்டு வந்துள்ளார். கடந்த திங்கட்கிழமைமேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்தவேளையில் திருடப்பட்ட மாடு நேற்றுமுன்தினம் வீட்டுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)


# Computer Express

Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language
University of Madras Bsc

Batch I 12.11.2011:- 9 am or 3Pm Batch II 13.11.2011:- 9 am or 3Pm
Batch III 16.11.2011:- 9 am or 3Pm Batch Iv 18.11.2011:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444



# வெளிவந்துவிட்டது

## பௌதிகப் புவியியல்

Physical Geography

பௌதிகப் புவியியலின் சகல பாடப்பரப்புக்களும் உள்ளடங்கியதாகவும், உயர்தர மற்றும் பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மாணவர்களின் பாடத்திட்டங்களுக்கு அமைவாகவும் வெளிவந்துள்ளது.

*யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.*

320 பக்கங்கள் (A4 தாள்)

ஆசிரியர் கு.கிரிதரன்
தொ.இல.0779168514, 0750416785

(10288)(3,6,7)


# 2 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மலர்வு 18 . 01 . 1937



உதிர்வு 12 . 11 . 2009

**திருமதி சுவாம்பிள்ளை மேரிலுவிகா (பவளம்)**

ஆண்டுகள் பல கடந்து சென்றாலும்
ஆறுமா உங்கள் நினைவலைகள்
ஆற்றுவோம் ஆத்மா சாந்தியை
ஆண்டுகள் பல கடந்து சென்றாலும்
இவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

**இல.98. குடமத்தி.**
**உருத்திரபுரம்.**

(4-6-7) (140010)

**இவரின் துயரால் துயருறும்:**
குடும்பத்தினர்.

# கிளி /கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்

## தரம் 5 புலமைப்பரிசில் பாராட்டு விழா

## 12.11.2011



இன்று [illegible]க் கௌரவிக்கப்படும் இம் மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

(140011)(1,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு இராணுவப் பயிற்சிக்கு பாகிஸ்தான் - சீனா திட்டம்

## இந்தியாவை மிரட்ட அல்லவாம்

பீஜிங், நவ.12

இந்த ஆண்டில் முதன் முறையாகப் பாகிஸ்தானும், சீனாவும் 2 முறைகள் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளன. இந்தநிலையில் இந்தக் கூட்டுப் பயிற்சி இந்தியாவை மிரட்டும் வகையிலேயே நடக்க இருப்பதாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால் இந்தக் கூட்டுப் பயிற்சி இந்தியாவை மிரட்டுவதற்காக அல்ல என்று சீன இராணுவம் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக சீன இராணுவத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

நட்பு முறையிலும், தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை காரணமாகவும் சீனாவும், பாகிஸ்தானும் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட இருக்கின்றன.எந்த ஒரு மூன்றாவது நாட்டையும் அச்சுறுத்துவதற்காக நாங்கள் பயிற்சியில் ஈடுபடவில்லை. எங்களது இராணுவத் திறமையைப் பரிசோதித்துக் கொள்வதற்காகவே இந்தப் பயிற்சியில் ஈடுபடுகிறோம்.இது ஒரு பாரம்பரியமான பயிற்சிதான். இரு நாடுகளுக்குமே தீவிரவாத அச்சுறுத்தல்கள் உள்ளன. இதை சமாளிக்கும் விதமாக இந்தப் பயிற்சி அமையும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சீனப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

இதேவேளை சீனாவைச் சேர்ந்த ஏராளமான இராணுவ விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், பாகிஸ்தானில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவும் இந்தியாவை அச்சுறுத்தும் வகையில் அமைந்திருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ந)



சீனா வந்திருந்த சர்வதேச நிதியமைப்பின் தலைவர் கிறிஸ்டினா லகார்டே (இடது), அந்நாட்டு பிரதமர் வென்ஜியாபோவை, பீஜிங் நகரில் சந்தித்துப் பேசினார்.

## கால்வாயில் வாகனம் கவிழ்ந்து நேபாளத்தில் 18 பேர் சாவு

காத்மாண்டு, நவ.12

நேபாளத்தில் பக்தர்கள் புனித யாத்திரை சென்ற வாகனம், கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் பலியாகினர்.

நேபாளத்தின் ஜுஷா மாவட்டத்திலிருந்து பக்தர்கள் பலர், சன்சாரி மாவட்டத்தில் உள்ள பிரக்ஷேத்ரா என்ற புனித தலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பக்தர்களின் வாகனம் திடீரென நிலைத் தடுமாறி, மோர்க்னா நீர்பாசனத் திட்டக் கால்வாயில் கவிழ்ந்தது. இதில், 16 பெண்கள் உட்பட, 18 பேர் பலியாகினர்; ஆறு பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் தாரன் பகுதியில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன் கால்வாயில் மூழ்கியவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். (ந)

## மைக்கல் ஜக்சன் பாவித்த பொருள்கள் அடுத்த மாதம் ஏலத்துக்கு



மைக்கேல் ஜாக்சனால் இறுதி நாள்களில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள், அமெரிக்காவில் அடுத்த மாதம் ஏலம் விடப்பட இருப்பதாக டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மைக்கேல் ஜாக்சனால் அவரது இறுதி நாள்களில் பயன்படுத்தப் பட்ட பொருள்களை அடுத்த மாதம் 12 ஆம் திகதி லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

இதனையடுத்து டிசெம்பர் 17ஆம் திகதி இதற்கான ஏலம் நடை பெற உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஜாக்சன் மரணமடைந்த படுக்கை அதிக ஏலத்துக்கு விலைபோகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மேற்கோள் காட்டிக் குறிப்பிடப்பிட்டுள்ளது.

## துஷ்பிரயோக செயல்களில் ஈடுபட்டனர் மெச்சிக்கோ பாதுகாப்புப் படையினர்

### குற்றம் சாட்டுகிறது மனித உரிமை கண்காணிப்பகம்

மெச்சிக்கோ,நவ.12

மெச்சிக்கோவில் போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கையின்போது அந்த நாட்டு பாதுகாப்புப் படையினர் பரவலான துஷ்பிரயோகங்களை மேற்கொண்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எனினும், இதுதொடர்பில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பான மனித உரிமை கண்காணிப்பகம் கூறியுள்ளது.

படைவீரர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து சிவில் அதிகாரிகள் விசாரணை செய்ய வேண்டுமென மெச்சிக்கோ அரசை மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், மனித உரிமைகளை பாதுகாப்பதனை மேம்படுத்த தமது அரசு கடுமையாக உழைப்பதாக மெச்சிக்கோ ஜனாதிபதி பலிப் கல்டரோன் கூறியுள்ளார்.

மெச்சிக்கோவில் கல்டரோன் ஜனாதிபதியாக 2006 ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் போதைப்பொருள் வன்முறைகளில் 40 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## பணமே வாழ்க்கை அல்ல என்கிறார் பிரபல கோடீஸ்வரர் பில்கேட்ஸ்

மனித வாழ்க்கையில் பணம் தான் எல்லாம் அல்ல எனத் தான் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டுள்ளதாக உலகின் பிரபல கோடீஸ் வரரும், மைக்ரோசொப்ட் முதலீட்டாளருமான பில்கேட்ஸ் தெரிவித்தார்.

வாஷிங்டன் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் தொலைத் தொடர்பு விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி பற்றியும் அவரது பங்கீடு பற்றியும் பேசும்போது இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்:

பாவனையில் உள்ள கணினித் திரை, கண் வில்லையில் போடும் அளவுக்கு சிறிதாக இருக்கும் எனத் தனது தொழில் நுட்ப வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்ட அவர் இவ்வாறு கண் வில்லையளவு குறைவதைக் கண்டு மக்கள் ஆச்சரியப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.



இதேவேளை புதிய கண்டு பிடிப்புக்களால் நோய்க்குரிய காரணிகளைக் கண்டறிந்து சிறந்த சிகிச்சை முறையினை வழங்கலாம் எனவும் தெரிவித்தார். (ந)

## 4 நாள்களாக நீடித்த இழுபறி முடிவு

# கிரீஸ் பிரதமராக லூகாஸ் நியமனம்

எதென்ஸ், நவ.12

கிரீஸ் நாட்டின் புதிய பிரதமராக வங்கியாளர் லூகாஸ் பப்படெமோஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் கடந்த 4 நாள்களாக நீடித்த இழுபறி முடிவுக்கு வந்தது.



ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான கிரீஸ் கடந்த ஓராண்டாகக் கடன் நெருக்கடியில் தத்தளிக்கிறது. அதனால், ஒட்டுமொத்த ஐரோப்பிய யூனியன் பொருளாதார வளர்ச்சி தடைப்படுவதால், கிரீஸை நெருக்கடியில் இருந்து மீட்க முதல் கட்ட நிதியுதவியை ஐரோப்பிய யூனியன் அளித்தது.

2ஆவது கட்டமாக நிதியுதவி அளிக்க அது முன்வந்தது போது ஆனால், அதை ஏற்க மறுத்த முன்னாள் பிரதமர் ஜோர்ஜ் பப்பெண்ட்ரூ, நாடு முழுவதும் இதுகுறித்து மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப் போவதாக அறிவித்தார். இதனால், ஐரோப்பிய யூனியன் நாடுகள் கண்டனம்தெரிவித்தன. அத்துடன் ஆளும் கட்சியிலும் ஜோர்ஜ் மீது அதிருப்தி ஏற்பட்டதனால் அவர் பதவி விலகினார். இதனையடுத்து புதிய பிரத மரைத் தெரிவு செய்ய கடந்த 4 நாள்களாகப் பலமுறை ஆலோசனைக் கூட்டங்கள் நடந்தன. எனினும், ஆளும் கட்சிக்குள் கருத்தொற்றுமை ஏற்படாமல் இழுபறி நீடித்தது.

இந்நிலையில், 64 வயதான லூகாஸ் புதிய பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார். ஐரோப்பிய மத்திய வங்கியின் முன்னாள் துணைத் தலைவரான இவர், சிறந்த வங்கியாளர் என்று பெயர் பெற்றவர். பெப்ரவரியில் தேர்தல் நடத்தப்படும் என்றும் அதுவரை லூகாஸ் இடைக்கால அரசுக்குத் தலைமை வகிப்பார் என்றும் தகவல் வெளியானது. (ந)

# அஜ்மல் கசாபைத் தூக்கிலிடுங்கள் பாகிஸ்தான் அரசு அதிரடி அறிவிப்பு

இஸ்லாமாபாத், நவ.12

மும்பைத் தாக்குதலில் முக்கிய குற்றவாளியான அஜ்மல் கசாப் தீவிரவாதி; அவனை இந்திய அரசு தூக்கில் போட வேண்டும் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் திடீரென கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மாலத் தீவில் இந்தியப் பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மாலிக் பத்திரிகையாளர்களிடம் மேலும் கூறியதாவது:

கசாப் தீவிரவாதிதான். அவர் சொந்த நாடு இல்லாதவர். அவரைத் தூக்கில் போட வேண்டும். மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களின் தொடர்புக்கு நம்பத் தகுந்த ஆதாரங்கள் தேவை. விரைவில் பாகிஸ்தான் நீதி விசாரணைக் குழு இந்தியா செல்ல இருக் கிறது. அங்கு ஆதாரங்கள் கிடைத் தால் பாகிஸ்தானில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை துரிதப்படுத்தப்படும் என்றார்.

தூக்குத் தண்டனையை எதிர்த்து கசாப், உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், கசாபை தூக்கிலிட பாகிஸ் தான் உள்துறை அமைச் சரே கூறியுள்ளது புதிய திருப்பு முனையை ஏற்படுத்தி உள்ளது.

# அடுத்த ஆண்டு சுற்றுலாவுக்கு ஏற்ற சிறந்த 10 நகரங்கள் அறிவிப்பு

உலகளாவிய ரீதியில் 2012 ஆம் ஆண்டு சுற்றுலாவுக்கு ஏற்ற சிறந்த 10 நகரங்களின் சுற்றுலா ஆர்வலர்களால் வெளியிட்டுள்ளன.

அதன்படி சுற்றுலா செல்லக் கூடிய சிறந்த இடங்களில் முதலாவது இடத்தை லண்டன் நகரம் பெற்றிருக்கிறது. அடுத்து ஓமனின் மஸ்கட் நகரம் சிறந்த சுற்றுலாவுக்குரிய இடமாகக் கருதப்படுகிறது.

மேலும் இந்தியாவின் பெங்களூர்,அமெரிக்காவின் கலாசாரத்தைக் கொண்ட நகரம் என வர்ணிக்கப்படும் ஸ்பெயினின் காடிஸ், சுவிடன் ஸ்ரொக் ஹோம், போர்த்துக்கல் கியுமரீஸ்,சிலி சண்டியாகோ, சீனா ஹொங் கொங், அமெரிக்காவின் ஓலாண்டோ, மற்றும் ஆஸ்திரேலியாவின் டார்வின் ஆகிய பத்து இடங்கள் அடங்கிய பெயர்ப் பட்டியல் சுற்றுலா ஆர்வலர்களால் வெளியிடப்பட்டுள்ளது. (ந)

# அரபு லீக் அமைப்பிலிருந்து சிரியாவை நீக்க வலியுறுத்து

அரபு லீக் அமைப்பில் இருந்து சிரியாவை இடைநிறுத்துமாறு அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமை அமைப்பொன்று வலியுறுத்தியுள்ளது.

ஹோம்ஸ் நகரில் மனிதாபினமாத்துக்கு எதிரான குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பொதுமக்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் மற்றும் சட்ட ரீதியற்ற கொலைகள் இடம் பெற்றுள்ளதாகவும் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அதிகளவில் இடம் பெற்றுவரும் ஹோம்ஸ் நகரில் நேற்று முன்தினமும் தினமும் அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வி.க. ஏற்பாட்டில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி:

# கரவெட்டி ஞானம்ஸ், ஐங்கரா இன்றைய இறுதியாட்டத்தில்



கரவெட்டி ஐங்கரா வி.க.



கரவெட்டி ஞானம்ஸ் வி.க.

யாழ்ப்பாணம்,நவ.12

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பகுதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கான 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட 9 பேர் பங்கு பற்றும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

மேற்படி போட்டித் தொடரில் அரை இறுதியாட்டங்களில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம், கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

முதலாவதாக இடம் பெற்ற அரை இறுதியாட்டத்தில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய உதய சூரியன் வியைாட்டுக்கழக அணியினர் 11 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் திருகரன் 13 ஓட்டங்களையும், சுஜீதாஸ் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில்கரவெட்டிஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக சேந்திரன் 3 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சுதர்சன் 3 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் குணதீபன் 2 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கரவெட்டிஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 5.3 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுகந்தன், 28 ஓட்டங்களையும் நிஷாந்தன் ஆட்டம் இழக்காமல் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி சார்பாக நிதர்சன், ஒரு ஓவர் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மற்றைய அரை இறுதியாட்டத்தில் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஐங்கரா விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிமுருகன், விளையாட்டுக் கழக அணியினர் 12 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் றஜீவ்கரன் 56 ஓட்டங்களையும், உமாசுதன் 48 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஐங்கரா விளையாட்டுக் கழக அணி சார்பாக ஜீவன் ஒரு ஓவர் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐங்கரா விளையாட்டுக்கழக அணியினர் 11.3 ஓவர்கள் பந்து வீசி 6 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் ஜீவன் ஒன்பது ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 65 ஓட்டங்களையும், கவி 23 ஓட்டங்களையும் கபிலன் 14 ஓட்டங்களையும், தமது அணி சார்பாகப் பெற்றனர். 9 பந்து வீச்சில் உமாசுதன் 3 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இன்று இடம்பெறும் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (எ-23)

## வெலிக்கடை சிறைக்கைதிகள் உதைபந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.12

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் உதைபந்தாட்ட அணிக்கும், வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த வாரம் பொறளை காம்போர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மேற்படிப் போட்டியில் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சர் சந்திரசிறிகஜதீர அமைச்சர் தினேஸ் குணவர்த்தன பங்கு கொண்டனர். (எ-23)

## மூன்றாம் தவணை பரீட்சையால் உதைபந்தாட்டம் பிற்போடப்பட்டது

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் அடுத்தாண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ளன.

பாடசாலைகளின் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் நடைபெறவுள்ளமையால் இந்த ஆண்டு நடைபெறவுள்ள வலய மட்ட உதைபந்தாட்டப் போட்டியை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை குழப்பும் என்பதை கருத்தில் கொண்டு அடுத்தாண்டு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வயத்துக்கு உட்பட்ட கல்விக் கோட்டங்களில் வெற்றிபெற்ற அனைத்துப் பாடசாலை அணிகளும் கலந்துகொள்வதற்கு ஏற்ற வகையில் இந்தப் போட்டிகள் அடுத்தாண்டுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-86)

### கம்பர்மலை யங்கம்பன்ஸ் உதைபந்தாட்டத்தில்

# நவிண்டில் கலைமதி வி.க இறுதி ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,நவ.12

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கம்பர்மலை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது அரை இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. முதல் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களம் இறங்கினர்.

ஆட்டம் ஆரம்பமான உடனே இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் நுழைந்தனர்.

இதன் பயனாக நவிண்டில் கலைமதி அணி வீரன் ஜெயகாந், 9 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. வதிரி டயமன்ஸ் அணி வீரர்கள் தமது அணிக்கான கோல்களைப் பெற எடுத்த முயற்சிகள் கை கூடாமல் போனது.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் தனது அணிக்கான இரண்டாவது கோலினைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் நுழைந்த வண்ணம் இருந்தனர்.

47 ஆவது நிமிடத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி வீரன் சுபி தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடித்தார்.

முதலாம் பாதி ஆட்டம் இடை வேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமான போது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் இரண்டாவது பாதி ஆட்டத்திலேயாவது தமது அணிக்கான கோலினைப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியினர் தமது அணிக்கு மேலும் கோல்கள் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் களம் புகுந்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியது. இரண்டு அணியினரும் மாறி மாறி எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இரண்டு அணியினரும் பல வியூகங்களை அமைத்து கோல்கள் பெறுவதற்காக முயற்சிகளை மேற்கொண்ட போது அதுவும் கை கூடாததினால் ஆட்ட முடிவில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)

# உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் இளவாலை ஹென்றீஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், நவ.12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி யாட்டத்தில் இள வாலை கென்றிஸ் கல்லூரி சம்பியன் ஆனது.

நேற்று நண்பகல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை ஹென்றீஸ் கல்லூரி அணியினர் 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி ஈட்டியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலய அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி வித்தியாலய அணி மோதிக் கொண்டன.

இதில் மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

(எ- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரண அடி வாங்கியது ஆஸி. மண்டியிட்டது ஆபிரிக்காவிடம்



தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுடனான தனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் படு தோல்வியடைந்தது.

20 பந்து பரிமாற்ற கிரிக்கெட் ஆட்டத்தைப் போல இரண்டு அணிகள் தரப்பிலும் மளமளவென இலக்குகளை இழந்த இந்த ஆட்டத்தில் அனைத்து இன்னிங்ஸ்களும், 3 ஆவது நாளிலேயே முடிந்ததோடு ஆட்டமும் முடிவுக்கு வந்துள்ளது. ஒரே நாளில் 23 இலக்குகள் வீழ்ந்து சரித்திர ஆட்டமாக அமைந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 8 இலக்குகளை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இரண்டாம் நாள் ஆரம்பித்து சிறிது நேரத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 284 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் கிளார்க் 151, ஷோன் மார்ஷ் 44, ஜோன்சன், சிடில் தலா 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். ஏனைய வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் வெளியேறியிருந்தனர். பந்து வீச்சில் ஆபிரிக்க அணி சார்பில் ஸ்ரெய்ன் 4, பிலண்டர், மோர்கல் தலா 3 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு அன்றைய தினம் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆபிரிக்க அணி ஆஸியின் வேகத்தில் நிலைகுலைந்து 96 ஓட்டங்களுக்குள் சுருண்டு கொண்டது. ஆபிரிக்காவின் சார்பில் அணித்தலைவர் ஸ்மித் 37, ஜக்குஸ் றூடோல்ப் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். ஏனைய 9 வீரர்களும் ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழந்தனர்.

188 ஓட்டங்களுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி சற்றும் எதிர்பார்க்காத வகையில் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் முடங்கியது. அந்த அணி 21 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்து டெஸ்ட் வரலாற்றில் மிகக் குறைந்த எண்ணிக்கைக்குள் மடியும் நிலையில் இருந்த போதும் 10 ஆவது இலக்குக்காக சிடில், லயோன் இணைந்து அணியின் மானத்தை காத்தனர். இறுதியில் 47 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து ஆபிரிக்க மண்ணில் ஆஸி அணி மண்டியிட்டது. சிடில் 12, லயோன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை தவிர ஏனையோர் ஒற்றை ஓட்டங்களுடன் வெளியேறினர். பந்து வீச்சில் அறிமுக ஆட்டத்தில் விளையாடிய பிலண்டர் 5, மோர்கல் 3, ஸ்ரெய்ன் 2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு 236 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு ஆபிரிக்க அணி துடுப்பெடுத்தாடியது. நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 9 இலக்குகளை கைவசம் கொண்டு வெற்றிக்கு 155 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் தென்னாபிரிக்கா அணி இருந்தது.

இந்த நிலையில் நேற்றைய 3 ஆம் நாள் ஆட்டத்தை தொடங்கிய தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித் மற்றும் அம்லா ஆகிய இருவரும் மேற்கொண்டு இலக்குகளை இழக்காத வண்ணம் மிக நிதானமாக ஓட்டங்களை சேர்த்தனர்.

எனவே ஓட்ட எண்ணிக்கை மெல்ல மெல்ல உயர்ந்தது. வெற்றி வரை சென்றுவிடலாம் என்று நினைத்த இந்த இணையை உணவு இடைவேளைக்கு முன்பாகவே பிரித்தார் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர் ஜோன்சன்.

வெற்றிக்கு 14 ஓட்டங்கள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் 112 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹசிம் அம்லா ஆட்டமிழந்தார். ஆனால் மேற்கொண்டு இலக்குகள் விழாத வண்ணம் கவனத்தோடு விளையாடிய ஸ்மித் மெல்ல மெல்ல தன்னுடைய 24 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

அதன் பின்னர் 51 ஆவது பந்து பரிமாற்றத்தில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 8 இலக்குகள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றியீட்டியது. ஸ்மித் இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்திலிருந்து 101 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்ட நாயகன் விருது தனது அறிமுக ஆட்டத்திலேயே முதல் இன்னிங்ஸில் 3 இலக்குகள் மற்றும் இரண்டாம் இன்னிங்ஸில் 5 இலக்குகள் என்று 8 இலக்குகளை வீழ்த்திய தென்னாபிரிக்க அணியின் பிலண்டருக்கு வழங்கப்பட்டது.

சுவாரசியம்

புதன் கிழமை முடிவுற்ற இந்திய, மேற்கிந்தியத்தீவுகளுக்கு இடையிலான ஆட்டமும், ஆஸ்திரேலிய தென்னாபிரிக்காவுக்கு இடையிலான ஆட்டத்திலும் கிட்டதட்ட சில விடயங்கள் ஒன்றாகவே உள்ளன.

★ தன்னுடைய சொந்த மண்ணில் இந்தியா மற்றும் தென்னாபிரிக்க ஆகிய இரண்டு அணிகளுமே தனது முதலாவது இன்னிங்ஸில் குறைந்த ஓட்டங்களையே பெற்றது.

★ ஆனால் எதிரணியின் இரண்டாவது இன்னிங்ஸை முதல் இன்னிங்ஸை விட குறைவான ஓட்டங்களில் ஆட்டமிழக்க செய்தது.

★ இரண்டு ஆட்டங்களிலுமே பந்து வீச்சாளர்களின் ஆதிக்கமே இருந்தது.

★ இரண்டு ஆட்டங்களிலுமே உள்ளூர் அணியே வெற்றி பெற்றது.

★ ஆட்ட நாயகன் விருது பந்து வீச்சாளருக்கே வழங்கப்பட்டது.

★ இரண்டு பந்து வீச்சாளருமே (அஸ்வின் மற்றும் பிலண்டர்) அந்தந்த ஆட்டங்களில்தான் அறிமுகமானார்கள்.

★ இரண்டு ஆட்டங்களுமே 5 ஆவது நாள் வரை விளையாடப்படவில்லை என்பது போன்ற சில ஒற்றுமைகளை சொல்லலாம்.

இருப்பினும் இந்த ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் 4 இன்னிங்ஸ்கள் விளையாடப்பட்டது துடுப்பாட்ட ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (15)

# வென்றது பாகிஸ்தான்

**இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி இலகுவாக வெற்றி பெற்றது.**

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான முதலாவது ஒரு நாள் ஆட்டம் டுபாயில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

முதலில் ஆடிய இலங்கை அணி பாகிஸ்தானின் சுழற்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 131 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கையின் இலக்குகளை பாகிஸ்தான் அணி இலகுவாக சீராக வீழ்த்தியது.

இலங்கை அணியின் சார்பில் டினேஸ் சந்திமால் 28, தரங்க 25, ஜெயவர்தன 24, மலிங்க 11, மத்தியூஸ் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். ஏனையோர் ஒற்றை இலக்கங்களுடன் வெளியேற இலங்கை அணி இறுதியில் 40.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் அப்ரிடி 27 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அஜ்மல், ஹபீஸ் தலா 2 இலக்குகளையும் சரித்தனர்.

பதிலுக்கு 132 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 21.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. யுனிஸ்கான் 56 ஓட்டங்களை ஆட்டமிழக் காமலும், இம்ரான் பகாட் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத் தனர்.

பாகிஸ்தான் அணி முதலாவது இலக்கினை வேகமாக இழந்தாலும் அடுத்து இணைந்த பகாட், யுனிஸ் ஜோடி இழப்பை சரிக்கட்டி வெற்றியை நோக்கி பயணித்தது. இலங்கை அணியின் மோசமான பந்து வீச்சுக் காரணமாக இலகுவாக ஓட்டங்களைக் குவித்த பாகிஸ்தான் அணி 21.5 பந்து பரிமாற்றங்களில் வெற்றியிலக்கை அடைந்தது. உதிரிகளாக 17 ஓட்டங்கள் இலங்கை அணியினால் வாரி வழங்கப்பட்டு இருந்தது. பந்து வீச்சில் லக்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினார். மலிங்க, பெர்னாண்டோ தாராளமாக ஓட்டங்களை வாரி வழங்கினர்.



ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணியின் சயிட் அப்ரிடி தெரிவு செய்யப்பட்டார். 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது. (15)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனேக உபஆய்வுகளும் நடத்தப்பட்டுள்ளன. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் அமைதி முயற்சிக்கான தோல்விக்கு முற்றுமுழுதாக நோர்வேயைப் பொறுப்புக்கூற முடியாது. போரை விரும்பிய இரு தரப்பினருமே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

அதேவேளை, உள்ளகப் பேச்சுக்களின் வாயிலாக பல நற்பலன்கள் கிட்டின. இதற்கு நோர்வேயின் பெரும் பங்களிப்பே காரணமாக இருந்துள்ளது. இத்தகைய நற்பலன்களின் போர் நிறுத்த உடன்படிக்கையும் ஒன்று. ஒஸ்லோ மாநாட்டில் சமஷ்டித் தீர்வை அடைவதற்கும் ஆழிப் பேரலை அழிவுக்குப் பின்னரான கூட்டு நிர்வாகப் பொறிமுறைக்கும் இரு தரப்பும் இணங்கியிருந்தன.

அப்போதைய கள நிலைவரத்தின் அடிப்படையில் போர் நிறுத்த ஒப்பந்தம் சாதகமான பயனையே தந்திருந்தது. ஆனால் அனைத்தும் அற்ப ஆயுளுடன் முடிந்துவிட்டன.

போர் மூலம் பிரச்சினைக்கு முடிவு கட்டும் இலங்கை அரசின் முயற்சியின் மூலம் நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்கள் முட்டுக்கடைக்கு இலக்காகின. உண்மையில் இரு தரப்பினருக்கும் இடையில் அடிப்படை மாற்றங்களை முடுக்கி விடுவதில் நோர்வே தோல்வி கண்டது.

வேதனைக்குரிய தடங்கல்கள் போர் நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதற்கும் பேச்சுக்களுக்கும் குந்தகமாக அமைந்தன. இதையடுத்து "போரின்றி சமாதானமில்லை" என்ற நிலைப்பாடு உருக் கொண்டது. போரின் உக்கிரமும் பகைமை உணர்வும் 2009 மே மாதத்தில் விடுதலைப் புலிகளின் தோல்வியோடு முடிவுக்கு வந்தது.

**இந்தியாவின் பங்குப் பணி**

இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கு இந்தியா வெளிப்படையாக ஆதரவு வழங்குவதாகக் காட்டி வந்தாலும், புலிகளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கும்படி நோர்வேயை சத்தமின்றி மிரட்டி வந்தது.

2004இல் காங்கிரஸ் அரசு ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழர்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்து வந்தது. ஆனால், போர் தொடுப்பது என்ற மஹிந்த அரசின் தெரிவு மீது அது எந்தவித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை.

தனிப்பட்ட கலந்துரையாடல்களின் போது, நோர்வே அரசு அளவுக்கதிகமாகப் புலிகள் சார்ந்து செயற்படுவதாக இந்தியா விசனப்பட்டது. புலிகளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்குமாறு அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியது.

இலங்கைக்கு 'ராடர்'களையும் புலனாய்வுத் தகவல்களையும் இந்தியா வழங்கியது. தாக்குதல் ஆயுதங்களை வழங்குவதில்லை என்ற தனது நிலைப்பாட்டை புதுடில்லி தொடர்ந்தாலும் இலங்கை அரசு அத்தகைய ஆயுதங்களை வேறு எங்கும் வாங்குவதை எதிர்க்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிர் என்ற இந்திய அரசின் நிலைப்பாடு, இலங்கை அரசை புதுடில்லி ஆதரிக்கிறது என்று பொருள் கொள்வதற்கு உந்துதலானது.

**புலிகளின் இறுதி நாள்கள்**

போராளிகளைச் சுற்றிவளைத்த இராணுவத்தின் பிடி இறுக இறுக, புலிகளைச் சரணடையச் செய்வதில் கொழும்புக்கு படிப்படியாக ஆர்வம் குறைந்து கொண்டே வந்தது. போரின் முடிவில் புலிகள் இயக்கம் தப்பிப் பிழைப்பதில் இந்தியா ஆர்வம் காட்டியதா என்பதும் கேள்விக்குரியதே.

இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்த போது தாக்குதலை நிறுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்பதும் தெளிவாகியது.

புலிகளின் தோல்வியும் இந்தியாவில் நடந்த பொதுத்தேர்தலும் ஒரேவேளையில் வந்தமை குறித்து இலங்கை அரசு கவலை கொண்டிருந்தது. காங்கிரஸ் கட்சி தூக்கியெறியப்பட்டு வேறு யாரும் பதவிக்கு வந்தால் புலிகளுக்கு உதவி கிடைக்கலாம் என்று அது குறிப்பிட்டது.

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு, முன்வரைவு அறிக்கையை ஏற்று ஆயுதங்களை கீழே போட உடன் இணங்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார். (எப்படித் தொடர்பு கொண்டார் என்று அறிக்கை கூறவில்லை) ஆனால் இந்த நகர்வு புலிகள் ஆதரவு அரசியல்வாதியான வைகோவுக்கு கசிந்ததும், இது காங்கிரஸின் தந்திரம் என்று கூறி அதனை நிராகரிக்குமாறும், தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்துப் புலிகளை மீட்கும் என்றும் கூறினார்.

ஆனால் அது நடக்கவில்லை. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தார். காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைப் பிடித்திருந்தது – என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**i-Spoken English** (3 M)
நீங்கள் ஏற்கனவே நன்கு அறிந்த கே.யு வின் சிறப்பு பயிற்சி நெறி. தனிப்பட்ட விசேட நவீன கல்வி முறையில்.... IELTS
**Knowledge Universe** No 75, Temple Road, Jaffna.
Professional Education by Graduate Professionals www.kugroup.info
K.U-Education -"Practical and Result Oriented." Tel:0776458253

## 45 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



### நல்லைநாதன் தனுசன்

(யாழ். இந்துக் கல்லூரி
மாணவன், தரம் 9 E)

தனுசனின் ஆத்மா சாந்தி பெற
எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(10292)(4-6-7)

## மரண அறிவித்தல்

### தியாகராஜா செல்வரூபன்



தூதாவளை, கரணவாய், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்லண்டனில்வசித்தவருமாகிய தியாகராஜா செல்வரூபன் 09.11.2011 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா-சந்தணம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், அற்புதமலர், இராசமாணிக்கம் (நிர்வாக அலுவலர் -பிரதேச செயலகம், கரவெட்டி), மகாலிங்கம் (கனடா), இரத்தினசிங்கம் (ஆஸ்திரேலியா), புஸ்பமலர் (லண்டன்), செல்வமலர், ஜெலினா (ஆசிரியை-கரணவாய் தாமோதர வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும், நடராஜா (சுவிஸ்), நளாயினி (கனடா), பத்மநாதன் (லண்டன்), ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், நாகலிங்கம் (லிங்கம்ஸ்), சிவபாதசுந்தரம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மருமகனும், ஏகாம்பரம், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் அழகம்மா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வெல்லன்கிராய் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தூதாவளை, கரணவாய்,
கரவெட்டி.

(10246)(6-5)

தகவல்:
சி.நாகலிங்கம்

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
12.01.1942

விண்ணில்:
25.10.2010

திதி: 12.11.2011

### அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம் (பேபி)

குடும்பத்தின் ஒளி விளக்காய்த்
திகழ்ந்து அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் எம்மையெல்லாம்
வழி நடத்தி இவ் வையகத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட எங்கள்
குடும்ப விளக்கின் பாதக் கமலங்களில்
இம்மலரினை ஓராண்டு நினைவாக
நினைவு கூருகின்றோம்.

சின்னாலங்கண்டு வீதி,
அரியாலை மத்தி, அரியாலை.

(10296)(1.22)

குடும்பத்தினர்

## யாழ்.நகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு சுமார் 9 மணிக்குப் பின்னர் யாழ். கந்தர்மடம் வந்துள்ளார். அங்குள்ள அவரது வீட்டின் மேல்மாடியில் தயாபரன் இடையிடையே தங்குவது வழமை. கீழ் மாடியிலுள்ள அறைகளில் 4 சிங்கள மாணவர்களும் மற்றொரு அறையில் தமிழ் மாணவன் ஒருவரும் தங்கியுள்ளனர்.

அன்றையதினம் இரவு யாழ். நாகவிகாரையில் நடைபெற்ற 'பெரஹர'வுக்கு சிங்கள மாணவர்கள் சென்று விட்டனர் என்று கூறப்பட்டது. தமிழ் மாணவர் அங்கு அறையைப் பூட்டிவிட்டு படித்துக்கொண்டிருந்தார் என்று விசாரணைகளின் போது கூறப்பட்டுள்ளது.

தயாபரன் எங்கு சென்றாலும் மீசாலையில் உள்ள தமது மனைவிக்கு தொலைபேசி மூலம் அறிவிப்பது வழமை. ஆனால் சம்பவதினம் மாலை 6 மணிக்குப்பின் இவரின் அழைப்பு மனைவிக்குக் கிடைக்கவில்லை. அதை அறிந்து தயாபரனின் மனைவி மீசாலையிலுள்ள சகோதரனிடம் கணவர் தொலைபேசி எடுக்காதது குறித்துக் கூறியுள்ளார். அவர் இதுவரையில் தொலைபேசியில் கதைக்கவில்லை. அவருடன் தொடர்புகொண்ட போதும் அவர் தொலைபேசியை எடுக்கிறார் இல்லை என்று பதற்றத்துடன் கூறியுள்ளார்.

உடனடியாக தயாபரனின் மைத்துனரும் உறவினர்களும் கந்தர்மடம் வந்துள்ளனர். அவ்வேளை வீட்டின் 'கேற்' கதவு எவையும் பூட்டப்பட்டிருக்கவில்லை. மேல் மாடியில் மின் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. வந்தவர்கள் மேல் மாடிக்குச் சென்றனர். அங்கே தயாபரன் கோரமாகக் கொலையுண்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் - உடை ஏதுமின்றி சடலம் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். இறந்தவரின் நெஞ்சுப் பகுதியில் அலுமாரியில் இருந்த உடுப்புகள் கொட்டப்பட்டிருந்தன. அறையின் சுவரிலும் இரத்தக் கறைகள் காணப்பட்டன. பதறிப்போன மைத்துனரும் உறவினர்களும் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

நேற்று காலை சடலத்தைப் பார்வையிட்ட யாழ். மாவட்டநீதிவான் அ.பிரேம்சங்கர் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மரண விசாரணை அறிக்கையில்; கொலையாளிகள் சிறிய கத்தியைப் பாவித்து உடல் முழுவதும் குத்தியுள்ளனர். கத்திக்குத்து ஆழமாக பதியாது விடினும் கூடிய இரத்தப் பெருக்குக் காரணமாக மரணம் சம்பவித்திருக்கிறது. கொலை செய்யப்பட்டவர் சுமார் அரை மணி நேரமாக கொலையாளிகளுடன் போராடியிருக்கலாம். கொலையைக் கூட்டமாக வந்தவர்களே செய்திருக்கும் சாத்தியம் காணப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் நேற்று [illegible]

(ஒ-319-10-15)

## 90 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



திருமதி
### கிட்டிணன் நாகி

12.11.2011

திருமதி கிட்டிணன் நாகி (தங்கம்) தனது 90 ஆவது பிறந்ததினத்தை இன்று (12.11.2011) கொத்தியகாடு, கெருடாவில் தெற்கு, தொண்டமானாறில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

கணவர் - க.கிட்டிணன்.

**மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்**
**Dr. K.சுரேஸ்குமார், மகப்பேற்று நிபுணர்**

Dr. K.சுரேஸ்குமார், மகப்பேற்று நிபுணர் அவர்கள் பிரதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு வருகை தந்து க்ர்ப்பிணிப் பெண்களுக்கு கிளினிக் நடத்துவார் என்பதை அறியத்தருகின்றேன்.

தொலைபேசி:
0212241569

வைத்திய மேலதிகாரி,
Medical Superintendent

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 1989.11.28
இறப்பு: 2011.09.29



அமரர்
### நவரட்ணம் அனோஜன் (அப்பன்)

45 நாள்கள் சென்றதடா நீ பிரிந்து
எம் கண்ணீர் ஆறாய் ஓடுதடா
மீண்டும் வந்து ஆறுதல் தருவியோ
உன் நினைவால் நாம் வாடுகின்றோம்
என்றும் உன் நினைவுடன்

சு.பாஸ்கரன் குடும்பம்,
சக ஊழியர்களும்.

கைதடி நுணாவில், சாவகச்சேரி

(10333)(1,6,7)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
20.08.1975
ஆண்டவன் அடியில்:
30.09.2011

அமரர்
### நடேசு சந்திரகுமார்
(கண்ணன் திருப்புலம்)

கடந்த 30.09.2011 அன்று சிவபதமடைந்த எமது மருமகனின் 45 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை நாளை (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கீரிமலையில் நடைபெற்று மதியபோசனம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

காளிகோயிலடி,
உடுவில்.

(10295)(1,6,22)

ஆ.தணிகாசலம் (குமார்)
குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ பிரபாகரேஸ்வரக் குருக்கள் அறக்கொடை நிதியம் அந்தண மாணவர்களுக்கான வகுப்புக்கள்

சிவஸ்ரீ பிரபாகரேஸ்வரக் குருக்கள் அறக்கொடை நிதியத்தின் ஏற்பாட்டில் அந்தண மாணவர்களுக்கான சாஸ்கிருத அடிப்படை எழுத்துப் பயிற்சி புதிய வகுப்புகள் இன்று (12.11.2011) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகின்றன. அனைத்து அந்தண மாணவர்களையும் புதிய பிரிவில் இணைந்து பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தியடி,
யாழ்ப்பாணம். **செயலாளர்.**

## மரண அறிவித்தல்



### கந்தசாமி அகிலகுமார்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அகிலகுமார் 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

மில்லேன், ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



*தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்ட நெறியின் யாழ்.மத்திய கல்லூரி நிலைய இணைப்பாளர்*

### சி.தயாபரன்

*அவர்களின் அகால மரணச்செய்தியால் ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதா பங்களைத் தெரிவிப்பதுடன். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.*

கல்விமாணி பிராந்திய நிலையம்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

பீடாதிபதி, இணைப்பாளர்கள்,
விரிவுரையாளர்கள், ஆசிரிய,
மாணவர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 1948.08.24 உதிர்வு 2011.10.13

*திருமதி*
### *பஞ்சாட்சரம் இராசலட்சுமி*

திதி: துதியை

*13.10.2011 ஆம் திகதியன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமக்கு பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று [12.11.2011] சனிக்கிழமை காலை இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்தில் [தீர்த்த மடம்] இடம்பெறும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மதியம் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

இன்பர்சிட்டி, பருத்தித்துறை. **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### *சிவசுப்பிரமணியம் தயாபரன்*

(அதிபர், வரணி, கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை, யாழ்.
பிராந்திய இணைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் தயாபரன் 10.11.2011 வியாழக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் சுபாதினி (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்- பூமலர் தம்பதியரின் அன்பு மகனும், இராசையா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாநிதியின் (கனடா) பாசமிகு சகோதரனும், ஸ்ரீநாகேஸ்வரா (கனடா), சச்சிதானந்தன் (ஜேர்மனி), கருணாகரன் (ஜேர்மனி), றோகினி, நித்தியானந்தன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அருளானந்தம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், குமாரிலதா (ஜேர்மனி), நந்தினி (ஜேர்மனி), சிவராசா, நந்தரூபி (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), கிருபாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாபரன் சுபாதினி
(மனைவி)

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (சி/5734)

**மீனவ...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஆத்திரமூட்டும் சம்பவங்களுக்கும், அசம்பாவிதங்களுக்கும் தீர்வு காண்பதற்காகவே இக்கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அரசு - தமிழ்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

போது கலந்துரையாடப்படவுள்ளது என அவர் கூறினார். அடுத்த சுற்றுப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சமீபத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் அமெரிக்கா, கனடா, லண்டன் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று இனப்பிரச்சினை மற்றும் தமிழர்கள் எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகள் குறித்துக் கலந்துரையாடினர். இந்த நிலையில் நாடுதிரும்பியுள்ள தமிழ்க் கூட்டமைப்பினருக்கும் அரச தரப்புக்கும் இடையிலான அடுத்தச் சுற்றுப் பேச்சு முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படுகிறது.

## வீடு விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில் ¾ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778282783, 0775078421.

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் இராமகிருஸ்ண பாடசாலைக்கு முன்பாக 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0779120842.

## விற்பனைக்கு

கோழி முட்டைகளை அடைவைத்து குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Incubator)விற்பனைக்கு உண்டு.

கொள்வனவு செய்யப்படும்
பழப்பாக்கு பெரியது 2.50/=
பழப்பாக்கு சிறிது 2.00/=

தொடர்புக்கு:
A.தங்கராசா அன் சன்ஸ்,
60,ஜும்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்,0778995431,0750434277.

## CAR FOR SALE

300-xxxx Ford Laser(Japan)for sale 1998 Model Petrol,Mannal, Power stearing,full A/C ,12 CD Loader Alloy Wheel, high beat Mutler Color Silver.
**Contact:0772920304.**

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கில்
கற்பகப்பிள்ளையார் வீதியில் வீட்டுடன் 6 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
(சி/5979) (3,6,7) தொடர்பு : 0112439591

## தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியைச்சேர்ந்த கதிரேசு சசிகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (780423528V) கைச்சங்கிலி, ஒரு தொகைப் பணம், சாரதி அனுமதிப்பத்திரம், ATM காட் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 9.11.2011 அன்று யாழ்ப்பாணத்துக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(10327) (6-7-3) T.P : 0774188071

## சிறிய கடை வாடகைக்கு

இல.334, பொன்னம்பலம் வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தியில் பழைய வெலிங்டன் திரையரங்கு முன்பாக சிறிய கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி
இலக்கம்- 0212227893

## கடைகள் விற்பனைக்கு

"ஸ்ரான்லி வீதியில்" இலக்கம் 303இல் அமைந்துள்ள இரண்டு கடைகள் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
உடன் தொடர்புக்கு-
0777778125, 0777849251

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் சர்வதேச நிறுவனமான Thailand Marketting Company முகாமைத்துவப் பயிற்சியாளர்கள் தேவை. O/L, A/L சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவம் அவசியமற்றது. தங்குமிட வசதி இலவசம். 6 மாத காலப் பயிற்சி. பயிற்சியின்போது 12000/ 15000/ [illegible]
தொடர்புகளுக்கு
0771363797, 0776219536, 0772151914

இந்த அமைப்பின் செயற்குழுக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற இருந்தது. எனினும், இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது. இத்தகைய கூட்டங்களில் தமிழகப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கவேண்டு என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த இந்திய செயலர் மாத்தாய் தெரிவித்ததாவது:-

இந்தக் கூட்டங்களில் மீனவர்கள் நேரடியாகப் பங்கெடுக்கவில்லை. அரசசார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்தோர் பங்கேற்றுள்ளனர். மீனவர்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் ஒரு சிலரும் சமுகமளித்திருக்கிறார்கள். இவ்வாறு கலந்து கொண்டவர்களும் மீனவர்களின் பிரச்சினைகளை முற்றுமுழுதாக எடுத்துரைக்கவில்லை. நான் அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன் அங்கு அரச அதிபரைச் சந்தித்தேன். இவ்வேளை, இந்திய மீனவர்களின் ஊடுருவல்களால் இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும், பாதிப்புகளையும் அவர் விளக்கினார். இது தொடர்பான புள்ளி விவர அட்டையையும் காட்டினார் - என்றார். (சி)

**போரை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி

ஆம் ஆண்டில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த உதவியதன் மூலம் நாம் பல உயிர்கள் பலியாவதைத் தடுத்தோம். இந்த அமைதி முயற்சிகளிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் எதிர்காலத்தில் இவை தொடர்பாக நாம் மேற்கொள்ளும் வேறு முயற்சிகளுக்கு உதவியாக இருக்குமென்று நம்புகிறேன். இலங்கையில் அமைதியை தவறவிட்டதற்கான பொறுப்பை சம்பந்தப்பட்ட பிரச்சினையுடன் தொடர்புபட்ட தரப்புகளே ஏற்றுக்கொள்ளவேண்டும். போர் நிறுத்த ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட நன்மைகளையும் அவர்கள் மறந்துவிடக்கூடாது. - இவ்வாறு சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

## பசுக்கன்றை காணவில்லை

மஞ்சள் கயிறுகொம்பிலும் நீலக்கயிறு கழுத்திலும் கட்டிய சிவப்பு நிற 2 வயது நிரம்பிய பசுக்கன்று 07.11.2011 திங்கட்கிழமையில் இருந்து காணவில்லை.கண்டவர்கள் அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: V.குமார்,
பலாலி வீதி,6ஆம் ஒழுங்கை,
ஆலடிச் சந்தி,கந்தர்மடம்.
T.P- 0777145276

## பகிரங்கக் கேள்வி- 2011

யா/ சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரின் பாவிக்க முடியாத நிலையில் உள்ள 120'×25' நீள அகலம் கொண்ட நில மட்டத்துக்கு மேல் வகுப்பறைக் கட்டடத்தை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது.

12.11.2011ஆம் திகதியில் இருந்து ஒரு கிழமைக்குள் நேரில் பார்வையிட்டு ரூபா 100 செலுத்தி கேள்விப் பத்திரத்தை வலிகாமம் வலயக்கல்வி அலுவல்கக் கட்டடப் பகுதியில் பெற்று சமர்ப்பிக்கலாம். 18.11.2011ஆம் திகதி மு.ப 10.30க்கு கேள்வி திறக்கப்படும். சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.

## கண்ணீர் அஞ்சலி



### ஆறுமுகம் திருச்செல்வம்

(மின்பாவனையாளர் சேவைப் பிரிவு, சுன்னாகம்)

*எமது சங்க உறுப்பினரும், அச்சுவேலியில் வசித்தவருமான ஆறுமுகம் திருச்செல்வம் 10.11.2011 வியாழக்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலங்கை மின்சார சபை,
வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம். (சி/5732)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அமரர் **நல்லலிங்கம் ஜெயராமலிங்கம்**
[வருமானப் பரிசோதகர் R.I நகரசபை -வவுனியா]

**தோற்றம்: 01.07.1950**

**மறைவு: 14.10.2011**

*கடந்த (14-10-2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (நகரசபை விடுதி வவுனியா) நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*சுகயீனத்தின் போதும் இறுதிக்கிரியையின் போதும் சுக துக்கத் தொடர்புகளை மேற்கொண்டவர்களுக்கும் நேரடியாக உதவி செய்தவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**0779485364,**
**0778378608**

**குடும்பத்தினர்,**
நகரசபை விடுதி, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) is an active participant in the global effort to reduce the effects of landmines. The main principal of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. DDG has been in operation in Sri Lanka since 2003.

Presently our work force consists of 450 personnel and is mainly built on national capacity supported by expatriate Programme Manager, Operations Manager and Technical Advisors. DDG presently operates in Jaffna, Vavuniya and Killinochchi districts.

## Geographical Information Systems Officer (Jaffna)

**The Role**

As a GIS Officer, you should be fully responsible for Acquisition of GIS data for clearance and survey activities. Responsible for training of Survey teams. Assist in the maintenance of the IMSMA database. Assist Stand in for the Senior GIS Officer during absence

**The Individual**

- He should be a Sri Lankan National
- Graduated in Geography / planning / a degree or diploma having GIS as subject
- Must have at least 2 years' experience in similar position
- Be fluent in English, Sinhala and Tamil
- Be computer literate
- Should be a team player

**How to Apply**

Applicants for the above position should submit a cover letter to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details of two non-related referees to the following address by 21st November 2011.

We thank all applicants, but only candidates who meet all the above criteria will be notified.

HR Division,
**DANISH DEMINING GROUP**
456 Main Street, Chundikuli, Jaffna.
E-mail: adminjaffna@ddg.lk

(10284)(1,6,7)


# சர்வதேசத்தின் நிலைப்பாடு என்ன? சுரேஷ் கருத்து

இரு தசாப்தகாலப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியானதும், நியாயமானதுமான தீர்வொன்று கிடைக்க வேண்டுமென்பதில் சர்வதேச சமூகம் அக்கறையுடனும், உறுதியுடனும் இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சர்வதேச நாடுகளுக்கான பயணம் குறித்து அவர் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில் அமெரிக்காவின் அழைப்பின் பேரில் சென்ற நாம் அங்கு ராஜாங்கத் திணைக்களம் மற்றும் வெள்ளைமாளிகை அதிகாரிகளுடன் பேச்சுநடத்தினோம். அதேபோல், ஐ.நா. சபையின் முக்கிய அதிகாரிகளையும் கனடாவில் உள்ள அரசியற் பிரமுகர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினோம். பிரிட்டனில் வெளிவிவகாரச் செயலர் மற்றும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களைச் சந்தித்தோம். இந்தச் சந்திப்புகளின்போது நாம் எமது முக்கியமான பிரச்சினைகளை முன்வைத்தோம். போரினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களின் நிலைமை, தமிழ் மக்களுக்கு நீதியானதும், நியாயமானதுமான தீர்வு, அவர்களின் உரிமைகளுக்கான உறுதிப்பாடு, காணாமற் போனவர்களுக்கான நீதி என்பனஉட்பட்ட பலவிடயங்களை நாம் சுட்டிக்காட்டினோம்.- என்றார் சுரேஷ் எம்.பி.

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள
உத்தியோகத்தர் ஆகிய
**கந்தசாமி பரமசிவம்**
காலமானதையிட்டு அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நீர்ப்பாசன பொறியியலாளர்,
சக உத்தியோகத்தர்கள்,
நீர்ப்பாசன திணைக்களம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி லலிதாம்பாள் யோகேஸ்வரசர்மா



கொக்குவில் கிழக்கு சோதிட பரிபாலன மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரசர்மா லலிதாம்பாள் நேற்று மு.ப. (11.11.2011) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற யோகேஸ்வரசர்மாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதிஐயர்- இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயர் - பர்வதவர்த்தனி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வெங்கடேச ஐயர் (வாக்கியபஞ்சாங்க கணிதர்), காலஞ்சென்ற கதிரேசஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜராஜேஸ்வரி, கனகாம்பிகை, விஸ்வநாதசர்மா, காலஞ்சென்ற தியாகராஜஐயர் மற்றும் சரஸ்வதியம்மா ஆகியோரின் மைத்துனியும், இரகுநாதஐயர் (வாக்கிய பஞ்சாங்க கணிதர்), ரூபஜெனனி, ரூபவதனி, இரத்னரூபசர்மா, இரட்ணபிரபாகரசர்மா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.11.2011) வெள்ளிக்கிழமை சோதிட பரிபாலன மடத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோதிட பரிபாலன மடம்,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

*தகவல்:*
இ.வெங்கடேசஐயரும் (வாக்கிய பஞ்சாங்க கணிதர்), குடும்பத்தினரும்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி பரமசிவம்



(நீர்ப்பாசன திணைக்களம் யாழ்ப்பாணம்)

காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை, மாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரமசிவம் நேற்று (11.11.2011) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சொர்ணலக்சுமி தம்பதியரின் மருமகனும், சுகிர்தலாதேவியின் கணவரும், கமலேஸ்வரியின் சகோதரரும், சேகர் (லண்டன்), சண்முகராஜா ஆகியோரின் மைத்துனரும், யசோதாவின் (பல்கலைக்கழகம், மொறட்டுவ) மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*[illegible]*
*கோயிலடி, [illegible] ரோட், மாவடி,*
*வட்டுக்கோட்டை.*

*தகவல்:*
ப.சுகிர்தலாதேவி (மனைவி)

### பரமானந்தர் வேலாயுதபிள்ளை



கரம்பைக் குறிஞ்சி, வரணியை பிறப்பிடமாகவும், துன்னாலை வடக்கு, கரவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பரமானந்தர் வேலாயுதபிள்ளை நேற்று(11.11.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சண்முகநாதன், முருகேசபிள்ளை (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), காலஞ்சென்ற வள்ளியம்மைப்பிள்ளை மற்றும் கமலாதேவி, காலஞ்சென்ற இந்திராணி, சிவயோகநாதன், (ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்), விசயகுமாரி (பரிசாரகர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), காலஞ்சென்ற இரர்மநாதன் ஆகியோரது அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2011) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் துன்னாலை வடக்கில் வசிக்கும் அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியாங்காடு இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

பருத்தித்துறை – நெல்லியடி நாவலர் மடம் ஊடாக மணற்பாதி சென்றவரின் பெறுமதிமிக்க தாலிக்கொடி 9.11.2011 புதன்கிழமை மாலை தவறி விழுந்துவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் பெண்பிள்ளையின் வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு அதனை தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: ராஜேந்திரம் ராஜேஸ்வரி
3ஆம் குறுக்குத் தெரு, பன்னையம்பதி,
பருத்தித்துறை.
P.NO- 0772395738, 0779225736

## அவசர கலந்துரையாடல்

வேலையற்ற பட்டதாரி மாணவர்களுக்கான அவசரமானதும் அவசியமானதுமான கலந்துரையாடல் ஒன்று பெருமாள் கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது. அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

காலம்: ஞாயிற்றுக்கிழமை
(13.11.2011)
நேரம்:- மு.ப.-10.30

**வேலையற்ற பட்டதாரிகள்.**


**அழகு தொடக்கம் ஆரோக்கியம் வரைக்கும்...**
**நிழல் அல்ல, நிஜம்!!!**

ஒரே வாரத்திலே உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!
[கரும் புள்ளிகள், பருக்கள், பழைய அடையாளங்கள், தழும்புகள், கருத்திட்டுக்கள் நீங்குவதற்கான சிகிச்சை]

☆ உங்கள் முகத்தை அழகாக்கும் இயற்கை மூலிகை பவுடர்கள்
☆ உடற்பருமன் கூட்டுதல், குறைதல், இடுப்பு, கை, கால் வயிறு தசைகள் குறைதல்
☆ முகப்பொலிவு, அழகு சிகிச்சைகள்!!
☆ முடி உதிர்வு, பொடுகு, இளநரை சிகிச்சைகள்

**உடற்பருமன் குறைப்பதற்குத் தேவையான உணவுகளும் வழங்கப்படும்**

மேலும் பல தனித்துவமிக்க சிகிச்சை முறைகள்
**முற்பதிவு இலவசம்!!!**
**அழையுங்கள்** 0774011129

SANEYA HERBAL CARE
262, செம்மணி வீதி, நாயன்மார் கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.
" We Care Always "

# NALRAVI

# SPOKEN ENGLISH

பயிற்சி நெறியைப் பற்றி:

- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

**ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்**

யாருக்காக:

- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:

- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்




**NALBON**
INSTITUTE OF ENGLISH STUDIES
*We are born for your bond*

Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004

Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.